



யா/நாவற்குழி மகா வித்தி





# வணிக தீபம்

## யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

199௨ ஜனவரி

MZ148

யாழ்/நாவற்குழி மகா வித்தியாலயம்.

நாவற்குழி

கைதடி.

*****

## உப அதிபரின் ****. ஆசியுரை.

நாவற்குழி மகா வித்தியாலய கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் வணிக மன்றம் அமைத்து தம் அறிவாற்றலையும் தொழிற்திறனையும் வெளிப்படுத்தும் நேக்கமாக வணிக தீபம் என்னும் சஞ்சிகையை வெளியிட்டு இருப்பது வர்த்தகக் கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரிவதோடு வர்த்தக மாணவர்களது அறிவாற்றல்களை மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

வர்த்தக மன்றத்தின் பணியானது கல்வியுலகிற்கும் சமுதாயத்திற்கும் ஆற்றுகின்ற சிறப்புப் பணியாகும்.

வணிக தீபம் என்னும் சஞ்சிகையை உருவாக்கிய வர்த்தக மாணவர் மன்றத்திற்கும். வர்த்தக ஆசிரியர் திரு. இ. பசுபதீஸ்வரனிற்கும் என் நல்லாசிகள் உரித்தாகுக.

க* மயில்வாகனம்.

[illegible]

வணிக மன்றப் பொறுப்பாசிரியரின் கருத்துரைகள்,

---

எமது நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஒரு வணிக மாணவர் மன்றம் உருவாக்கப்பட வேண்டும் என்ற நீண்டகால கனவு ஒரு நிறைவேற்றப் பட்டுள்ளது. இதனை உருவாக்க எமக்கு ஊக்கமும், ஆக்கமும் தந்த அதிபர் அவர்கட்கு வணிக மாணவர்கள் சார்பில் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இவ்வணிக மன்றம் உண்மையிலேயே சிறந்த முறையில் தொழிற்பட வேண்டும். ஏனைய மன்றங்களைவிட திறமையான முறையில் மாணவர்களுக்கு பயன்பட வேண்டும் என்ற நோக்கத்திற்கமைவாக இம்மன்றம் மாதாமாதம் சஞ்சிகை ஒன்றை வெளியிட தீர்மானித்திருப்பது வரவேற்கப்பட வேண்டியதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும். இவ்வாறு வெளியிடவிருக்கும் சஞ்சிகைக்கு "வணிக தீபம்" என்ற பெயர் சூட்டப்பட்டமை மிகவும் பொருத்தமானதாகும். ஏனெனில் வணிகத்துறைக்கு ஒளியூட்டுவதாக இதனமையும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை. அத்துடன் இந்த சஞ்சிகை இவ்வளவு விரைவாக வெளிவருவதற்கு தமது ஆக்கங்களை அளித்த உதவிய எனது அன்பான வணிக மாணவருக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு இவ் வணிகதீபம் அணையாத தொடர்ந்த ஒளிவீச எண்ணை ஊற்றவேண்டியதும் நீங்கள் தாம் என்பதை மறக்காமல் மாதா மாதம் உங்கள் தரமான ஆக்கங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இவ் வணிக தீபம் என்ற சஞ்சிகை இவ்வளவு விரைவாக வெளிவருவதற்கு அயராது இரவு பகல் என்றில்லாது சேவை ஆற்றும் எமது மன்றப் பத்திராதிபரே முக்கிய காரணமாகும். இச்சஞ்சிகை வெளியிடப்பட வேண்டும். தரமானதாக அமைய வேண்டும் என்ற ஒருமாத காலமாக முயற்சி எடுத்ததன் காரணமாகவே இச் சஞ்சிகை இவ்வளவு விரைவாக தைத் திங்களில் வெளிவருகின்றது. எனவே எமது சஞ்சிகை இதழாசிரியருக்கு வணிக மாணவருடன் நானும் நன்றி செலுத்தவேண்டும்.

அத்துடன் எமது பாடசாலை வணிகமன்றம் தனது செயற்திட்டங்களை விரிவாக்க வேண்டியது மிக அவசியமாகின்றது. வணிகத்துறையை விருத்தி செய்வதற்காக வணிகத்துறையில் திறமைச்சித்தி அடைபவர்களை கௌரவித்தல் வணிக நடமாடும் நூலகத்தை ஆரம்பித்தல் கற்றலில் பின்னிற்பவர்களுக்கு குழு முறையில் கற்பித்தல் ~~[illegible]~~ போட்டிகள் நாடாத்துதல், போன்றவைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான எனது முழு ஆதரவும் உங்களுக்கு உண்டு. மேலும் திறமைமிக்கவர்கள் 1992ம் ஆண்டு செயற்குழுவில் காணப்படுகின்றார்கள் எனவே இவர்களின் தலைமைத்துவத்தில் இம்மன்றம் வெற்றிநடைபோடும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக இவ்வணிக தீபம் அச்சுருவில் வெளிவருவதற்கு தனது முழு நேரத்தையும் செலவுசெய்த எமது 1991 ஆண்டு 11ம் ஆண்டு வணிகமன்ற உறுப்பினர் ஜீவபாலனுக்கு இம்மன்றம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

– நன்றி –

.....................

(இ. பசுபதீஸ்வரன்)
வர்த்தக ஆசிரியர்,
நாவற்குழி மகா வித்தியாலயம்

## வணிக மன்றத் தலைவரின் கருத்துரை

யாழ் நாவற்குழி மகா வித்தியாலய வரலாற்றில் வணிக மன்றம் அமைக்கப்பட்டு குறுகிய காலத்தில் வணிக தீபம் என்ற சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம் மன்றம் 27.9.91 ல் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் தனது செயற்பாடுகளை விரைவாகவே செய்தது. அவற்றுள் முக்கியமானதாக குறுவினாவிடை போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவற்றில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கியமையும் ஆண்டிறுதியில் வர்த்தகத் துறையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இவ்வாண்டு தன் மாதா மாதம் வணிக தீபம் ஒளிவிட உள்ளது என்பது இம் மன்றத்தின் ஒரு பெரிய வெற்றியாகும். இதற்கு உதவிச் செய்து தந்த கௌரவ அதிபர், உப அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோருக்கு எனது முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இச் சஞ்சிகைக்கு வேண்டிய ஆக்கங்களை தந்தவர்களுக்கும் இதனை புத்தக வடிவமாக்கியவர்களுக்கும் அட்டைப் படம் வரைந்தவர்களுக்கும் எனது நன்றிகள்.

மேலும் இவ்வாறான உதவிகளை தொடர்ந்து அளிப்பதன் மூலம் வணிகத் தீபம் அணையாமல் பார்க்க வேண்டியது வணிக மாணவர்களது கடமையாகும்.

.....................

( தி. சுகந்தினி )

வணிக மன்றத் தலைவர்.

## இதழாசிரியரின் பேனாவிலிருந்து

வளர்ச்சியடைந்து வரும் யாழ் நாவற்குழி மகா வித்தியாலயம் தனது வளர்ச்சியின் ஒரு படி முன்னேற்றமாக 27.09.1991 அன்று வணிக மன்றம் ஒன்றை ஆரம்பித்தது. "இவ் வணிக மன்றம் உறங்கும் மன்றமாக இல்லாமல் மாணவரின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் மன்றமாகத் திகழ வேண்டும்" என்பதற்காக "வணிக தீபம்" என்னும் சஞ்சிகையை மாதா மாதம் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது செயற்பாடாக வணிக தீபத்தின் முதலாவது இதழை 1992 ஜனவரியில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

"வணிக தீபம்" என்னும் சஞ்சிகையை வெளியிடுவதற்கு அனுமதியும் ஆதரவும் தந்த அதிபர் அவர்கட்கும் வணிக தீபம் தரமான ஒரு சஞ்சிகையாக வெளிவர வேண்டும் என்பதற்காகவும் மாணவர்கள் அறிவைப் பெற்று சிறப்படைய வேண்டும் என்பதற்காகவும் தனது கடமைகளை விட்டுவிட்டு எமக்காகப் பாடுபட்டு கொண்டிருக்கும் மன்றப் பொறுப்பாசிரியர் அவர்கட்கும் மன்றத்தின் சார்பில் முதற்கண் நன்றிகள் உரித்தாகுக . மற்றும் இதழிற்கு ஆசிச்செய்தியை வழங்கிய அதிபர், உப அதிபர் ஆகியோருக்கும் நன்றிகள். அடுத்து தமது ஆக்கங்களைத் தந்துதவிய மாணவ மாணவியர்கட்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் நாம் ஏற்றி வைக்கும் வணிகத் தீபம் அணையாமல் என்றென்றும் சிறப்புற்று மிளிரவும் பலபல பதிப்புக்கள் பெற்று சிறக்கவும் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் என்றென்றும் ஆக்கமும், ஊக்கமும் தந்துதவ வேண்டும் என்று வணிக தீபத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

– நன்றி –

– இதழாசிரியர் –

## வர்த்தகம் 1992 ஜனவரி
******


01. வர்த்தகம் - ஆண்டு 10 செல்வி அமிர்வதனா அமிர்தலிங்கம் 1
02. வியாபாரம் - ஆண்டு 10 செல்வி சந்திரறஜனி நடராஜா 2-3
03. விநியோக முறைகள் - ஆண்டு 11 செல்வி ஸ்ரீநந்தினி தியாகராஜா 4-5
04. விற்பனை மேம்படுத்தல் - ஆண்டு 11 செல்வி தமிழ்ச்செல்வி சச்சிதானந்தமூர்த்தி 6-7
05. சர்வதேச வியாபாரம் - ஆண்டு 11 செல்வி இரத்தினாம்பாள் ஆனந்தசுந்தரம் 9-11
06. பணத்தின் தோற்றம் - ஆண்டு 11 செல்வி கவிதா கந்தசாமி 12-13
07. பணம் - ஆண்டு 11 செல்வன் சுதாகரன் இராசையா 7-8
08. வங்கிகள் - ஆண்டு 11 செல்வி இரத்தினாம்பாள் ஆனந்தசுந்தரம் 14-20
09. போக்குவரத்துச் சேவை - ஆண்டு 10 செல்வி மதனா 21-22
10. இலங்கையின் வர்த்தகத்தில் போக்குவரத்தின் முக்கியத்துவம் - ஆண்டு 11 செல்வி மதிவதனா சுந்தரலிங்கம் 23

11. களஞ்சியப்படுத்தல் - ஆண்டு 10 செல்விசுஜித்தா கணேஸ்வரன் 26-27
12 தொடர்பாடல் - ஆண்டு 11 செல்வி இரத்தினாம்பாள் ஆனந்தசுந்தரம் 28-29
13. விளம்பரம் - ஆண்டு 11 செல்வி சுகந்தினி திருச்செந்தூர் 30-31
14. வர்த்தகத்தில் நவீன தொடர்பாடல்களின் பங்கு - ஆண்டு 11 செல்வி கமலேஸ்வரி மார்க்கண்டு 32
15. வரவு செலவுத் திட்டம் - ஆண்டு 11 செல்வி அஜசா சந்திரசேகரம் 33-35
16. யாழ் குடாநாட்டில் பொருளாதார விருத்திக்குரிய ஆலோசனைகள் - ஆண்டு 11 செல்வி இரத்தினாம்பாள் ஆனந்தசுந்தரம் 36-37
17. கம்பனி - ஆண்டு 11 செல்வி சுகந்தினி திருச்செந்தூர் 38-40
18. களஞ்சியப்படுத்தல் - ஆண்டு 11 செல்வி விநோதினி விநாயகமூர்த்தி 24-25


## கணக்கியல் 1992 ஜனவரி
******


01. கொள்வல் கொடுத்தல்களை பதிவு செய்யவேண்டியதன் அவசியம் 41-44 - ஆண்டு 10 செல்வி மதிவதனா விநாயகமூர்த்தி
02 பேரேடு - ஆண்டு 10 செல்வி மைதிலி பரஞ்சோதி 45
03. காசேடு - ஆண்டு 10 செல்வி ஜானகி சச்சிதானந்தமூர்த்தி 46-48
04. வழுக்களைத் திருத்தல் - ஆண்டு 11 செல்வன் சுதாகரன் இராசையா 49-54
05. தினசேரிகள் - ஆண்டு 11 செல்வி இராஜசுகிர்தா சந்திரராஜா 55-59
06. வருமான செலவினக் கணக்கு - ஆண்டு 11 விநோதினி விநாயகமூர்த்தி 60

# வர்த்தகம்

வர்த்தகம் என்பது வியாபாரத்தையும் துணைச்சேவைகளாகிய வங்கிச் சேவை, போக்குவரத்துச் சேவை களஞ்சியப்படுத்தல் தொடர்பாடல், காப்புறுதி, விளம்பரம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

இவ்வர்த்தகத்தில் வியாபாரத்தைக் கொண்டு நடத்துவதற்கு பணம் தொழில் படுகின்றது. வர்த்தக ஊடகம் எனவும் பணத்தினை அழைப்பர். அத்துடன் இது கொள்வோருக்கும், கொடுப்போருக்கும் இடையில் தரகர் ஒருவரைப் போன்று தொழில் படுகின்றது. பணத்தை தேர்ந்தெடுத்தற்கான காரணம் என்னவெனில் இது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் நீண்ட வாழ்வுடையதும் சிறிய சிறிய அலகுகளாகப் பிரிபடக்கூடியதும், இலகுவில் இனங்கண்டு கொள்ளக் கூடியதாகவும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் விளங்குகிறது.

பணம் மட்டுமன்றி, ஆவணங்கள் காசோலைகள் என்பனவும் பெறுமானங்களை அளவிடுவதற்குப் பயன் படுகின்றது. ஆனால் இவை பெருமளவில் மக்கள் புழக்கத்தில் பயன்படுவதில்லை. இக்காசோலைகளை வைப்புச் செய்வதற்கு என்று வங்கிகள் இருக்கின்றன. அவையாவன வணிக வங்கி, [redacted], கிராமிய வங்கி, அபிவிருத்திவங்கி முதலியனவாகும். வர்த்தக வங்கிகள் முழுவர்த்தக நடவடிக்கைகளுக்கும் உதவி புரிகின்றது. இது வியாபாரத்திற்கு ஆலோசனைகளை வழங்குவதுடன் வைப்புக்களையும் ஏற்றுக்கொள்கிறது, இந்த வகையில் வர்த்தக வங்கி வர்த்தகத்திற்கு பெரிதும் உதவுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகளைப் பயன்படுத்தி மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம், ஏற்றுமதி வியாபாரம், இறக்குமதி வியாபாரம் என்பனவும் நடைபெறுகின்றன. இதன் மூலம் இலாபம், பெறப்படுகின்றது. இதன்போது ஏற்றுமதி வியாபாரத்திற்கும் இறக்குமதிவியாபாரத்திற்கும் இடையில் பெறப்படும் மீதி வர்த்தக மீதி எனவும் அழைக்கப்படுகின்றது.

இவ்வர்த்தகத்தினை கொண்டு நடத்துவதற்கு போக்குவரத்து பெரிதும் உதவுகிறது. இவையும் வேலை நோக்கம் கொண்ட வர்த்தகமே இப்போக்குவரத்து வர்த்தகப் பொருட்களின் தன்மைக்கேற்ப வேறுபடுகின்றது. எனெனில் சில பொருட்கள் விமானத்தில் வேகமாகக்கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் பாதுகாப்பாகவும் கொண்டு செல்ல வேண்டியிருக்கும் உதாரணமாக மருந்து வகைகளைச் கொள்ளலாம். இது போன்ற பிரதானமான பொருட்களை தெருப்போக்குவரத்துகளிலும், நீர்வழிப்போக்குவரத்துகளிலும் வசதிக்கேற்பவும் தூரத்திற்கேற்பவும் கொண்டு செல்லலாம். இதில் முக்கியமாக வேகமும், பாதுகாப்பும், தூரமும் கவனத்தில்கொள்ளப்பட வேண்டியவையாகும்.

அடுத்து வர்த்தகப் பொருட்கள் பற்றிய செய்திகளைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கோ, நுகர்வோருக்கு தெரியப்படுத்துவதற்கோ, அமைப்புக்களுக்கு அறிவிப்பதற்கோ தொடர்பாடல் முறை அவசியமானது. இத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு தொலைபேசி, தந்தி, கடல்வழித்தந்திச் சேவை போன்ற பல தொடர்புசாதனங்கள் பயன்படுகின்றன. அத்துடன் மக்களுக்கு நுகர்வுப் பொருட்கள் பற்றி அறிவிப்பதற்கு, விளம்பரங்கள் உதவுகின்றன. இவ்வாறான விளம்பரங்களுக்கு ஊடகங்களாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் கண்காட்சிகள் என்பனவும் உதவுகின்றன.

அடுத்து வர்த்தகப் பொருட்கள் களஞ்சியப்படுத்தலும் மிகவும் முக்கியமான தொன்றாகும். இவையும் வர்த்தகத்தினை பாதிக்காமலும் அளவிற்கு அதிகமான பொருட்களை களஞ்சியம் செய்யாமல் வர்த்தகத்தை ஒரேசீராகக் கொண்டு செல்ல உதவுகிறது. இதுவும் மக்களிடையே பொருட்களின் தரத்தை உயர்த்தவும், தட்டுப்பாட்டினை நீக்கவும் மக்களிடையே நன்மதிப்பினை பெற்றுக் கொள்ளவும் உதவுவதுடன் வர்த்தகத்திற்கு பாரிய உதவியையும் வழங்குகிறது.

இவ்வாறு வர்த்தகத்தைப்பார்க்கும் பொழுது இதனை நடத்துவதற்கு முற்சேவைகள் துணைச் சேவைகள் என இரு வகைகளாக வகுக்கப்படுவதை பார்க்கலாம். அத்துடன் வர்த்தகம் வியாபாரங்கள் மட்டுமன்றி இவ்வாறான இலாபம் எதிர்பார்க்கும் சேவைகள் இலாபத்தை எதிர்பார்க்காத நிலைங்கள் போன்ற சேவைநோக்கம் கொண்ட நிறுவனங்களும் வர்த்தகம் என்னும் பதத்தினுள்ளேயே அடங்குகின்றன.

" அ - அமிர்தவதனா . "

S. matheesan

# வி யா பா ர ம்
**************

காலம் பொன்னானது சுழலும் இவ்வுலகில் ஆரம்ப கர்த்தாவே வியாபாரம் ஆகும். வளமுள்ள நாடாய் வளர்ந்ததும் இவ் வியாபாரமாகும். அதாவது உலகம் அறியாத கிராமத்து மக்களாக வாழ்ந்து வந்த இலங்கை வாழ் மக்கள் எவ்வாறு போக்குவரத்து வசதி, மாடமாளிகைகள் , பிற நாட்டுத் தொடர்புகள் என்றெல்லாம் எண்ணில் அடங்காத வசதிகளோடு வாழ்ந்து வருகின்றனர். இதற்குக் காரணம் யாது ...?

உண்மையிலே இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் , ஆங்கிலேயர் எனும் 3 வகை அந்நியர்கள் ஆட்சிக்குட்பட்ட இவர்கள் வியாபார நோக்கோடு இலங்கைக்கு வந்து இலங்கையை இவ்வளவு சிறப்புடன் உயர்த்தி விட்டனர். "பறவையைக் கண்டான். விமானம் படைத்தான் எதிரொலி கேட்டு வானொலிப் படைத்தாம்" ஆம்! இந்தப் பாடல்கள் இப்போதும் என் நெஞ்சில் எதிரொலிக்கின்றது.

15ம் நூற்றாண்டின் பின் மறுமலர் கிராமம் என்றும் அழைத்தனர். பின் உணவுப் பொருட்கள் துணி வகைகள் புத்தகங்கள் வானொலிப்பெட்டி போன்ற பல்வேறுப் பொருட்களும் எமக்குத் தேவைப்படும் போது விற்பதற்காக வியாபாரி தம்மிடம் வந்துள்ளான்.

ஆரம்பத்தில் ஒரு பிரதேசத்தில் மட்டும் நடைபெற்ற பொருட்பரிமாற்றம் வியாபாரத்தின் விருத்தியினால் பல பிரதேசங்களுக்கும் பரவியது. வியாபாரி கிராமங்களில் நகரங்களில் மட்டுமன்றி பிறநாடுகளுடனும் வியாபாரம் செய்வதில் ஒரு பரந்த சந்தையமைப்பு தோன்றியது. வியாபாரம் விருத்தியடைந்தமை நாடுகளிடையே தொடர்புகள் அதிகரிப்பதற்கு காரணமாகும்.

உங்கள் வீட்டில் காணப்படும் தையல் இயந்திரம் இங்கிலாந்திலும், கடிகாரம் சுவிற்லாந்திலும், வானொலிப்பெட்டி யப்பானிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டவை ஆகவிருக்கலாம். இதே பெயரில் ஒவ்வொரு பொருட்களையும் ஆராய்ந்து பார்த்தால் அது எமது நாட்டு ஏதாவது ஒருபகுதியில் அல்லது வெளிநாடு ஒன்றில் உற்பத்தி செய்யப்பட்டதாக காணலாம். இவ்வாறு நாம் இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு வியாபாரமும் சந்தைகளும் விருத்தியடைந்தமையேகாரணம் ஆகும்.

மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருட்களை குறைவின்றிப் பெற்றுக் கொள்ளவும் வழிவகுத்தது. உற்பத்தியாளன் தமது உற்பத்திப் பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விநியோகித்தல் கஸ்டமாக இருப்பதால் வியாபாரியின் சேவை இன்றியமையாததாகும். நமது நாட்டின் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் பிற நாடுகளில் உற்பத்தி செய்யபபட்ட பொருட்களையும் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைக்கும் வியாபாரி அவை நுகர்வோருக்குத் தேவைப்படும்போது தேவைப்படுமளவில் தேவையானவிடத்தில் வைத்து விநியோகிக்கின்றான் .

உள்நாட்டில் நடைபெறும் வாங்கல், விற்றல் தொடர்பான பணிகள் உள்நாட்டு வியாபாரம் எனவும், வெளிநாடுகளிலிருந்து பொருட்களை வாங்குவதும் வெளிநாட்டுக்கு பொருட்களை விற்பனை செய்வதும் தொடர்பான நடவடிக்கைகள் வெளிநாட்டு வியாபாரம் என்றும் வர்த்தகம் இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. மொத்த வியாபாரம் சில்லறை வியாபாரம் என இரண்டாக வகுக்கப்படுகின்றது. இப் பொருட்கள் சேவைகளை மொத்தமாக கொள்வனவு செய்து சேர்த்து வைத்து சில்லறை வியாபாரிகளுக்கு விற்றல் மொத்த வியாபாரம் ஆகும். சில்லறை வியாபாரம் என்பது பொருட்களை விற்பனை செய்வதாகும். இதன்படி மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கும் நடுவராக சில்லறை வியாபரிரிகள் காணப்படுகின்றனர் .

வெளிநாட்டு வியாபாரம் ஏற்றுமதி வியாபாரம் இறக்குமதி வியாபாரம் என இருவகைப்படும். வியாபாரத்திற்காக இந்நாட்டிற்கு உணவுப் பொருட்கள் மருந்து வகைகள் துணி வகைகள் இயந்திர சாதனங்கள் மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றை வெளிநாடுகளிலிருந்து தருவித்தல் இறக்குமதி வியாபாரம் ஆகும்.

தேயிலை தென்னை, றப்பர், மாணிக்கல், கனிப் பொருட்கள் ஆகியவற்றை வியாபாரத்திற்காக வெளிநாட்டுக்கு அனுப்புவது ஏற்றுமதி வியாபாரம் எனப்படும்.

- ந. சந்திரறஜனி -

# விநியோக முறைகள்

*******************

ஒரு சாதாரண மனிதன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பல்வேறு பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஒருவன் நாளாந்தம் உண்ணும் உணவு கூட சில அந்நிய பிரதேசத்தில் விளைவிக்கப்பட்டவை. மலைநாட்டில் உற்பத்தியாகும் தேயிலையை அருந்துவதற்கு கியூபாவில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி தேவைப்படுகின்றது. கட்டில், கதிரை, மேசை போன்ற மரத் தளபாடங்கள் அயற் பிரதேசங்களில் அல்லது தூரப் பிரதேசங்களில் செய்யப்பட்டவை ஆகும். இவ்வாறு ஆராய்ந்து பார்க்கும் போது ஒருவன் பாவிக்கின்ற பொருட்கள் சில அவனது நாட்டின் அயற் பிரதேசங்களில் அல்லது தூரப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். ஏனையவை உலகின் ஏனைய பகுதிகளில் இருந்து உற்பத்திசெய்யப்பட்டவையாகும். ஒவ்வொரு பிரதேசத்தினதும் அமைவிடம், காலநிலை, வானிலை வேறுபாடுகள் மனிதனின் திறமை, தகுதி, விருப்பு, வெறுப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்த பொருட்களை தேவையானபோது நுகர்வோருக்கு விநியோகிப்பத-ற்காக உற்பத்தியாளன் அல்லது வேறொருவர் சேர்த்து வைக்க வேண்டி ஏற்படுகின்றது. இந்தப் பணிக்கு வியாபாரிகள் முன்வருகின்றனர். அவன் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையிலும் ஒரு நடுவராகக் கடமையாற்றுகின்றான். பொருட்களை விநியோகிப்பதற்கான பலமுறைகள் இன்று சந்தையில் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(1) நேரடிவிற்பனை அதாவது உற்பத்தியாளர் நுகர்வோருக்கு விற்றல்
(2) உற்பத்தியாளர் சில்லறை வியாபாரிகள் மூலம் நுகர்வோருக்குவிற்றல்
(3) உற்பத்தியாளர் சில்லறை வியாபாரிகள் மூலமும், மொத்த வியாபாரிகள் மூலமும் நுகர்வோருக்கு விற்றல்.

உற்பத்தியாளர் நுகர்வோருக்கு நேரடியாக பொருட்களை விற்றல் நேரடி விற்பனை எனப்படும். இது சிறியளவு உற்பத்திகளைமட்டுமன்றி பேரளவு உற்பத்திகளிலும் கூட ஓரளவு நடைபெறுகின்றது. இலங்கை மட்பாண்டக்கூட்டுத்தாபனம், இலங்கை தோற்பொருட் கூட்டுத்தாபனம் (தல்றெக்ஸ், வெடக்ஸ் நிறுவனங்கள்) இலங்கை உலோகப் பொருட் கூட்டுத்தாபனம் போன்றன பெயரளவு விற்பனையில் ஈடுபடும். அரசகூட்டுத் தாபனங்கள் தமது உற்பத்திகளை நேரடியாக பாவனையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு சில்லறை வர்த்தக நிலையங்களை ஏற்படுத்தியுள்ளன.

சில உற்பத்தி நிறுவனங்கள் நடமாடும் வாகனங்கள் மூலம் பிரதான நகர்களிலும் கிராமப்புறங்களிலும் பொது மக்கள் கூடும் இடங்களுக்குச் சென்று பொருட்களை விற்பனை செய்கின்றன. அதிக விலையுள்ளதும் உபயோகிப்பதற்கு விசேட தொழில்நுட்ப அறிவு தேவைப்படும். நீடித்துழைப்பதுமான சில கைத்தொழில் பொருட்கள் இந்த நேரடி விற்பனைமுறைமூலம் விற்பனையாகின்றன. நுகர்வோரின் அன்றாட உபயோகப் பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அவற்றை நடுவர்களின் உதவியின்றி நேரடியாக நுகர்வோருக்கு விநியோகித்தல் முடியாத காரியம். ஆகையால் இவற்றை சில்லறை வியாபாரி எனும் நடுவர் மூலமாக நுகர்வோருக்கு விற்பனை செய்தல் உற்பத்தியாளரின் வேலையை இலகு ஆக்கும். இம்முறைமூலம் உற்பத்தியாளருக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் சிறியளவு உற்பத்திகளை நடமாடும் வாகனங்கள் மூலம் நுகர்வோருக்கு விற்கப்படுகின்றன. இவ்வாறு விற்கப்படும் பொருள் சில உணவுப்பொருட்கள் சில்லறைச் சாமான்கள் உடை, சவர்க்காரம் போன்றன. சில்லறை வியாபாரி உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே நடுவராக நின்று பொருட்களை விநியோகம் செய்வதன் மூலம் அதிக சேவை செய்கின்றான்.

நுகர்வோருக்கும் சில்லறைவியாபாரிகளுக்கும் பொருட்களைவிநியோகித்தல் எல்லா உற்பத்தியாளர்களாலும் செய்யக்கூடிய காரியமல்ல. அவ்வாறு செய்ய முற்படும்போது அவர்களது பணிகளை செய்துகொள்ளமுடியாத சிக்கல் ஏற்படும். தனியான ஒரு விநியோக பகுதி ஏற்படுத்துதல் அதற்காக மேலதிக தொழிலாளர்களை ஈடுபடுத்தல் போக்குவரத்துகளஞ்சிய வசதிகளை ஏற்படுத்தல் போன்வற்றுக்காக அதிகமான செலவுகளை செய்யவேண்டி ஏற்படும். இவ்வாறான மேலதிக வேலைகளால் உற்பத்தியாளரின் கவனம் பிரதானமாக உற்பத்தி நடவடிக்கைகளில் செலுத்தப்படு -வதற்கு தடைகள் ஏற்படலாம். இதனால் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை அதற்கென விசேட திறமைபடைத்தவர் ஒருவரிடத்தில் விடுவதை பெரும்பாலான உற்பத்தியாளர்கள் விரும்புகின்றனர். இந்த நடுவர் மொத்த வியாபாரி என்றழைக்கப்படுகின்றார். பொருட்களை விநியோகிப்பதில் உற்பத்தி ஆளருக்கும், மொத்த வியாபாரிக்கும் சில்லறைவியாபாரிக்கும் மட்டுமன்றி நுகர்வோருக்குதவுக் கூடிய இன்னொரு நடுவர்குழு வர்த்தக உலகில் உள்ளார். அவர்கள் பிரதிநிதிகள் என்றழைக்கப்படுகின்றார்.

இன்று எமது நாட்டின் வியாபாரத்துறையில் உள்ள பல்வேறுநாடுகளைப் பற்றி நோக்கும் போது மேற்கூறிய விநியோகமுறை தெளிவாக விளக்கப்படுகின்றது.

— தி. ஸ்ரீநந்தினி —

# விற்பனையை மேம்படுத்தல்

******* *********

நாடோடியாக அலைந்து திரிந்து வேட்டையாடி வாழ்ந்த மக்கள் நிலையாகஓர் இடத்தில் தங்கியிருந்து தமது சுயதேவையினைப் பூர்த்தி செய்தனர். பின்னர் பண்டமாற்று பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆரம்ப நடவடிக்கைகள் மக்களின் சுயதேவைகளைப் பூர்த்தியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தமையால் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

ஆனால் 18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி காரணமாக உற்பத்தி வர்த்தக நடவடிக்கைகளில் தனியார் ஈடுபட்டமையால் இலாப நோக்கம் கொண்டு செயற்பட ஆரம்பித்தனர். இதனால் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலமே தமது இலாப நோக்கத்தை நிறைவேற்ற ஆரம்பித்தனர்.

விற்பனை மேம்படுத்தல் எனும் போது நிறுவனத்தால் விற்பனைசெய்யப்படுகின்றபொருட்கள் சேவைகளை வாடிக்கையாளர் குறிய காலத்தில் அதிகளவில் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப் படும் சகல நடவடிக்கைகளையும்உள்ளடக்கியதானசெயற்பாட்டையே குறிக்கிறது. நுகர்வோர் வாங்கும் அளவையும்து அதிகரிப்பதன் மூலம் ஒரு பொருளினுடைய விற்பனையினை அதிகரித்துக் கொள்ள முடியும். நுகர்வோர்வாங்கும் அளவினை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையினை நுகர்வோர் மேம்படுத்தல் எனவும் வியாபாரிகள் வாங்கும் அளவினை அதிகரிப்பதற்காகமேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை வியாபார மேம்படுத்தல் எனவும் அழைப்பர். நுகர்வோர் மேம்படுத்தலும் வியாபார மேம்படுத்தலும் சேர்ந்தே விற்பனை மேம்படுத்தலாகும். இவ்விற்பனை மேம்படுத்தல் பின்வரும் முறைகளில்மேற்கொள்ளப்படுகிறது.

1. மலிவு விற்பனை
2. அன்பளிப்புப் பொருட்களை [redacted] வழங்குதல்
3. போட்டிகளை நடத்தல்
4. இலவச மாதிரிகளை விநியோகித்தல்
5. வெற்றியாளருக்குக்கழிவு வழங்குதல்
6. இருபொருட்களை ஒன்றாக இணைத்து விற்றல்
7. பொருட்காட்சிகள் நடாத்துதல்

விற்பனை மேம்படுத்தலுக்கு காரணமாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. விற்கப்படாத இருப்புக்களை உடனடியாக விற்பனை செய்யும் பொருட்டு விற்பனை மேம்படுத்தல்மேற்கொள்ளப்படுகிறது.
2. ஆறுதலாக நகரும் பொருட்களை விரைவாக விற்பனை செய்யும் பொருட்டு விற்பனை மேம்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.
3. சிலவகையான பொருட்கள் குறிப்பிட்ட சில காலங்களில் விற்பனை கூடுதலாகவும் குறிப்பிட்ட காலங்களில் விற்பனை குறைந்தும் காணப்படும். இவ்விற்பனை குறைவான காலங்களில் அதன் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு விற்பனை மேம்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

விற்பனை மேம்படுத்தலால் உற்பத்தியாளரும் பின்வரும் நன்மைகளை அனுபவிக்கக் கூடியதாயிருக்கிறது. அவையாவன:-

விற்பனை மேம்படுத்தலூடாகவே சில தாபனங்கள் உற்பத்திப்பொருட்களை நுகர்வோருக்கு அறிமுகப்படுத்தி விற்பனையைஅதிகரிக்கலாம். தரம் குறைந்த பொருட்களையும் போட்டிகள், இரு பொருட்களை இணைத்து விற்றல் முறைகளினால் விற்பனை செய்யக்கூடியதாயிருக்கும். இவ்விற்பனை மேம்படுத்தலால் விற்பனை அதிகரிக்க கேள்வி கூடுவதனால் தாபனங்கள் உற்பத்தியை அதிகரிக்கும். அதிக உற்பத்தியின் விளைவால் சராசரி உற்பத்தி செலவினம் குறைவதனால் இலாபம் பெறக்கூடியதாயிருக்கும்.

இவ்விற்பனை மேம்படுத்தல் முறைகளால் நுகர்வோர் பின்வரும் நன்மைகளை அனுபவிக்கலாம்.

சில தாபனங்கள் மாதிரி வழங்கல் முறைகளை கைக்கொள்வதனால் நுகர்வோரை கவரத் தரமான பொருட்களை உற்பத்தி செய்வதுடன் அதை இலவசமாக நுகரவும் வாய்ப்பேற்கிறது. சில சந்தர்ப்பங்களில் விலைகுறைப்பு நடவடிக்கையைமேற்கொள்வதனால் நுகர்வோர் குறைந்த செலவில் பொருட்களை கொள்வனவு செய்யலாம். போட்டிகளை நடாத்துவதனால் வெற்றி பெறுவோர் பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனை மேம்படுத்தல் மூலம் சில தீமைகளையும் எதிர் நோக்கவேண்டியுள்ளது. இரு பொருட்களை இணைத்து வழங்கும் போது சிலவேளைகளில் தரம் குறைந்த பொருளும் இணைக்கப்படலாம். போட்டிகளில் இனமத பாரபட்சம் காட்டப்படலாம். விற்கப்படாத இருப்புகளும் விற்பனை செய்யப்படுவதனால் பாவனைக்குகந்ததாக (முழுமையாக) இருக்கமாட்டாது.

இவ்விற்பனை மேம்படுத்தலானது வாழ்க்கைத் தரத்தில் பின்வரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

நுகர்வோர் அதிகமான பொருட்களை அறிவதனால் அவற்றை கொள்வனவு செய்ய கூடுதலான வருமானத்தை உழைப்பதில் ஆர்வம் காட்டுவர். அதனால் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடையும். அடுத்து விற்பனை அதிகரிப்பதனால் சராசரி உற்பத்தி செலவினம் குறைந்து பொருட்களின் விலை குறைவடையும். இதனால் வாழ்க்கைச் செலவு குறைவடைந்து வாழ்க்கைத்தரம் ~~குறைவடைந்து~~ உயர்வடையும்.

மறுபக்கத்தில் இவ்விற்பனை மேம்படுத்தலுக்கு ஏற்படும் செலவுகள் பொருட்க-
-ளின் விலைகளுடன் சேர்க்கப்பட்டால் பொருட்களின் விலை உயர்வடைந்து வாழ்க்கைச் செலவு (
உயர்வடைவதால் வாழ்க்கைத்தரத்தில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். அதேபோல் நுக-
-ர்வு ஊக்குவிக்கப்பட்ட கொள்வனவு அதிகரிப்பதனால் சேமிப்பு வீதம் குறைவடையும் அதனால்
வாழ்க்கைத்தரம் பாதிப்படையும்.

செல்வி-ச* தமிழ்ச்செல்வி
ஆண்டு * 11

## பணம்

***

பணம் என்பது பொருட்கள் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக கொள்வேருக்கும் கொடுப்போருக்கும் இடையில் நகர் போன்று செயல்படுவதும் அரச அதிகாரம் பொறுக் கொண்டதும் பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டதுமான ஒரு சட்ட இடமதியான ஊடகமே பணம் எனப்படும். இப்பணமானது நான்கு வகையாக வகுக்கப்படுகின்றது.

அவையாவன:-1. கேள்வி வைப்புப் பணம். அல்லது வங்கிப்பணம்.
2. சட்ட இடமதிப்பணம் அல்லது புளக்கத்தில் உள்ள பணம்
3. நிலையான வைப்புப் பணம்
4. ஆவணப்பணம்

புழக்கத்தில் உள்ள பணமானது பொது மக்களுக்கிடையில் கொடுப்பனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பணம் புழக்கத்தில் உள்ளபணம். எனப்படும். இதில் பண்டங்களில் சேவைகளையும் கொள்வனவு செய்யவும் கடன்களை இறுக்கவும் இவற்றைப் பாவிப்பதற்காக சட்டப்படி எல்லோருக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.
உதாரணம்-அரசாங்கத்தால் வெளியிடப்படும் தாள் நாணயங்களும் உலோகநாணயங்களுமாகும்.

கேள்வி வைப்புப்பணம் எப்து வணிக வங்கிகளில் வாடிக்கையாளரது நடைமுறைக்கணக்கில் உள்ளபணம் கேள்விவைப்புக்கள் அல்லதுவங்கிப்பணம் எனஅழைக்கப்படுகிறது. இதில் வாடிக்கையாளர் பணத்தை எடுக்கவிரும்பினால் காசோலை ஒன்றை வரைவதன் மூலம் கேள்விவைப்பிலுள்ளபணத்தை கேட்வுடனே பெற்றுக் கொள்ள முடிகிறது. இதனாலேயே இதற்கு கேள்வி வைப்புப்பணம் என அழைக்கப்படுகிறது. இவை நாணயம் நாணயதாள்கள் எப்வற்றைப்போல் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை காசோலைக்காக பணம் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் உண்டு. ஆகவே பல்வேறு வசதிகளை முடிடு பெரும்பாலான வியாபாரிகள் தற்காலத்தில் கொடுக்கல் வாங்கல்களுக்குப்பதிலாக காசோலைகளை அதிகமாகப் பயன்படுத்துகின்றர்.

வங்கியிலுள்ள நடைமுறை வைப்புக்கள் சேமிப்பு வைப்புக்கள் தவிர்ந்த ஏனைய பணத்தையே ஆ*ி நிலையான வைப்புகள் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் நேரடியாக இவற்றை ஈடுபடுத்த முடியாதிருப்பினும் குறுகிய அறிவித்தலுக்குப் பின்னர் இந்தக் கணக்குகளில் இருந்து, பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

சட்டபெறுமதியான பணத்திற்கானப்படும் திரவத்தன்மை அல்லது பணமாகக்கொள்ளும் தன்மை ஆவணப்பணத்தில் இல்லை. எனினும் இது வைத்திருப்பவரின் கொள்வனவு தகுதியை அறிந்து கொள்ளமுடியும். இதில் பரிகுதியச்சீட்டு திறைசேரி உண்டியல் தொகுதிக்கடன் சீட்டுக்கள் சேமிப்பு சான்றிதழ் போன்றவை இதில் அடங்கும். இந்தப்பணத்தில் சிறப்பான அம்சமாக பணத்திற்காக இவற்றை நேரடியாக கொடுக்கல் வாங்கல் செய்யாத நிலையிலுள்ளது. ஆவணப்பணத்தை பணமாக மாற்றும் போது கழிவு கொடுக்கவேண்டியுள்ளதால் அவற்றின் முகப்பெறுமதியை விட குறைவாகக் கொடுக்கவேண்டியுள்ளது.

பணமானது நான்குதொழிற்பாடுகளை ஆற்றுகிறது. அவை பின்வருமாறு -

(1) <u>பரிமாற்ற ஊடகமாக செயற்படுதல்</u>

பண்டமாற்று முறையில் மனிதன் எதிர்நோக்கிய சிக்கல்களே அவைப்பணப்புழக்கத்திற்கு நெறிப்படுத்தினஎனக் கூறலாம். பண்டங்களையும் சேவைகளையும் அளிப்போர் அதற்காகப் பணத்தை மாற்றாடகமாகப் பெற்றுக்கொள்கின்றனர். பணத்தைக்கொண்டே அவர் தேவையான பண்டங்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

2) பெறுமானங்களை அளக்கும் அளவு கோலாக தொழிற்படல்

பண்டங்களினதும் சேவைகளினதும் விலையை அளவிடும் போது அளவுகோலாக பணம் திகழ்கிறது. பெறுமதியை பணத்தால் வெளியிடும்போது அது விலை என விசேடமாக அழைக்கப்படுகிறது. இதற்கிணங்க ஒரு பண்டத்தினதோ சேவையினதோ விலையை வெளியிடலாம். இதற்கிணங்க முற்கால வழக்கிலிருந்து பணத்தினால் செய்யப்படாமலிருந்துவந்த கருமத்தினை தற்காலத்தில் உள்ள பணம் ஆற்றுகிறது.

(3) பெறுமானத் திரட்டாக தொழிற்படல்

மனிதன் தினமும் பெறும் வருமானத்தில் ஒரு பகுதியை எதிர் காலத் தேவைக்காகச் சேர்த்து வைக்கின்றான். சில பண்டங்களை சேகரித்து வைக்க முடியுமெனினும் சேவைகளை திரட்டி வைக்க முடியவில்லை. மேலும் பழுதடைந்தால், காலம் கடந்தால், இடவசதியின்மை போன்ற காரணத்தால் சேவைகளை திரட்டி வைக்க வழியில்லை. எனவே எதிர்கால தேவைகளை முன்னிட்டு பணத்தை சேகரித்துவைக்கிறான். இதனை இப்படி செய்வதனால் பணம் பழுதடைவதில்லை. இடவசதி தேவையில்லை. காலம்கடப்பதில்லை. எனவே பணம் ஒர் பெறுமானத்தின் திரட்டாக அமைந்துள்ளது

4) பிற்போடப்பட்ட கொடுப்பனவுக்கருவியாக தொழிற்படல்

இன்றாயடம் நடைபெறும்கொடுக்கல் வாங்கல்களுட் பெரும்பாலானவை எதிர்கால கொடுப்பனவைக் உறுதிசெய்வதாகும். இவ்வாறு கொடுக்கல் வாங்கலைப் பிற்போட்டுவைப்பது கடன்கொள்வனவாகும். இதனைப் போன்று பணத்தை பயன்படுத்த முடியும். இதனால் பிற்போடப்பட்ட கருவியாக தொழிற்படுகிறது.

மேலே கூறப்பட்ட தொழிற்பாடுகளை ஒரு சிறந்த பணத்தின் மூலம் வெற்றி கரமாக செய்து முடிக்கலாம். இவ்வாறு செய்வதற்கு பணம் பின்வரும் பண்புகளையும், கொண்டதாக அமைதல் வேண்டும்.

1) எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும் தன்மை இருத்தல்:- ஒரு நாட்டில் பழக்கத்தில் உள்ள பணஅலகு அந்நாட்டில் வசிக்கும்எல்லா மக்களும் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

2) இலகுவில் எடுத்துச் செல்ல முடிதல்:- எந்தப் பணத்தில் இருக்க வேண்டிய முக்கிய பண்பாக இது அமைந்துள்ளது. இது மட்டுமல்லாது பாரமற்ற தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும். இந்தப்பண்பு

3) நடுவாள்வு தன்மை கொண்டிருத்தல்:- இந்தப்பணங்களெல்லாம் நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டும். இந்தப்பண்பு பணம் பெறுமானத்திரட்டாக செயற்படும் முக்கியத்துவம் பெறுகிறது.

4) சிறிய அலகுகளாக இலகுவில் பிரிக்கக்கூடிய தன்மை இருத்தல்:- பெரிய தொகையாகவோ அல்லது சிறிய தொகையாகவோ எந்த அளவிலான பணத்தையும் பொறுமதியிற் கூடியதாகவும் குறைந்ததாகவும் பலஅலகுகளாக இலகுவில் பிரிக்கக்கூடியதன்மை இருத்தல்

5) பணம் அருமையான பொருளாக இருத்தல்:- பணமாக பழக்கத்தில் உள்ளபொருள் தாராளமாக கிடைக்கக் கூடாது அவ்வாறாயின் பணத்தின் பொறுமதி கணிசமானஅளவு குறைவடையும். இதனாலே ஒரு நாட்டில் உள்ள பணத்தில் நிரம்பி அந்த நாட்டில் உள்ள அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளது.

இந்தப் பண்புகளும் தொழிற்பாடுகளும் ஒரு பணத்திற்குஇருத்தல் வேண்டும் அப்போதுதான் அதை சிறந்த பணம் எனக்கொள்ள முடியும்.

# சர்வதேச வியாபாரம்

சர்வதேச வியாபாரம் எனப்படுவது உலக நாடுகளிடையே ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது பணப்பரிவர்த்தனை மூலமோ நடைபெறும் வியாபாரம் ஆகும். சர்வதேச வியாபாரத்தின் மூலம் மேலதிக பொருட்கள், சேவைகளை ஏற்றுமதி செய்தல், பற்றாக்குறையான பொருட்கள், சேவைகளை இறக்குமதி செய்தல் போன்ற நன்மைகள் ஏற்படுகின்றன. இரண்டு நாடுகளுக்கிடையில் ஒப்பந்த அடிப்படையில் நடைபெறும் வியாபாரம் இருபக்க வியாபாரம் எனவும், பல பல நாடுகளுக்கிடையே சர்வதேசசந்தை விலையினை அடிப்படையாகக் கொண்டு மேற் கொள்ளப்படும் வியாபாரம் பல்பக்க வியாபாரம் எனவும் அழைக்கப்படுகின்றது.

சர்வதேச வியாபாரம் ஏற்றுமதி, இறக்குமதி, மறுஏற்றுமதி என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது. ஏற்றுமதியானது 1) கட்புலனாகும் ஏற்மதி (தேயிலை, றப்பர்) 11) கட்புலனாகா ஏற்றுமதி (வெளிநாட்டு வேலை வாய்ப்பு) என மேலும் இரு பிரிவுகளாகின்றது. மத்திய வங்கியின் அறிக்கைப்படி இலங்கையின் ஏற்றுமதியானது விவசாய ஏற்றுமதி, கைத்தொழில் ஏற்றுமதி, கனிப்பொருள் ஏற்றுமதி, வகைப்படாத உற்பத்திகள் என பிரிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் பற்றிய தகவல்களைப் பெற்ற பின்னரே ஏற்றுமதி நடைமுறைகளில் ஈடுபடுகின்றார்கள். இது பற்றிய தகவல்களை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, வணிக வங்கிகள், வணிகத்திணைக்களம், வணிகக் கடிதங்கள், வெளிநாட்டு தூதுவர்கள், வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதி வர்த்தகக் கப்பல்துறை அமைச்சின் தகவல், சேகரிப்புமையம், சர்வதேச வியாபாரச் சஞ்சிகைகள் என்பவற்றின் உதவியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்றுமதி வியாபாரத்திலீடுபடும் ஒருவர் முதலில் விலைக்கூற்றினை வெளியிடல் வேண்டும். அதாவது இறக்குமதியாளனங்கள் அனுப்பப்பட்ட விலை விசாரணைக் கடிதத்திற்கு பதிலாக பொருட்களின் விலை, போக்குவரத்து செலவு, கப்பற்கட்டணம், விநியோக நிபந்தனைகள் ஆகியவற்றை உள்ளக்கியதாக ஏற்றுமதியாளனால் இறக்குமதியாளனுக்கு அனுப்புகின்ற பத்திரமாகும். இதில் இருந்த இடவிலை (சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் குறைந்த விலை), இலவச விலை சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் கூடியவில்ல), கப்பல் தளம் மட்டு இலவசவிலை கப்பற்றளத்தில் சுமைகளை ஒப்படைக்க என்ன விலை அறவிடப்படும்என ஏற்றுமதியாளனால் குறிக்கப்படும் விலை), கப்பல் அருகு மட்டு இலவசவிலை (கப்பல் நிற்கும் இடம்வரை சுமைகளைக் கொண்டு சென்று ஒப்படைப்பதற்கு ஏற்படும் செலவுகளின் விலை) விலை, ஈடு, கேழ்வு (இறக்குமதியாளன் துறைமுகம் வரை ஏற்படும் செலவுகளை ஏற்றுமதியாளன் பொறுப்பேற்று குறிப்பிடும் விலை), முறியில் (இறக்குமதியாளரின் சுங்கக் களஞ்சியத்தில் சுமைகளை ஒப்படைக்கும் வரை ஏற்படக்கூடிய செலவுகளின் விலை) கப்பலால் இறக்குமட்டும் (இறக்குமதி நாட்டு துறைமுகத்தில் சுமைகளை ஒப்படைப்பதற்கான செலவுகளின் விலை) போன்ற பல அடிப்படைகளில் விலை தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இதனைத் தொடர்ந்தும் தரவாணை ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெறல், பொருட்களை சேகரித்து ஒழுங்குபடுத்தல், கப்பலில் இட ஒதுக்கீடு செய்தல், காப்புறுதி செய்தல், கப்பலேற்றுமுறி தயார் செய்தல், இன்வொய்ஸ் ( ) தயாரித்தல், தோற்றுவாய் சான்றிதழ் பெறல், ஏற்றுமதிக் குறிப்பு சமர்ப்பித்தல், பணம் பெறல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும்.

ஏற்றுமதி நடைமுறைகளின் போது சில ஆவணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன 1) குத்தகைப்பத்திரம் 11) வார்நாமம் 111) ஆவண மாற்றுண்டியல் 1 ) மாதிரிக்கிரயப் பட்டியல் போன்றவையாகும். குத்தகைப் பத்திரம் எனப்படுவது பொருட்களை எடுத்துச் செல்வதற்கென ஏற்றுமதியாளர் ஒருவர் கப்பலின் ஒரு பகுதியையோ அல்லது முழுப்பகுதியையோ குத்தகைக்கு எடுத்துக் கொள்வது தொடர்பான ஒரு பத்திரமாகும். இது கப்பல் பிரயாணம் செய்யத்தயாராக இருக்கும் துறைமுகம், போகவேண்டிய நேரம், இடம் கொண்டு செல்லும் சரக்குகள் செலுத்த வேண்டிய கேழ்வு, துறைமுகத்தில் ஏற்ற அல்லது இறக்குவதற்குரிய அனுமதி போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். கப்பலில் பொருட்களை அனுப்பும் போது கப்பல் கம்பனியை சான்று வழங்கப்படுவதே வார்நாமம் ஆகும். இது கப்பலில் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும் என்ன நிலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும், எந்த துறைமுகத்தில் ஒப்படைக்கப்படும் எனவும் உறுதிகூறும் சான்றாகும். ஏற்றுமதியாளனால் தயாரிக்கப்பட்டு இறக்குமதியாளன் நாட்டு வங்கிக்கு அனுப்படுகின்ற ஒரு பத்திரமே ஆவணமாற்றுண்டியல்.

இது மாதிரிப்பட்டியல், காப்புறுதிப்பத்திரம், உற்பத்தி நாட்டுச் சான்றிதழ், பிரதிநிதிச் சாட்சிப்பத்திரம், சுமைச் சீட்டு என்பவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். விற்பனையாளனால் அல்லது ஏற்றுமதியாளனால் தயாரிக்கப்பட்டு கொள்வனவாளனுக்கு அல்லது இறக்குமதியாளனுக்கு அனுப்பப்படுவதே மாதிரிக் கிரயப் பட்டியல் ஆகும். இதில் விலையும் ஏனைய செலவுகளும் குறிக்கப்பட்டிருக்கும். கொள்வனவாளனிடம் செலுத்த வேண்டிய பண அளவைக் காட்டுதல், பொருட்களை ஒப்படைக்கும் முன்பு முற்பணம் பெறவிரும்புதல், ஏற்றுமதியாளன் சுங்கத்திணைக்களத்திடம் இருந்து சுங்கவரியின் அளவை நிர்ணயித்தல், முகவரிடம் பொருட்களை விற்பனைக்காக அனுப்புதல் போன்ற சந்தர்ப்பங்களில் மாதிரிக் கிரயப்பட்டியல் தயாரிக்கப்படுகின்றது.

ஏற்றுமதியை ஊக்கப்படுத்தி ஏற்மதி வருமானத்தை உயர்த்துவதற்கு இலங்கை அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அவையாவன:- வரிச்சலூகைகளை வளங்குதல், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஏற்றுமதி கடன் கட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களை உருவாக்கி வசதியளித்தல், ஜனாதிபதி பரிசுத்திட்டத்தை நடாத்துதல், சர்வதேச ரீதியாக வியாபாரம் சந்தை வாய்ப்பினையும் பெற்றுக் கொடுத்தல், இலங்கை நாயத்தை மிதக்கவிட்டமை, ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் உருவாக்கப் பட்டமை போன்றனவாகும்.

ஏற்றுமதி வருமானத்தை உயர்த்துவதற்காக 1979இல் உருவாக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பல்வேறு ஊக்குவிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்து கின்றது. ஏற்றுமதி பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு நடுத்தர நீண்டகால கடன்களை அல்லது சலுகை அடிப்படையிலான வட்டியுடன் அரச நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறத்தக்க திட்டங்களுக்கு அனுமதியும் சிபார்சும் அளித்தல்; ஏற்றுமதி உற்பத்திக்கு மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்தல், உத்தரவாத சான்றிதழை ஏற்றுமதியாளருக்கு வழங்குதல், ஏற்றுமதி கிராம திட்டத்தை அமுல்படுத்தல், ஜனாதிபதி பரிசளிப்பு திட்டத்தை அமுல்படுத்தல், வெறிநாட்டு சந்தை பற்றிய தகவல்களை அளித்தல், தேசிய பொதிகட்டும் நிலையத்தை உருவாக்கியமை முதலிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் வர்த்தக அமைசின் சார்பில் 1981ல் உருவாக்கப்பட்ட ஜனாதிகதி பரிசளிப்புத்திட்டம் 1982ல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இப்பரிசளிப்புத் திட்டத்தின் கீழ் சிறந்த ஏற்றுமதியாளனுக்கு 10,000/- ரூபா காசு சான்றிதழ்கள் என்பனவற்றுடன் அச்சினத்தை 3 வருடங்களுக்கு பயன் படுத்தும் உரிமையும் வளங்கப்பட்டுள்ளது. மரபுரீதியற்ற ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் கிராமிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை வளங்கவும் பயன்படுத்தப்படாத மூல வளங்களைத் தக்க முறையில் பயன்படுத்தவும் கிராமிய மக்களின் வருமானத்தை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் என நாட்டில் பரவலாக ஏற்றுமதிக்கிராமத் திட்டம் உருவாக்கப்படுகின்றது.

1978ம் ஆண்டு யூன் மாதம் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் வர்த்தகத்தில் ஒரு பாரிய திருப்பம் ஏற்பட்டுள்ளது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் இதனால் ஆடை தைத்த ஆடைகளின் உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. இது அந்நிய முதலீடுகளையும் தொழிநுட்பத்தையும் இலங்கைக்கு வரவழைத்தல், ஏற்றுமதி வருமானத்தை உயர்த்துதல்; வேலை வாய்ப்பினை அளித்தல் முதலியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது முதலில் கட்டுநாயக்காவிலும் அதைந் தொடர்ந்து பியகம, கெக்கலை ஆகிய இடங்களிலும் கொழும்பு பெரும்பாலாக ஆணைக்குழுவினரால் நிர்வகிக்கப்படுகின்றது. இதற்கு சுவீடன், நோர்வோ, ஜெப்பான், மேற்கு ஜேர்மனி, சிங்கப்பூர், பொங்கொங், இந்தியா, மலேசியா ஆகிய நாடுகள் உதவி வளங்கியுள்ளன.

ஏற்றுமதியாளர்களுக்கு சலுகை அடிப்படையில் இலங்கை மத்தியவங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி வரையறுக்கப்பட்ட மூலதன அபிவிருத்தி முதலீடு கம்பனி, வரையறுக் கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் என்பன இடைத்தர, நெடுந்தவணை கொடுகடன்களை வழங்குகின்றன. ஏற்றுமதியாளர்களின் நன்மை கருதி ஏற்றுமதிக் கொடுகடன் ஆலோசனைப் பிரிவு பற்றிய வங்கியால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தக வங்கிகட்கும், ஏற்றுமதி நடவடிக்கைகளின் அபிவிருத்தி யைப் பாதிக்கக்கூடிய சந்தை நிபந்தனைக்ள், வெளிநாட்டுச் செலாவணிப்பிரச்சனைகள் பற்றிய தகவல்களை வளங்குதல், ஏற்றுமதி கடன்திட்டம் போன்றவற்றை திறமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் என்பன இதன் பிரதான கடமைகளாகும்.

1981 யூன் மாதம் அறிமுகப் படுத்தப்பட்ட ஏற்றுமதி விஸ்தரிப்பு நன்கொடை திட்டம் 1983 ஒக்டோபரில் ஏற்றுமதி அபிவிருத்தி நன்கொடைத்திட்டம் எனப் பெயர் இடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பண நன்கொடை வழங்கப்படுகிறது. இத் தொகையை ஏற்றுமதியாளன் தனது செயலின் ஒரு பகுதியை செய்ய பயன்படுத்தலாம்.

ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டும் ஏற்றுமதியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் ஏற்றுமதித்துறையின் அபிவிருத்தி செய்யும் பொருட்டும் தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இச்சங்கம் 1989ஆம் ஆண்டை ஏற்றுமதி அபிவிருத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. ஏற்றுமதிப் பொருட்கள் பிரிக்கப்பட்ட போது இறக்குமதிப் பொருட்களும், நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் என மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளன. இறக்குமதி வியாபாரம் மூன்று முறைகளில் நடைபெறுகின்றது அவையாவன 1) நேரடி இறக்குமதி 11) இறக்குமதி முகவருடாக இறக்குமதி, 111) ஒப்படை விற்பனை என்பனவாகும். இறக்குமதியாளனே வெறிநாட்டிலிருந்து பொருட்களை வரவழைத்தல் நேரடி இறக்குமதி ஆகும். இறக்குமதி செய்து தருவதற்கு என இருக்கும் பிரதிநிதி மூலம் பொருட்களை வரவழைத்தல் இறக்குமதி முகவருடாக இறக்குமதி எனப்படும். இம்முறை வியாபாரிகள் வெளிநாட்டு சந்தை பற்றிய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பூரண அறிவும் அனுபவமும் இல்லாமல் இருக்கும் போது பயன்படுத்தப்படும். ஏற்றுமதியாளனின் இங்குள்ள பிரதிநிதிக்கு ஒப்படை விற்பனை முறையில் பொருட்களை அனுப்புதல் ஒப்படை விற்பனை ஆகும்.

ஏற்றுமதி நடைமுறைகளைப் போன்று இறக்குமதி வியாபாரத்தில் போதும் சில நடைமுறைகள் கையாளப்படுகின்றன. அவையாவன:- விலை விசாரணைக் கடிதத்தை அனுப்புதல், இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெறல், வெளிநாட்டுச் செலாவணி அனுமதிப் பத்திரம் பெறல், தரவாணை அனுப்புதல், நாணயக் கடிதம் பெறல், அறிவிப்புக் கடிதம் பெறல் என்பனவாகும். கப்பல் துறைக்கு வந்தடைந்து 14 நாட்களுக்குள் இறக்குமதியாளனால் அல்லது இறக்குமதியாளன் பிரதிநிதியால் தயாரிக்கப்பட்டு சுங்கத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் ஒரு ஆவண இறக்குமதி குறிப்பு ஆகும். சுங்கத் தீர்வையும் துறைமுகக் கட்டணமும் செலுத்தி பின்னர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். சுங்கத் தீர்வை வரி முதலியவற்றை கட்டும் வரை பொருட்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக துறைமுகத்திற்கு அண்மையில் அமைக்கப்பெற்ற ஒரு களஞ்சியசாலை துறைமுக பண்டகசாலை ஆகும்.

இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் 15.11.77 முதல் தாராளமாக்கப்பட்டுள்ளது. இதனால் மிகக்குறைந்தளவு கட்டுப்பாடே இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது இதன் மூலம் இலங்கை, தாய்வான் தவிர்ந்த ஏனைய உலக நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடலாம், ஆனால் இலங்கையில் உள்ள தனியார் துறை, தாய்வான் நாட்டு தனியார் துறையினருடன் வியாபார முயற்சிகளை மேற்கொள்ளலாம். இதன் காரணமாக உள்ளூரில் பொருள் தட்டுப்பாடு நீங்கியது. இயந்திசாதனங்கள், மூலப் பொருட்கள் இறக்குமதி செய்து கைத்தொழில் நிறுவுதல், கூடிய வேலை வாய்ப்பு, உள்ளூர் கைத்தொழில் பொருட்களின் தரம் உயர்வு போன்ற அனுகூலங்கள் பெறப்பட்டன. இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம் இலங்கையில் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான கொள்கைகள் வர்த்தகக் கப்பல் துறை அமைச்சினால் உருவாக்கப்பட்டு நிதித்திட்டமிடல் அமைச்சின் ஆலோசனையுடனும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் நிறைவேற்றுகின்றது. இது வர்த்தக கப்பல் துறை அமைச்சருக்கு ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான தாராளமாக்கல் நடவடிக்கைகளையும் அல்லது கட்டுப்பாட்டிற்கும் தேவையான சட்டம், ஒழுங்குவிதிகளை மேற்கொள்வதற்கு அதிகாரத்தினை வளங்குகின்றது.

ஏற்றுமதி, இறக்குமதி தவிர நாடுகள் மறுஏற்றுமதி எனப்படும். ஒரு வழியிலும் வருமானத்தை பெறுகின்றன, மறு ஏற்றுமதி வியாபாரமானது ஒரு நாடு நாட்டில் இருந்து இறக்குமதி அப்பொருளின் மாற்றங்களை ஏற்படுத்தியோ அல்லது ஏற்படுத்தாமலோ வேறொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகும். மறுஏற்றுமதி வியாபாரம் அன்னியச் செலாவணி வருமானத்தை பெறுவதற்காகவம், பொதி கட்டல் மூலம் வேலை வாய்ப்பை வளங்குவதற்கும், நாடுகள் தமது வியாபார ஒப்பந்தங்களை மீறாமல் இருப்பதற்கும் உதவுகின்றன. இறக்குமதியாளர்கள் ஏற்றுமதியாளர்களுக்கு பணம் கொடுத்தல் சம்பந்தமாக தந்தி மாற்றீடு, செலாவணி உண்டியல், நாணயக் கடிதம், விமானத் தபால் மாற்றீடு என்பன பயன்படுத்தப்படுகின்றன.

## பணத்தின் தோற்றம்

ஆதிகாலத்தில் ஒவ்வொருவரும் தத்தமக்கு தேவையான பொருட்களை தாமே செய்து கொண்டனர். மக்க்ள் தொகை மிக குறைவாகவே காணப்பட்டது. அவர்களின் தேவையும் குறைவாகவே இருந்தது. காலப் போக்கில் மக்கள் தொகை அதிகரிக்கலாயிற்று, அவர்களின் தேவைகளும் அதிகமாகி விட்டது. எனவே தாம் செய்த உற்பத்தியில், தமது தேவைக்கு எடுத்துவிட்டு மிகுதியை ஏனையவர்களுக்கு கொடுத்து உதவினர். இதனையே பண்டமாற்று முறையென அழைப்பர். இதற்கு ஊடகம் ஒன்றும் பயன்படுத்தவில்லை.

அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக தத்தமக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் தாமே உற்பத்தி செய்ய முடியாமல் இருந்ததனால் தம் நிலத்திற்கு ஏற்ற பொருளையே உற்பத்தி செய்தனர். இதனையே சிறப்பியல்பு கொண்ட உற்பத்தி என்பர். இதன் விளைவாக அதிகளவு பொருட்களை மட்டுமன்றி ஏனையோரின் தேவைகளையும் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பொருட்கள் சேவைகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்வதில் சிரமங்கள் காணப் படுவதாக உணரலாயினர். அதாவது ஊடகம் காணப்பட்டால் இவ் கொடுக்கல் வாங்கல்களை எளிதாக்கலாம் என உணர்ந்தனர். எனவே பரவலாக ஏற்கப்பட்டதும், அருமையானதுமாக காணப்பட்ட சில பொருட்களை உதாரணமாக செங்கல், சிப்பி, விலங்குகளின் தோல்கள் என்பவற்றைப் பயப்படுத்தி, பொருட்கள் தேவைகளை தமக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தினர். இதனை நேரில் பண்டமாற்று முறையென அழைப்பர்.

காலம் செல்லச்செல்ல மக்களின் அறிவும் விருத்தி அடைந்தது. எனவே இவ் நேரில் பண்டமாற்று முறையிலும் பல குறைபாடுகள் ஏற்பட்டது. அதாவது தேவைகளில் இரட்டைப் பொருட்களை சிறு கூறுகளாக வகுக்க முடியாமை, பொது அலகு காணப் படாமை, பெறுமானத் திரட்டு காணப்படாமை ஆகிய குறைபாடுகளை உணரலாயினர். அவைகளை செய்வதன் பொருட்டே பணம் தோன்றியது. இதற்காக நடைமுறையில் கிடைக்கும் வருமானத்தினை எதிர்காலத்தில் செலவளிப்பதற்காக பணம் பெருமானத் திரட்டாக தொழிற்படுகின்றது. இதனால் செல்வத்தின் நிலைக்கன் எனவும் அழைக்கப் படுகின்றது. மேலும் பணத்தை சேமிப்பதனால் அது பழுதடைவதில்லை, காலம் கடப்பதில்லை பாரிய இடவசதியும் தேவையில்லை. ஆகையால் பணத்தை இலகுவாக சேமித்துவைக்கலாம்.

பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவியாகவும் பணம் தொழிற்படுகின்றது. அதாவது தற்காலத்தில் அனேகமான கொடுக்கல் வாங்கல்கள் கடன் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. இதன் கருத்து என்னவென்றால் தற்காலத்தில் ஒருவர் தனக்குத் தேவையான பொருட்களையோ அல்லது சேவைகளையோ பெற்றுக் கொண்டு அதற்கு பதிலான கொடுப்பனவுகளை எதிர்காலத்தில் கொடுத்து தீர்க்கப்படுகின்றது என்பதாகும். எனவே கொடுப்பனவினை பிற்போட்டு அதனை பண வடிவில் கொடுக்கப்படுகின்றது. இதனை நிறைவேற்ற பணம் பின்போடப்பட்ட கொடுப்பனவு முறையாக தொழிற்படுகின்றது.

பணத்தினை பல வகைகளாகப் பிரிக்கலாம் அவற்றுள் சட்ட இறைமதிப்பணம், அல்லது புளக்கத்தில் உள்ளபணம். அதாவது புளக்கத்தில் உள்ள தாள். நாணயங்களும் உலோக நாணயங்களும் இப்பண வகையில் காணப்படுகின்றது. மேலும் பொருட்களையும் சேவைகளையும், பெற்றுக் கொள்வதற்கும் கடன்களை கொடுத்து தீர்ப்பதற்கும், சட்டப் படியாக அங்கிகாரம் வளங்கப்பட்டுள்ளது என்பதே ஆகும்:

கேள்வி வைப்புப் பணம் அல்லது வங்கிப்பணம் அதாவது பணத்தின் வகைகளில் ஒன்று வணிக வங்கிகளில் வாடிக்கை ஆளுக்கு சொந்தமான நடைமுறைக் கணக்கில் உள்ள பணம் வங்கிப்பணம் அல்லது கேள்வி வைப்புப்பணம் எனப்படும். ஏனெனில் கேட்டவுடன் வைப்புச் செய்கின்றமையினால் இவ்வாறு அழைப்பர். நிலையான வைப்புப் பணமும் ஒரு வகை ஆகும். அதாவது வங்கியில் உள்ள நிலையான வைப்புக் கணக்கில் உள்ள பணமே நிலையான வைப்புப் பணம் எனப்படும். இதனைக் கொண்டு ஒவ்வொருவரும் தமது கொள்வனவுத் திருதியை/அறிந்து/கொள்ளலாம். இப்பணத்தினை நேரடியாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்த முடியாது.

பணம் என்றால் பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்தப்படும் ஒரு ஊடகமே. பணம் எனப்படும். இப்பணமானது பல பண்புகளை கொண்டுள்ளன. அவை யாவன, பொது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும், அரசாங்க அங்கீகாரம் பெற்றிருத்தல், இலகுவில் எடுத்துச் செல்லக் கூடியதும், சிறு அலகுகளாகப் பிரிக்கப்படும், நெடுவாழ்வுத் தன்மை உடையதும் இலகுவில் இனம் காணக் கூடியதும் உதாரணமாக 100/-வுக்கு, 1000/-க்கும் இடையே உள்ள வேறுபாட்டை இலகுவில் கண்டு கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். புழக்கத்தில் உள்ள பணமானது அரிதாகவும் இருத்தல் வேண்டும். அதாவது தாள் நாணயங்களும் உலோக நாணயங்களும் அதிகமாகவோ, மிக அரிதாகவோ இருக்கலாகாது.

பணமானது பல தொழில்களை புரிகின்றது, அவற்றுள் பரிமாற்று ஊடகமாவும், அதாவது பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக பணத்தினை பயன்படுத்துகிறார்கள். பணமானது ஒருவர் கையில் இருந்து இன்னொ-ருவர் கையிற்கு பரிமாற்றச் செய்கின்றது இதனையே இத் தொழில்பாடு விளக்குகின்றது. உதாரணமாக ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை பெற்றுக் கொள்ள 5000/- பரிமாற்றம் செய்ய வேண்டி இருக்கலாம்.

பெறுமதிகளை அளக்கும் அளவு கோலாகவும் அதாவது, பண்டங்களினதும் சேவைகளினதும் பெறுமதிகளை அளக்கும் போது பணம் அளவு கோலாக தொழிற்படுகின்றது. உதாரணமாக ஆசிரியர் சேவைக்காக மாதாந்தம் 3000/- சம்பளம் எனவும், ஒரு மோட்டார் வாகனத்தின் பெறுமதி 10,000/= எனவும் அளக்கப்படுகின்றது இவைகளையே பின்பு அவற்றிற்கு விலைகள்ஆக கருதப்படுகின்றது. ஆகவே பணம் இத் தொழிலை செய்யாவிடின் பொருட்கள் சேவைகளை அழிப்பது அடிமையாகும்.

பணமானது பெறுமானத் திரட்டாகவும் அல்லது சேமிப்பு ஊடகமாகவும் தொழிற்படுகின்றது. அதாவது ஒவ்வொருவருக்கும் தாம் பெறும் வருமானத்தில் ஒரு பகுதி தொகையை எதிர்காலத்தேவைகளை முன்னிட்டு சேர்த்து வைக்கின்றான். ஏன் எனில் எதிர்காலத்தில் பொருட்களையோ அல்லது சேவைகளையோ பெற வேண்டி இருப்பதனால் ஆகும்.

பண வகைகளில் ஆவணப்பணமும் ஒன்றாகும். அதாவது சட்ட இறுமதிப் பணத்தில் காணப்படும் திரவத்தன்மை இப்பணத்தில் இல்லை ஆனாலும் இதனை வைத்திருப்பவர் தனது கொள்வனவுத் தகுதியறிந்து கொள்வர். ஆவணப்பணத்தினை பணமாக மாற்றிக்கொண்ட பின்னே கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்த முடியும். பணமாக மாற்றும் போது கழிவு கொடுக்க வேண்டி இருப்பதனால் முழுப் பெறுமதியைவிட குறைவான தொகைப் பணமே பெறப்படும். ஆவணப் பணத்திற்கு உதாரணமாக சேமிப்புப் பத்திரம் திறைசேரி உண்டியல், பரிசுநியச் சீட்டு, தொகுதிகடன் சீட்டு என்பனவாகும்.

பணமானது பொருட்களையோ அல்லது சேவைகளையோ பெற்றுக் கொள்வதற்கு ஒரு ஊடகமாக தொழிற்படுகின்றது எனவே பணம் மக்களின் அத்திய அவசிய தேவைகளில் ஒன்றாகும்.

க. கவிதா.

# வ ங் கி க ள்

**********

மக்களின் வைப்புக்களை ஏற்று அவற்றுக்குப் பாதுகாப்பளிப்பதும் கடன் வசதிகளையும் செய்து கொடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனமே வங்கி ஆகும். இவ் வங்கிகள் மத்தியவங்கி, வணிக வங்கி, சேமிப்பு வங்கி , அபிவிருத்தி வங்கி, வர்த்தக வங்கி, கிராமியவங்கி என்று 6 பிரிவுகளாகப் பிரித்துள்ளன.

மத்திய வங்கி ஒரு நாட்டில் ஒன்று மட்டுமே காணப்படும். இலங்கையில் காணப்படுவது ' இலங்கை மத்திய வங்கி ' ஆகும். இது 1950ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மத்திய வங்கியின் ஆளும் சபையாக நாணயசபை விளங்குகின்றது. இது அரச வங்கியாக தொழிற்படல், அரசின் சார்பில் நாணயங்களையும் நாணயத் தாள்களையும் வெளியிடல், வங்கிகளின் வங்கியாக தொழிற்படல், தீர்க்கும் நிலையமாக இயங்குதல் பணப் பெறுமதியைப் பேணுதல் நாணய நிதிக் கொள்கையை தீர்மானித்தல், இறுதிக் கடனை ஈவோனாக இருத்தல் செலாவணிக் கொள்கையை வகுத்தல், கடன் ஒடுக்கலை மேற்கொள்ளல் போன்ற கருமங்களை ஆற்றுகின்றது.

மத்திய வங்கி தனது முயற்சிகளைப் பயன்படுத்தி பன்முகப்படுத்தும் பொருட்டு பிராந்தியங்களில் கிளைகளை அமைத்து வருகின்றது. இதன்மூலம் பிராந்திய வங்கியூடாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வணிக வங்கிகளின் செயற்திறனை மேற்பார்வை செய்து உதவி வழங்கல், அவ்வப் பிராந்தியங்களில் முதலீட்டு வாய்ப்பை அறிந்து அபிவிருத்தி நிதிகளை வழங்கல், புதிய விவசாய சிறுகைத்தொழில் திட்டங்களுக்காக பிராந்திய முயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற உதவிகளை வழங்கும்.

வட்டியை வழங்காத நடைமுறைக் கணக்கிற்கும் வட்டியை வழங்கும் சேமிப்புக் கணக்கிற்கும் பொது மக்களிடம் இருந்து வைப்புக்களை ஏற்கும் நிதி நிறுவனமே வணிக வங்கியாகும். இலங்கையில் மொத்தமாக 24 வணிகவங்கிகள் காணப்படுகின்றன. இவற்றுள் 5 உள்நாட்டு வணிக வங்கிகள், 19 வெளிநாட்டு வணிக வங்கிகள் ஆகும். இலங்கையில் முதன் முதல் 1881ம் ஆண்டு " சிறீன்லன்ட்ஸ் வங்கி" உருவாக்கப்பட்டது. இலங்கையிலுள்ள வணிக வங்கிகள் இலங்கை அரசுக்குச் சொந்தமானவை (உதாரணம் இலங்கை வங்கி ) இலங்கை தனியாருக்கு சொந்தமானவை ( உதாரணம் உறட்டன் நஉஷனல் வங்கி) வெளிநாட்டு அரசுக்குச்

சொந்தமானவை ( உதாரணம் : ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா )
வெளிநாட்டுத் தனியாருக்குச் சொந்தமானவை ( உதாரணம்: சிற்றி
பாங் என். ஏ ) என 4 வகையாகப் பிரிக்கலாம். வணிக
வங்கிகள் வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்கல், உல்லாசப்
பிரயாணிகளுக்கு விதிசேஈகி- காசோலைகளை விநியோகித்தல், வங்கி
மேலதிகப்பற்றை வழங்கல், நிலையான கட்டளைச் சேவைகளைச்
செய்தல், நாணயக் கடிதங்களை வழங்குதல் , அந்நிய செலாவணியை
மாற்றிக் கொடுத்தல், காப்பறைகளை வழங்கல், பணத்தை ஓரிடத்தில்
இருந்த இன்னோரிடத்திற்கு அனுப்ப உதவுதல் போன்ற தொழிற்பாடுகளை
ஆற்றுகின்றது. வணிக வங்கிகள் 3 வகையான வைப்புக்களை ஏற்கின்றன.
அவை (1) நடைமுறைக் கணக்கு (2) சேமிப்பு வைப்பு (3) நிலையான
வைப்பு என்பனவாகும். ~~அசுவ~~ நாளாந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கும்
பணத்தை வைப்பிலிடும் பொருட்டும் ஆரம்பிக்கும் முறை நடைமுறைக்
கணக்காகும். இம்முறையில் பணத்தை வைப்புச் செய்வதற்கு காசோலை
புத்தகம் வழங்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்கிலிட்ட பணத்தை
மீளப் பெறவேண்டுமாயின் வைப்பிலிட்டவர் காசோலை வரைவதன் மூலம்
பெற்றுக்கொள்ளலாம். இதனை வியாபாரிகளே அதிகம் மேற்கொள்ளு
-வார்கள் . ஏனெனில் இம்முறை மிகவும் பாதுகாப்பானதாகும் .
அத்துடன் காசோலைகள் குறுக்கு கோடிடுதல் போன்ற சிறப்பு அம்சங்களையும்
கொண்டுள்ளது. இவ் அமைப்பில் பணத்தை வைப்பிலிட்டவர் கேட்டவுடன்
பணத்தை வங்கி கொடுப்பதனால் இதனை கேள்வி வைப்பு என்றும்
அழைப்பர். சேமிக்கும் நோக்குடன் பணத்தை வைப்பிலிடுவதற்கு வங்கியின்
ஆரம்பிக்கிப்படும் கணக்கினை சேமிப்புக் கணக்கு என அழைப்பர்.
சேமிப்பிற்கு கணக்கிற்கு பணம் வைப்புப்புத்தகம் வழங்கப்படுகின்றது.
இவ் வைப்பிற்கு காசோலை வரையப்படுவதில்லை. ஆனால் இந்தியன்
ஓவசீஸ் வங்கி மட்டும் சேமிப்புக் கணக்கிற்கு காசோலை எழுதும் முறையை
அறிமுகப்படுத்தியுள்ளது. இவ் வைப்பிற்கு வட்டி வழங்கப்படுகின்றது.
மேலதிகமான ஒரு தொகையை குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு என வங்கியில்
வைப்பாக இடுதலை நிலையான வைப்பு என அழைப்பர். இந் நிலையான
வைப்பிற்கு வைப்புச் சான்றிதழ் வழங்கப்படும். வைப்புச் சான்றிதழ்
திட்டம் கள்ளப் பணத்தை வங்கிக்கு வரவழைக்கும் நோக்குடன் அறிமுகப்
-படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 100 000/பெறுமதியான
வைப்புச் சான்றிதழ்கள் வணிக வங்கியினால் கழிவுடன் விற்பனை செய்யப்பட்டன.
இச் சான்றிதழ்களை கொள்வனவு செய்பவருடைய பெயர் விபரங்களை
வங்கி கேட்காது. பெயர் விபரங்கள் அச்சான்றிதழில் எழுதப்படமாட்டாது.
பணமாக சான்றிதழை மாற்றும் போது வங்கி அடையாளத்தைக்காட்டும்படி

கேட்காது. இதனால் தான் கள்ளப்பணத்தை வங்கிக்கு வரவழைக்கக் கூடியதாக இருந்தது. அந்நியச் செலாவணியில் வைப்புக்களை ஏற்கவும் கடன்களை வழங்கவும் என வணிக வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிப் பிரிவு அந்நிய செலாவணி அங்கி அலகாகும். இப்பிரிவின்மூலம் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு நிறுவனமும், மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வதியோரும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம். இறக்குமதியாளன் நிதிப் பிரச்சனையை எதிர் நோக்கும் போது நிதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, பொருள் தனது கையிலிருக்கும் என்றும், பொருள் விற்பனை செய்யப்பட்டதும் வங்கி கடனாகக் கொடுத்த தொகையை வழங்குவதாகவும் வாடிக்கையாளன் ஒரு பற்றுச்சீட்டை அல்லது கடிதத்தை வழங்கிப் பெறும் ஒரு கடன்நம்பிக்கை பற்றுச்சீட்டு கடனாகும். இவ்வாறாக வணிக வங்கிகள் மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் பெருந்தொண்டு ஆற்றுகின்றன.

இலங்கையில் நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு என்பவற்றை பெற்றுக் கொள்வதற்காக காணப்படும் ஒரேயொரு வங்கி தேசிய சேமிப்பு வங்கியாகும். இது 1971ம் ஆண்டு இலங்கை சேமிப்புவங்கி தபால் கந்தோர் சேமிப்பு வங்கி, தேசிய சேமிப்பு இயக்கம் என்பன ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு அதற்கான ஊக்குவிப்புக்களை வழங்கவும், சேமிப்பாகப் பெற்ற வங்கியின் வைப்பு வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்ற அரச உத்தரவாதத்தை வழங்கும் பொருட்டும் இவ் வங்கி உருவாக்கப்பட்டது. இவ் வங்கி அன்பளிப்புச் சீட்டுக்களை விற்பனைசெய்தல் பரிசுத்திய சேமிப்பு முறிகளை விற்பனை செய்தல், ஓய்வூதியத் திட்டம் உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம் போன்ற திட்டங்களை அமுல்படுத்தி மக்களுக்கு சேவை செய்கின்றது. உழைக்கும் போது சேமிக்கும் திட்டம் எனப்படுவது வேலை பெறுநர் ஏதாவது ஒரு சேமிப்பு வங்கிக் கிளையில் கணக்கு ஒன்றை ஆரம்பித்து மாதாந்த சம்பளத்தில் குறிப்பிட்ட தொகையை கணக்கில் வைப்பிலிடும்படி வேலை வழங்குநருக்கு அறிவித்து பெற்றுக் கொள்ளும் ஒரு முறையாகும். இதன் மூலம் ஒழுங்காக மாதாந்தம் சேமித்தல் வங்கிக்குச் செல்லும் சிரமம் இன்மை, கூடிய வட்டியைப் பெற்றுக்கொள்ளல் போன்ற நன்மைகளை அடையலாம். நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை துரிதப்படுத்துவதற்காக கடன் வசதிகளை அளிக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட வங்கிகளே அபிவிருத்தி வங்கியாகும். இவை நீண்ட கால நடுநிலைக்கால கடன்களை வழங்குகின்றது. இலங்கையில் அபிவிருத்திக்கென 3 வங்கிகள் காணப்படுகின்றன. அவை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அரச ஈட்டு

முதலீட்டு வங்கி தேசிய அபிவிருத்தி வங்கி என்பனவாகும். அபிவிருத்திக்கு என இலங்கையில் முதன்முதலில் 1956ல் உருவாக்கப்பட்ட வங்கி 'அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்' ஆகும். இவ் வங்கி கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், உல்லாசப் பயணத் துறை போன்ற துறைகளுக்கு கடனை வழங்குகின்றது. இதன் 1வது கிளையை கண்டியில் திறந்துள்ளது. அரச ஈட்டு வங்கியும், சமத் தொழில் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனமும் ஒன்று இணைக்கப்பட்டு 1979ல் உருவாக்கப்பட்ட வங்கியே 'அரச ஈட்டு முதலீட்டு வங்கி' ஆகும். இது வீடுகளைக் கட்டுதல் புனரமைப்புச் செய்தல் வீடுகட்ட காணிகளைக் கொள்வனவு செய்தல், விவசாய நோக்கங்கள் என்பவற்றுக்கு கடன்களை வழங்குகின்றது. தேசிய அபிவிருத்தி வங்கி 1979ம் ஆண்டு பெப்ரவரி மாதம் உருவாக்கப்பட்டது. இதன் அனுமதித்த மூலதனம் 2000 மில்லியன் ரூபாவாகும். இதில் இலங்கை அரசு 400 மில்லியன் ரூபாவும், இலங்கை மத்திய வங்கி 100 மில்லியன் ரூபாவும், இலங்கை வங்கி 50 மில்லியன் ரூபாவும், மக்கள் வங்கி 50 மில்லியன ரூபாவும் மொத்தம் 600 மில்லியன் ரூபா முதலிடப்பட்டுள்ளது. இவ் வங்கி உற்பத்தி நிறுவனங்களுக்கு கடன் வகையில் மூலதனப்பங்களிப்புச் செய்தல் மூலதன சந்தை அபிவிருத்திக்கு உதவுதல், திட்டங்களை மேம்படுத்த உதவல் சிறிய நடுத்தரக் கைத்தொழிலுக்கு நிதி உதவியை வழங்கி கிராமியத்துறையை அபிவிருத்தி செய்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டது. சிறிய, நடுத்தர கைத்தொழில் கடன் மூலம் தொழில் முயற்சியில் ஈடுபடுவோர் 2 மில்லியன் ரூபாவை கடன்களைப் பெறலாம். இக் கடன் குறைந்த வட்டி ஒதுக்குபாக மீதி முறையில் வட்டி கணிக்கப்படல் சுலபமாக திருப்பிச் செலுத்தும் முறை கடன்களுக்கு தயவுகாலம் வழங்கப்படல் போன்ற சலுகைகளை உடையது 1980ம் ஆண்டிற்குப் பின் சுமாராக 3700 திட்டங்களுக்கு கடன் அளிக்கப்பட்டுள்ளது.

நிதி உதவிகளை வழங்காது ஆலோசனைச் செய்திகளை மட்டும் வழங்கும் வங்கி வர்த்தக வங்கியாகும். இலங்கையில் 2 வங்கிகள் காணப்படுகின்றன.

1. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி
2. வரையறுக்கப்பட்ட மக்கள் வர்த்தக வங்கி.

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி 1982 மார்ச் இல் உருவாக்கப்பட்டது. ஆனால் 1982 ஒக்டோபரில் செயற்படத்தொடங்கியது இது இலங்கை வங்கியின் துணைநிறுவனம். இவை முகாமை சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கல், சரியான செய்முறைத்திட்டங்களைத் தெரிவுசெய்தல் நிதி நிறுவனங்கள் மூலம் சிக்கிக்கேற் முறை அடிப்படையில் கடன்வசதிகளை ஒழுங்குபடுத்தல், வர்த்தக உண்டியலை கழிவுடன் மாற்ற உதவுதல் பொது மக்களுக்கு பங்கு வழங்கலில் உறுதிப் பொறுப்பளித்தல் போன்ற சேவைகளை

வழங்குகின்றது. இவ் வங்கி சிறப்புச் சந்தையினால் ஏற்படும் தனியுரிமையை தவிர்க்கும் பொருட்டு சங்கிலிக் கடைகளை உருவாக்குவதற்கு உதவி செய்துள்ளது. வரையறுக்கப்பட்ட மக்கள் வர்த்தக வங்கி 1983ல் இங்கிலாந்திலுள்ள வரையறுக்கப்பட்ட கிளாய்ட் மகோன் நிறுவனமும் மக்கள் வங்கியும் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்டது. இது சின்டிக்கேட் முறையில் கடன் வழங்கல், ஒன்றிணைப்பு சுவீகரிப்புக்கு கம்பனிக்கு உதவுதல் சிக்கல் வாய்ந்த கைத்தொழில் முகாமை செய்வது சம்பந்தமாக ஆலோசனைகளை வழங்குதல் நாட்டின் அபிவிருத்திக்கான நிதி வழங்கலை அதிகளவில் திரட்டல் கொழும்பை சர்வதேச நிதிமையமாக விருத்தி செய்தல் போன்றவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளன. மக்கள் வங்கியின் கிளை ஸ்தாபனமாக 1978ல் கடற்தொழில் வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. கடற் தொழில் உபகரணம், படகுகளை வாங்குவது போன்ற நடவடிக்கைகளுக்கு உதவி புரிந்து வருகின்றது. இவற்றிற்கான அவசர கடன்களை வழங்கும் பொருட்டு கடற்றொழில் வங்கி உருவாக்கப்பட்டது.

கிராம மட்டத்தில் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் சேமிப்பை தூண்டுவதற்காகவும் கிராமிய வங்கிகள் உருவாக்கப்பட்டன. இலங்கையில் கிராமிய வங்கி பிரதேச கிராமிய வங்கி ஆகிய இரண்டு கிராமிய வங்கிகள் காணப்படுகின்றன. கிராம மட்டத்தில் பொருளாதார விருத்தியை மேற்கொள்ளவும் கிராம மக்களின் சேமிப்பை தூண்டுவதற்காகவும் உருவாக்கப்பட்ட வங்கிகளே கிராமிய வங்கிகள் ஆகும். மக்கள் வங்கியினால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. ஆலோசனைகளை வழங்குதல், ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல், கடன் வழங்கல் வங்கி நடவடிக்கைகளைப் பரிசோதித்தல் போன்ற சேவைகளை மக்கள் வங்கி ஆற்றுகின்றது கிராமிய வங்கிகள் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கீழ் ஒரு பகுதியாக இயங்குகின்றன. கிராமிய வங்கிச் செயற்பாடுகளை கூட்டுறவு அபிவிருத்திதிணைக்களமும் பரிசோதனை செய்கின்றது. கிராமிய வங்கிகள் நிலையான சேமிப்பு வைப்புக்களை ஏற்றல், உற்பத்தி வேலைக்கு கடன் வழங்குதல் அடகு பிடித்தல் போன்ற சேவைகளை ஆற்றுகிறது. மாவட்ட மட்டத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொளவதற்காக மத்திய வங்கியால் முலதனமிடப்பட்டு 1985ல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்டது. அனுமதித்த முலதனம் 50 மில்லியன் ரூபாவாகவும் வழங்கிய மூலதனம் 10 மில்லியன் ரூபாவாகவும் உள்ளது. எதிர்காலத்தில் இவ் வங்கியின் மூலதனத்தில் 49% நான்கு சுதேசிய வணிக வங்கிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்படும். இவ் வங்கியின் நிர்வாகம் மத்திய வங்கியால் நியமிக்கப்பட்ட 5 பேர் கொண்ட குழு ஒன்றினால் நிர்வகிக்கப்படும். இது விவசாய நடவடிக்கைகள் மீன்பிடி தொழில், குடிசைக் கைத்தொழில் சிறு தொழில்கள் போன்றவற்றிற்கு கடன் வழங்கல்

சுய வேலைவாய்ப்பு திட்டங்களுக்கு உதவுதல் போன்ற சேவைகளை ஆற்றுகின்றது. இது வணிக வங்கிகளால் செய்யப்படுகின்ற கருமங்கள் அனைத்தையும் செய்கின்றது. ஆனால் இது வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதில்லை. இது 1989ம் ஆண்டு வரை 11 மாவட்டங்களில் மொத்தம் 80 கிளைகளைத் திறந்துள்ளது. 1வது கிளை களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள என்னும் இடத்தில் நிறுவியது.

இலங்கை வங்கியினால் உள்நாட்டு கடன் பத்திரங்கள் என்னும் ஒருமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக் கடன் பத்திரங்களில் நகர் புறக் கிராமிய விநியோகத்தர்களில் தங்கியிருக்கும் ஏற்றுமதியாளரும் ஏற்றுமதிக்கான விநியோகத்தர், உற்பத்தியாளரும் நன்மை அடைவர். நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளர் அல்லது விநியோகத்தர்களுக்கு ஏற்றுமதி நிதி உதவியை அளித்தல், ஏற்றுமதியாளரால் விநியோகத்தர்களுக்கு முற்பணம் கொடுக்க வேண்டிய நிலையை தவிர்த்தல், ஏற்றுமதியாளரை விநியோகத்தர் உற்பத்தியாளர், தயாரிப்பாளருடன் தொடர்புபடுத்தல், விநியோகத்தர் அல்லது உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளருக்கு வங்கியினால் கொடுப்பனவு உடனுக்குடன் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தல், நாட்டில் தேசிய ஏற்றுமதி இயக்கத்தை ஊக்குவித்தல் முதலிய நோக்கங்களுக்காக உள்நாட்டுக்கடன் பத்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

சிறுகடன் படுநர்களுக்கு இலகுவான நியதிகளில் எளிமையான ஆவணங்களுடன் கொடுகடன் வசதிகள் கிடைக்கச் செய்வதனை அதிகரிப்பதற்காக முகவர் வங்கித்தொழில் அறிமுகம் செய்யப்பட்டது. இலங்கைவங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றால் முகவர் வங்கித்தொழில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வங்கிகளினால் நிதியிடப்படும் கடன் வழங்கல் தொழிற் பாடுகளைக் கையாளும் நோக்கத்திற்காக முகவர் நியமிக்கப்படுகின்றனர். 1988ம் ஆண்டு இறுதியில் இலங்கை வங்கி 100 முகவர்களையும் மக்கள் வங்கி 65 முகவர்களையும் நியமித்துள்ளது.

இலங்கையிலுள்ள சம்பத் வங்கி சர்வதேச மாஸ்ர்காட் நிறுவனத்தின் அங்கீகாரத்துடன் சம்பத் மாஸ்டர்காட் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒருவர் 600/-ஐ கொடுப்பனவாகச் செலுத்தி சம்பத் மாஸ்டர் காட்டை பெற்றுக்கொள்ளலாம். இவ் அட்டையினை பெற்றுக்கொண்டவர் கடைகள், உணவுச்சாலைகள் தனியார் வைத்தியசாலைகள் போன்றவற்றில் கடனுக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியும். இதன்மூலம் ஒருவர் தன்னிடம்

போதிய பணம் இல்லாதபோது கடனுக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்ய உதவுகின்றன. இவ் அட்டையின் உடைமையாளர்களுக்கு இலவச விபத்துக் காப்புறுதி வசதிகளும் வழங்கப்படும்.

அந்நிய செலாவணிச் சந்தையை அபிவிருத்தி செய்யும் முகமாக இலங்கையில் 1983ம் ஆண்டு 'புறொக்ஸ் கிளப் ' உருவாக்கப்பட்டது. இது அந்நியச்செலாவணி கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ள உள்ளூர் நிறுவனங்களுக்கும் அந்நிய நாடுகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் இடையே பரஸ்பர உறவுகள், நட்பு நம்பிக்கை என்பவற்றை பேணுதல் உருவாக்குதல் இலங்கையில் அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக நவீன தொழில் நுட்பங்களையும் அறிமுகம் செய்தல் ஆகியவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

வங்கித்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1985ம் ஆண்டு ஜனவரியில் இலங்கைவங்கிகள் சங்கம் உருவாக்கப்பட்டது. மேலும் இது வங்கி நடவடிக்கை விரிவுபடுத்தி வாடிக்கையாளருக்குச் சிறந்த சேவைகளை வழங்கவும், சகல வங்கிகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தி வங்கித் தொழிலை விரிவுபடுத்தி பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்ற முயற்சி செய்கின்றது. இது தவிர வங்கித் தொழிலை மேற்கொள்வோர் அனுமதியினை வழங்கும் பொருட்டும் அவற்றிற்கான ஒழுங்குவிதிகளையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொள்ளும் பொருட்டும் 1988ம் ஆண்டு 30ம் இலக்க வங்கிச்சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இச் சட்டத்தின் கீழ் பின்வரும் விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

(1) நிர்ணயிக்கப்பட்ட திகதி அல்லது அதற்குப்பின்னர் கம்பனி தவிர்ந்த எந்தவொரு அமைப்பும் வங்கித்தொழிலை மேற்கொள்ள முடியாது
(2) தொழிலுக்கான அனுமதியை அமைச்சின் அதிகாரத்துடன் நாணயச சபையிடம் பெற்றுக் கொள்ளல் வேண்டும் (3) அனுமதியைப் பெறும் பொருட்டு நாணய சபைக்கு விண்ணப்பித்தல் வேண்டும் (4) அனுமதிப்பத்திரத்தில் வங்கிக்கு உள்நாட்டு வங்கிச் சேவையை அல்லது கரைகடந்த வங்கிச் சேவையை அல்லது 2 வகையான தொழிற்பாட்டிற்கும் அனுமதிஅளித்துள்ளதா என்பதனையும் வங்கி வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளும் இடத்தை குறிப்பிட வேண்டும் என்பனவாகும். வங்கித்தொழிலில் ஈடுபடும் கம்பனிகளின் மூலதனத்தேவை ஒதுக்குநிதி, இயக்குனர்கள்நியமித்தல், கலைப்புச் சம்பந்தமான விடயங்களும் இச்சட்த்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கரைகடந்த வங்கிச்சேவை எனப்படுவது நாணயம் ஒன்று சட்டபூர்வமாக உள்நாட்டைவிட்டு இன்னோர் நாட்டில் அவ் நாணயத்தில்வங்கிச் சேவைகள் மேற்கொள்ளப்படுவதாகும்.

– ஆ.இரத்தினாம்பாள் –
ஆண்டு 11 ஏ

போக்கு வரத்து சேவை

பண்டங்களையோ பிரயாணிகளையோ ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்லப் படலையே போக்கு வரத்து என அழைக்கப் படுகின்றது. இச் சேவையானது மனித சமூகத்தில் அத்தியாவசிய சேவையாகிறது. ஓரிடத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையோ அல்லது பண்டங்களையோ ஒரு இடத்தில் இருந்து எடுத்துச் செல்லவும் வேறு தேவைகளை மேற் கொள்ளுவதற்கும் வெளிநாட்டு அற்றா என்பவற்றில் ஈடுபடவும் செய்வது போக்கு வரத்து சேவையேயாகும். பண்டம் அதிகமாகவுள்ள இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு சென்று பொருட்களின் தேவை பண்டத்தின் கேள்வியை அதிகரிக்கும் செய்வது பண்டத்திற்கான அதிகலாபம் பெறமுடிகிறது.

ஆதிகால மனிதர்கள் பண்டங்களை தலையிலும் தோளிலும் வைத்து சுமந்து சென்றே பரிமாறிக் கொண்டு தூர இடங்களுக்கு பயணம் செய்வதற்கு மிருகங்களின் மீது ஏறி பிரயாணம் செய்யவும் தொடங்கினார். பின்னர் மரச்சில்லு, இரும்புச்சில்லு, காற்றடைத்த சில்லு என்பவற்றை உபயோகித்த நீராவி மின்சாரம், எரிபொருள் போன்றவற்றை பயன்படுத்தி உறுதியாக இயங்க வல்ல வாகனம் பாவனைக்கு வரத் தொடங்கின இதனால் போக்கு வரத்து சேவை அபிவிருத்தியடையத் தொடங்கலாயின.

மூலப் பொருட்களையும் எந்திர சாதனங்களையும் மனித வலுவையும் உரிய காலத்தில் பயன் படுத்தி வர்த்தகர்களினதும் மக்களினதும் தேவையை உரிய காலத்தில் செய்து முடிக்கவும் காலங்கடந்தால் பழுது படுவதற்கு முன் சந்தைக்கு அனுப்பவும். பற்றாக் குறையை நீக்கவும் உல்லாசப் பயணத்துறையைச் சிறப் பட நடத்தவும் மற்றும் வர்த்தகச் சேவைகளும் மெய்ச்சேவைகளையும் இலகுவாக நடைமுறைப்படுத்தவும் போக்கு வரத்து சேவை பயனுள்ளதாகின்றது.

இலங்கைப் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால் தரை, கடல், வான்வழி எனவும் வகுக்கப்பட்டுள்ளது. முதலில் தரை வழியை எடுத்துக் கொண்டால் வண்டிகள் மிதி வண்டிகள் மோட்டார் சைக்கிள் கார்கள், வான்கள் பேருந்து வண்டிகள் லொறிகள், டிராக்டர் இபொதி என்பவற்றை வாகனங்களாக பயன் படுகின்றன. இவைகள் பொருட்களை கொண்டு செல்லப் பயன்படுகிறது இதன் சிறப்பம் கொண்டு செல்லும் செலவு குறைவாக இருப்பதேயாகும் இவற்றுள்மோட்டார் சைக்கிள் குறைந்த செலவுடன் கூடிய வேகத்தைக் கொடுக்கிறது.

போக்கு வரத்தில் அத்தியாவசியமாக பொருள் வசதி, கூடியளவு பாதுகாப்பு, தனி ஒரே வண்டியில் பயணம் செய்யக் கூடியமை கூடிய பொருள் எடுத்துச் செல்லக் கூடியமை கூடிய இதன் சிறப்பம்சமாகும்.

போக்கு வரத்து சாதனங்கள் முக்கிய இடம் வகிப்பது பேருந்து வண்டியாகும் அரசதுறைப் போக்கு வரத்து சேவையை மத்திய போக்கு வரத்துச்சபை நடாத்துகிறது சேவை நடைபெற வேண்டிய பாதைகள் அறவிட வேண்டிய கட்டணம் என்பவற்றை பிராந்திய போக்கு வரத்து சபை தீர்மானிக்கின்றது. 1979இல் தனியார் பேருந்து சேவையில் ஈடுபட அனுமதி அளித்தது இதன் பிரகாரம் 1983இல் தனியார் பேருந்து சேவைக் கிளைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது

இலங்கைத் தனியார்துறை வாகனங்களின் உரிமையாளர் ஒன்று கூடி மோட்டார் வாகனச் சங்கம் (ஒட்டோ மொபைல் அசோசியேசன்) என்பதை நிறுவினர். இது வாகன உரிமையாளர்களின் நலன்களைப் பேணுகிறது தேசிய போக்குவரத்தோடு தொடர்புடைய பொது சேவைகளும் செய்கின்றன. அதாவது ஆபத்தான பாதை பாலம், வாகன பொலிஸ் சேவைக்கான தகவல், தெருக்களின் குறைபாடு என்பவற்றை அரசிற்கு எடுத்துக் கூறுகின்றது.

தெருப் போக்குவரத்தின் மூலம் நாடெங்கும் பரந்த சேவையையும் எந்த அளவான பண்டங்களை, பாரமான பொருட்கள், எந்த சந்தர்ப்பத்திலும் போக்கு வரத்து பயன்படுத்தப் படுகிறது அத்துடன் கட்டுப்பாடு இல்லாமல் வாகனம் செல்வதால் பாதை பழுதடைதல் விபத்து உண்டாதல் என்பன நடைபெறுகின்றன.

புகைவண்டிப் போக்குவரத்தானது பண்டங்களையும், பிரயாணிகளையும் ஏற்றி செல்லப் பயன்படுகிறது அதனால் நினைத்தபோது நினைத்த இடத்திற்கு பயணம் செய்ய முடியாது விபத்து ஏற்படும் பாரிய விபத்து ஏற்படுகிறது

கடல்வழி போக்குவரத்தானது பெரும் அளவான பொருட்களை கொண்டு செல்ல பயன்படுகிறது, இதைப்பயன் பண்டமாற்றுக்க கப்பல் இடவசதி தேவைக்கும் மத்திய பணியகம் .

முக்கிய பங்கும் நிலவப்படுகிறது

வான்வழிப்போக்குவரத்தினால் பிரயாணிகளையும் பொதிகளையும் கொண்டு செ செல்லப்படுகின்றன இதன் மூலம் வெளிநாடுகளுக்கு வேலைக்காக மக்களை ஏற்றி இறக்கும் சே சேவையை நடாத்துகிறது. செலவு கூடியது தவிர்ந்தவாறு குறிப்பிட்ட நேரத்தில் பயணம் செய்யக் கூடியது விபத்து ஏற்படின் பாரிய சேதம் ஏற்படுகிறது. 1969இல் உள்ளூர் விமான சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

## இலங்கையின் வர்த்தகத்தில் போக்குவரத்தின் முக்கியத்துவம்

பொருட்களையும், சேவைகளையும் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்வது போக்குவரத்தாகும். கூட்டாகவுள்ள சமுகத்தில் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும், பண்டங்களை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்து செல்லவும், தொழிலுக்காகவோ, அலுவல்களுக்காகவோ மக்களை போக வரச்செய்வது போக்குவரத்தாகும். பண்டங்கள் அதிகமாகவுள்ள இடத்திலிருந்து அருமையாக உள்ள இடத்திற்கு எடுத்துச் செல்வதும் இப்போக்குவரத்தாகும். இதனால் பொருட்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. எனவே போக்குவரத்தினால் பொருட்களின் பயன்பாட்டுத்தன்மை அதிகரிக்கிறது. மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது போக்குவரத்தினால் மேலும் விரிவடைகின்றது.

ஆதிகால மனிதன் பொருட்களை அங்குமிங்கும் கொண்டு செல்ல தலையையும், தோளையும் பயன்படுத்தினான். அதிபாரமான மரக்கட்டைகளை கொண்டு செல்வதற்கு உருளை வடிவான இருமரக்குற்றிகளை பயன்படுத்தினான். இதனால் மரச்சில்லு, இரும்புச்சில்லு, காற்று அடைத்த றப்பர் சில்லுகள் கண்டுபிடிக்கப்பட்டு நீராவி, எரிபொருள், மின்சாரம் என்பவற்றால் விரைவாக இயங்கும் வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால் போக்கு வரத்து மேலும் விருத்தியடைந்தது எனலாம். இவ்வாகனங்களின் பயன்பாடு வந்தமையினால் மக்கள் தமது தேவைகளை விரைவாக செய்து கொள்ளவும், பொருட்களின் பயன்பாடு குறைந்த அவற்றை விநியோகிக்கவும், அவசர செய்திகளை உடனுக்குடன் தெரியப்படுத்தவும், வெளிநாட்டு சுற்றுலா பயணங்களை சித்திகரமான முறையில் நடைமுறைப்படுத்தவும், வர்த்தக சேவைகளையும், மெய்ச் சேவைகளையும் செவ்வனே நடாத்தவும் இப்போக்குவரத்து உதவுகின்றது.

இலங்கையின் வர்த்தகத்தில் பெரும் பங்களிப்புச் செய்யவும் சேவை போக்குவரத்துச் சேவையாகும். இலங்கையில் மூன்று வகையான போக்குவரத்து காணப்படுகின்றது. அவை தரைவழி, கடல்வழி, ஆகாயவழி என்பனவாகும். இதில் இலங்கையின் உள்நாட்டு வர்த்தகத்தில் தரைவழி போக்குவரத்தும் கடல்வழி போக்குவரத்தும் பெரும் பங்களிப்பு செய்கின்றன. வெளிநாட்டு போக்குவரத்தில் ஆகாயவழி போக்குவரத்தும், கடல்வழி போக்குவரத்தும் பெரிதும் பயன்படுகின்றது. தரைவழி போக்குவரத்தில் புகைவண்டி போக்குவரத்தும், பேருந்து போக்குவரத்தும் பயன்படுகின்றன. இப்போக்கு வரத்துக்கள் நாடு முழுவதும் பரந்திருக்கின்றமையினால் மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளது. கடல்வழி போக்குவரத்தில் மக்கள் ஓரளவு தமது போக்குவரத்தை பெறுகின்றனர்.

இலங்கையின் பலபாகங்களிலும் தொழிற்சாலைகள் பரந்து காணப்படுகின்றன. இவற்றில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நாடு முழுவதற்கு கொண்டு செல்வதற்கு பயன்படுவது போக்குவரத்தேயாம். யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து நாட்டின் பலபாகங்களிலும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே இச்சீமெந்து கடல் வழியாலும், புகைவண்டிபோக்கு வரத்தாலும் கொழும்புக்கும், ஏனைய இடங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள நுகர்வோருக்கு லொறி போன்ற வாகனங்களால் எடுத்து செல்லப்படுகின்றன. பரந்தனில் இரசாயன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் இரசாயன பொருட்களை கொண்டு செல்ல பயன்படுவதும் போக்குவரத்தேயாம். இதே போல் கொழும்பிலிருந்து சீனி, மா, அரிசி என்பன கடல்வழி போக்கு வரத்தினால் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படுகின்றது.

நாட்டின் பல பாகங்களிலும் வாழும் மக்களுக்கு வேறு சேவைகளை வழங்குவது போக்குவரத்தேயாம். உலக நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யவும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் எல்லா இடங்களிற்கும் கொண்டு செல்வதற்கும் பயன்படுவது போக்கு வரத்தேயாம். இதே போன்று ஏற்றுமதி செய்யவும் போக்குவரத்து பயன்படுகின்றது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யும் பொருட்களை கொண்டு சென்று சந்தைப்படுத்தவும் சந்தைப்படுத்திய பொருட்களை மக்கள் வந்து வாங்கவும் போக்குவரத்து பயன்படுகின்றது. இலங்கையின் வர்த்தகத்தில் போக்குவரத்து பெரிதும் பயன்படுகின்றது. தரைவழி போக்குவரத்து நாட்டின் சகலபாகங்களிலும் பரந்துகாணப்படுகின்றமையால் தரைவழி போக்குவரத்து முக்கியத்துவம் பெறுகின்றது. கடல்வழி போக்குவரத்தில் சில வேளைகளில் சூறாவளி, கடற்காற்று போன்றதனால் உள்நாட்டுக்கடல் வழிபாதிக்கப்படும் சந்தர்ப்பம் உண்டு. ஆகாய வழி போக்குவரத்தே செலவில்லாதிருந்தும் விபத்துக்கள் ஏற்படின் பாரியளவாக இருக்கும். இவை எல்லாவற்றையும் கூட்டாக சேர்த்து இலங்கையின் வர்த்தகத்தில் போக்குவரத்து ஒரு முக்கியத்துவம் அடைகின்றது.

"ச. மதிவதனா"

# க ள ஞ் சி ய ப் ப டு த் த ல்

களஞ்சியப்படுத்தல் என்பது உற்பத்தி செய்த பொருட்களை நுகர்வோருக்கு வழங்கப்படுகின்ற வரையில் சேர்த்து வைத்தல், பாதுகாத்தல் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலே ' களஞ்சியப்படுத்தல் ' எனப்படும்.

களஞ்சியப்படுத்தலின் முக்கியத்துவமானது மூலப்பொருட்களை களஞ்சியப்படுத்துவதால் உற்பத்தியை தொடர்ந்து நடாத்த முடிதல், பருவ கால பொருட்களை வழங்குவதற்கு எதிர்காலத்தில் விலை அதிகரிக்கக் கூடிய பொருட்களை களஞ்சியப்படுத்தல் வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக தட்டுப்பாடின்றி வழங்கல் போன்றவற்றிற்கு களஞ்சியப்படுத்தல் அவசியமாகின்றது. களஞ்சியப்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் ஆவன பொருட்களின் தன்மைக்கேற்ப பாதுகாப்பு அளித்தல், இலகுவில் எடுக்க கூடிய முறையில் களஞ்சியப்படுத்தல் பொருட்கள் பழுதடையா வண்ணம் ஏற்ற பாதுகாப்பு வழங்குதல் பொருட்கள் களவு போதலில் இருந்து பாதுகாத்தல் நிறுவனங்களுக்கு அருகாமையில் களஞ்சியங்களை நிறுவுதல், தீபிடித்தல், கறை படிதல், தூசு பிடித்தல் ஆவியாதல் என்பவற்றிலிருந்து பாதுகாத்தல் களஞ்சியப்படுத்தலினால் ஏற்படும் செலவுகளை கவனித்தல், கொள்வனவு விநியோகம் , இருப்பு என்பவற்றை உரிய முறையில் பதிந்து வைத்தல் என்பவற்றை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

களஞ்சியப்படுத்தலினால் விற்பனையாளர் தட்டுப்பாடின்றி பொருட்களை நுகர்வோருக்கு வழங்குதல் , வாடிக்கையாளரின் நன்மதிப்பை பெறமுடிதல் பருவ காலப்பொருட்களை எல்லாக் காலங்களிலும் வழங்குதல் போன்ற நன்மைகளை அடைகின்றான். இதே போல் உற்பத்தியாளன் பெறும் நன்மைகள் ஆவன உற்பத்தியை தொடர்ச்சியாக நடத்த முடிதல் மொத்தவியாபாரிகள் களஞ்சிய வசதிகொண்டிருப்பதனால் உற்பத்திபொருட்களை களஞ்சியப்படுத்தமுடிதல் சந்தைக்குத் தட்டுப்பாடின்றி பொருட்களை விநியோகிக்க முடிதல் போன்றன ஆகும். களஞ்சியப்படுத்தலால் நுகர்வோர் தட்டுப்பாடின்றி பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடிதல், பருவ காலப்பொருட்களை எல்லாக் காலங்களிலும் பெற்றுக் கொள்ளமுடிதல் போன்ற நன்மைகளைப் பெறுகின்றனர்,

களஞ்சியப்படுத்தலின் போது கட்டளையிடும் செலவு பேணுகின்ற செலவு என்பன போன்ற செலவுகள் ஏற்படுகின்றன: களஞ்சியக் காப்பாளரின் கடமைகளாவன கொள்வனவு, விநியோகம், இருப்பு என்பவை பற்றி ஒழுங்காக பதிந்து வைத்தல் இலகுவில் பொருட்களை எடுத்துக்கையாளத்தக்க முறையில் ஒழுங்காக அடுக்கிவைத்தல், பொருட்களின் தன்மைக்கேற்ப ஏற்ற பாதுகாப்பு வழங்கல், பொருட்கள் களவு போதலில் இருந்து பாதுகாத்தல் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும்

தேவையான பொருட்களை பெற்றுக் கொள்ளவும், தேவையான பொருட்களை விநியோகித்தல் போன்ற கடமைகளைப் புரிகின்றான்.

சரக்கிருப்பு அட்டை என்பது ஒவ்வொரு வகைப்பண்டத்திற்கும் ஒவ்வொரு அட்டை காணப்படும். இதில் பொருளின் பெயர், பொருளின் வகை, பொருளின் தரம் குறியீட்டு எண் திகதி, கிடைத்தளவு, விநியோகித்த அளவு இருப்பு என்பவற்றோடு விலைப் பெறுமதியையும் கொண்டிருப்பதே இதுவாகும். பந்தாய அட்டை என்பது ஒவ்வொரு வகை பண்டத்தின் விபரத்தையும் தனித்தனியே கொண்டிருக்காது பல வகைப்பொருட்களின் விபரங்களையும் ஒரு அட்டை சொண்டிருக்கும். இதில் பண்டத்தின் பெயர் வகை தரம் குறியீட்டு இலக்கம் கிடைத்தளவு விநியோகித்த அளவு இருப்பு என்பன காணப்படும். ஆனால் விலையைக் கொண்டிருக்கமாட்டாது. அடுத்த அட்டையான பண்டங்களை வழங்கும் கட்டளை என்பது களஞ்சியத்தில் இருக்கும் பண்டங்களை விநியோகிக்குமாறு எழுத்துருவில் கோரப்படும் கட்டளையே இதுவாகும். இதில் கேள்வி இலக்கம், திகதி, பண்டங்களின் விபரங்கள், அளவு, யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பன காட்டப்படும். பண்டக சாலையை சாதாரண பண்டகசாலை, சுங்கப் பண்டகசாலை, இராணியின் பண்டகசாலை, கட்டுண்ட பண்டகசாலை எனப் பிரிக்கலாம்.

களஞ்சியப்படுத்தலால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. களஞ்சியத்தில் குறைந்தளவு பொருட்களை களஞ்சியப்படுத்துவதாலும், தேவைக்கு அதிகமாக களஞ்சியப்படுத்துவதாலும் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. களஞ்சியப்படுத்தலி உற்பத்தியாளர் வியாபாரிகள் ஆகியோருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

– வி. விநோதினி –

11 ஏ

1991

## ** களஞ்சியப்படுத்தலின் நன்மைகள் **

விளைத்திறமை உள்ள களஞ்சியப்படுத்தலில் சில நன்மைகள் உள்ளன. சந்தையில் காலத்திற்கு காலம் பண்டங்கள் கூடுதலாகவும், குறைவாகவும் இருப்பதற்கு ஏற்றவாறு அவற்றின் விலைகளிலும் ஏற்றம் இறக்கம் ஏற்படும். பண்டங்களின் வளங்கள் அதிகமாகவிருப்பின் விலை குறைவடைதலும் பண்டங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் அவற்றின் விலை அதிகரிப்பதும் பொதுவாக நடைபெறும் நிகழ்ச்சியாகும். பண்டங்களில் வளங்கள் அதிகமாகவுள்ள காலங்களில் மேலதிகத் தொகையை களஞ்சியப்படுத்தலினால் அவற்றின் விலையில் ஏற்படும் கூடிய அதிகரிப்பை குறைத்து உற்பத்தியாளரை ஊக்குவிக்க முடியும். பண்டங்கள் அருமையான காலங்களில் களஞ்சியப்படுத்தல்களிலிருந்து அவற்றை சந்தைக்கு வழங்குவதன் மூலம் விலையேற்றத்தின் பெறுமதியைக் குறைத்து நுகர்வோரைப்பாதுகாக்க முடியும்.

உதாரணம் : உள்நாட்டில் விளையும் செத்தல் மிளகாய் சாதாரணமாக உள்ள காலங்களில் கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் அவற்றைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி விட்டு பின்னர் செத்தல் மிளகாய் அருமையான காலங்களில் அவற்றைச் சந்தைக்கு வழங்கி விலைச் சமநிலையை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றது.

## களஞ்சியப் பொறுப்பாளரின் கடமைகள்

மேலே கூறியவாறு களஞ்சியச் சாலையில் பொறுப்பாகவிருப்பவர் களஞ்சியக் காப்பாளர் அல்லது களஞ்சியப் பொறுப்பாளர் என்று அழைக்கப் படுகின்றார். சிறிய வியாபார நிலையம் ஒன்றின் களஞ்சியப் பொறுப்பாளரின் கருமங்கள் இலகுவானதாக இருக்கின்ற அதேவேளையில் பெரியளவிலான வியாபார நிலையம் ஒன்றில் பெருமளவான பண்டங்களை சேமித்து விநியோகிக்கும் அலுவல்களைக் கொண்ட களஞ்சியப் பொறுப்பாளரின் கருமங்கள் அதிகமாகவிருக்கும். எனினும் எல்லாக் களஞ்சியப் பொறுப்பாளரும் ஆற்ற வேண்டிய பொதுவான கடமைகள் பல உள்ளன. களஞ்சியத்திற்கு வந்து சேரும் பண்டங்களின் படிவங்களுக்கு ஏற்ப அவற்றை பரிசீலனை செய்து பொறுப்பேற்றல், அவற்றைப் பொருத்தமான இடத்திற்கு பொருத்தமான முறையில் அடுக்கி வைத்தல். அவைபற்றிய பதிவுகளை வைத்திருத்தல், போன்றன. அவரது பொறுப்புக்களில் சில அம்சமாகும்,

களஞ்சியத்திலிருந்து விநியோகிக்க வேண்டிய பண்டங்களின் கட்டளை கிடைத்ததும் அவற்றை விநியோகிகுத்தல் அது தொடர்பான பதிவுகளை வைத்தல் என்பன அவரது கடமைகளின் மறு அங்கமாகும். இடைக்கிடை களஞ்சியத்தில் இருக்கும் பண்டங்களின் அளவு தொடர்பாக உரியவிடங்களுக்கு அறிக்கை வழங்கல், களஞ்சியப் பொறுப்பாளரின் இன்னுமொரு கருமமாகும். பண்டங்களுக்கு உச்சப் பாதுகாப்புக் கிடைக்கும்பொருட்டும் வீண் விரயமாதலை இயன்றளவு குறைப்பதற்கு ஏற்றவாறு பண்டங்களை அடுக்கி வைக்கப்பட்டுள்ளனவா என்பதை அவதானித்த இருத்தல் வேண்டும்.

## கையிருப்புக் கட்டுப்பாட்டை விபரித்தல்

உற்பத்தி நிறுவனத்தின் முயற்சியும் வர்த்தக நிறுவனத்தின் முயற்சியும் தங்குதடையின்றி நடைபெற கையிருப்புக் கட்டுப்பாடு மிக முக்கியம். ஒரு வியாபாரத்தின் கையிருப்பினை அதன் தேவை அளவுக்கு மிகவும் அதிகப்படாமலும் அதன் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு குறையாமலும் இக் கையிருப்புக் கட்டுப்பாட்டை பொருத்தமான முறையில் செயற்படுத்தின் முன்னேற திட்டமிட்டு தேவையான கையிருப்பை பெற்றுக் கொள்ள முடியும். இதனால் வியாபார நிறுவனங்கள் கழிவுடன் கையிருப்பை பெறலாம். மேலும் மேலதிக கையிருப்பினால் களஞ்சியப்படுத்தப்படும் செலவு கூடும்.

வர்த்தக நிறுவனமான பண்டகசாலையில் பெறப்படும் கையிருப்புக்கும், வழங்கும் கையிருப்புக்கும், சரியான பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும். பண்டகசாலையிலுள்ள அனைத்துப் பொருட்களின் விபரங்களை அடங்கிய பந்தாய அட்டைகளையும் களஞ்சியப் பொறுப்பாளர் வைத்திருத்தல் வேண்டும்.

– க. தஷிந்த்தா –

ஆண்டு 10

# தொடர்பாடல்

ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்தில் உள்ளவருக்கு தகவல் அனுப்புதல் தொடர்பாடல் ஆகும். இத்தொடர்பாடல் முறை அன்றும் இன்றும் சிறப்புற்று விளங்கி வருகின்றது. முற்காலத்தில் புகை எழுப்புதல், கொடியசைத்தல், முரசறைவித்தல் முதலின தொடர்பாடலுக்கு பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் விரைவாகவும் தெளிவாகவும் செய்திகளை பெற்றுக்கொள்ளவோ அல்லது அனுப்பவோ முடியவில்லை. இதனால் விரைவாகவும் தெளிவாகவும் செய்தியை அனுப்புவதற்கு நவீன சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நவீன தொடர்பாடல் சாதனங்களாவன தொலைபேசி, ரெலக்ஸ் Telex பக்சிமில் Faxcimail போன்றனவாகும்.

நாம் தொடர்பாடல் சாதனமொன்றை தீர்மானிக்கும் போது செய்தி அனுப்புவதற்கான செலவு, செய்தி சென்றடைய வேண்டிய வேகம், செய்தி சென்றடைய வேண்டிய தூரம், செய்தியின் தன்மை, கிடைக்கக்கூடிய தொடர்பாடல் சாதனம் என்பனவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். செய்தி அனுப்பும் இடம் ஒரு தொழிற்சாலையிற்குள்ளா அல்லது வெளிநாடு ஆக இருக்கலாம்.

ஒரு தொழிற்சாலைக்குள் செய்தியை அனுப்பும் போது கட்டளைகள், சுற்றிக்கைகள், அறிவித்தல் பலகை, ஒலி பெருக்கி என்பனவற்றை பயன்படுத்தலாம். இரைச்சல் மிகுந்த தொழிற்சாலை எனின் நிற ஒலி சமிக்ஞைகளைப் பயன்படுத்தலாம். இவை எல்லாவற்றையும் விட மிகவும் சிறந்ததும் நவீனமானதுமான உள்ளக தொடர்பாடல் சாதனம் இன்டர்கொம் ஆகும். இது தொலைபேசியின் அமைப்பை ஒத்துள்ளது. தனியாருக்கு உள்ளகத் தொடர்புகொள்ளலுக்கு தொலைபேசியை பயன்படுத்த சில பாரிய நிறுவனங்கள் உதவுகின்றன. அவை தனியார் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் என அழைக்கப்படும்.

உள்நாட்டின் தொடர்பாடலை நடாத்துவதற்கு தொலைபேசி, செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசித்தந்தி, டெலிபிரின்டர் என்பன பயன்படுத்தப்படுகின்றன. தொலைபேசி வசதியுடைய ஒருவர் இன்னொருவருக்கு தந்தியை அனுப்ப விரும்பின் தபால் கந்தோருடன் தொடர்பு கொண்டு அச்செய்தியை வழங்கின் அத்தபால் கந்தோருக்கு தொலைபேசியூடாக அச்செய்தியைக் கொடுக்கும். பின் அத்தபால் கந்தோர் உரியவருக்கு செய்தியை தந்தி மூலம் வழங்கும். இம்முறை தொலைபேசி தந்திமுறை எனப்படும். தந்திக்குரிய கட்டணம் தொலைபேசிக் கட்டணத்துடன் சேர்த்து அறவிடப்படும். டெலிபிரின்டர் தட்டச்சு இயந்திரம் போன்ற ஒரு தொடர்பு சாதனம் ஆகும். ஒரு தபால் கந்தோரில் இருந்து இன்னொரு தபால் கந்தோருக்கு செய்தியை அனுப்ப இன்னொரு முறை பயன்படுகின்றது. தட்டச்சு மூலம் செய்தியை அடிக்க சேரவேண்டிய தபால் நிலையத்தில் பதிவாகும். இவற்றைவிட உள்நாட்டில் தொடர்பாடலை நடாத்துவதற்கு முகவர் தபால் நிலையங்கள் பொதுமக்களுக்கு உதவுகின்றன. இவை 1977 இருந்தின் தனியார் நிறுவனங்களும் தபால்கந்தோரை நிறுவ அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து நிறுவப்பட்டவை. இம்முகவர் தபால் நிலையங்கள் தபால் விநியோகத்தில் ஈடுபடுவதில்லை. இவை காசுக்கட்டளை என்பனவற்றை விநியோகித்தல், தந்திப்பார்சல்களை பொறுப்பேற்றல், முத்திரை தபால் அட்டைகளை விற்பனை செய்தல், வானொலி, தொலைக்காட்சி அனுமதி பத்திரங்களை வழங்கல் முதலிய சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குகின்றன.

இ

இன்றைய வர்த்தக உலகில் வெளிநாடுகளுடன் தொடர்பாடல் கொள்வதற்கு ரெலக்ஸ், கடல்வழித்தந்தி முறை, பக்சிமெல் என்பன உதவுகின்றன. ரெலக்ஸ் தட்டச்சும் இயந்திரத்தின் அமைப்பை கொண்டது. இவ்வியந்திரத்தில் செய்தியை அடிக்கும் போது மற்றைய ரெலக்ஸ் நாடாவில் தன்னியக்கமான முறையில் பதியும். ரெலக்ஸ் மூலம் செய்தியை அனுப்பும் போது குறைந்த செலவில் விரைவாக செய்தியை அனுப்பலாம். அத்துடன் உடனேயே பதிலையும் பெற்றுக் கொள்ள முடியும். எந்நேரமும் செய்தியை அனுப்ப முடியும். கடல் வழித்தந்தி முறை எனப்படுவது வெளிநாட்டிற்கு தபால் கந்தோர் ஊடாக செய்தியை அனுப்ப பயன்படுத்தப்படும் முறை ஆகும். பக்சிமெல் ஊடாக கடிதங்கள், படங்கள், வரைபுகள் என்பவற்றின் பிரதிகளை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்ப முடியும். குறிப்பிட்ட இடத்திலுள்ள கருவியில் கடிதம், படங்கள், அல்லது வரைபுகள் என்பவற்றை வைத்து அதனை ஒத்த பிரதிகளை மற்றைய இடத்திலுள்ள இல் பெற்றுக் கொள்ளலாம். இதில் 1 நிமிடத்தில் செய்தியை அனுப்பும்.

தொலைத் தொடர்பு திணைக்களம் எனப்படும் ஓர் அமைப்பு பொதுமக்களுக்கு

தொலைத் தொடர்புத் திணைக்களம் எனப்படும் ஓர் அமைப்பு பொது மக்களுக்கு சேவைகளை வழங்குகின்றது. இது ஆரம்பத்தில் தபாலந்தந்தித் தொலைத் தொடர்பு திணைக்களமாக இருந்தது. பின்னர் தபால் திணைக்களமாகவும், தொலைத்தொடர்பு திணைக்களமாகவும் இரு வேறுபட்ட திணைக்களங்களாக பிரிந்துள்ளது. அதிகளவு சேவைகளை மக்களுக்கு வழங்கும் பொருட்டு கம்பனிகளாக மாற்றப்பட்டுள்ளன. இதற்கு இங்கிலாந்தை சேர்ந்தகேபிள் வயலஸ் கொம்பனி ( ) 51% முலதனத்தையும் இலங்கையர் 35% முலதனத்தையும் சர்வதேசநிதிக் கூட்டுத்தாபனம் 14% முலதனத்தையும் பங்களிப்பு செய்துள்ளன.

நாடுகளுக் கிடையிலும், விண்வெளி ஆய்வுகளின் போதும் செய்மதிகள் செய்திகளை விரைவாக வழங்குகின்றன. இலங்கையில் செய்மதி மத்திய நிலையம் பாதுகையிலே உண்டு.

ஒருவர் குறிப்பிட்ட செய்தியை தந்தி மூலம் பலருக்கு அனுப்ப விரும்பின் பலவிலாசத் தந்தி முறை எனப்படும். தந்தியை பயன் படுத்தலாம். இதன் பிரகாரம் அனுப்ப வேண்டிய செய்தியும் செய்தி அனுப்ப வேண்டிய விலாசங்களையும் தபால் கந்தோரில் கையளிப்பின் உரிய செய்தி பலருக்கு அனுப்பி வைக்கப்படும். ஆனால் சகல தந்திகளையும் விநியோகிக்கும் தபால் கந்தோர் ஒன்றாக இருத்தல் வேண்டும். இம்முறையூடாக செய்தியினை பலருக்கு குறைந்த கட்டணத்தில் அனுப்பி வைக்கலாம்.

இவ்வாறாக பல்வகை நவீன முறைகளில் தொடர்பாடலும், தொடர்பாடல் சாதனங்களும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. இதனால் வர்த்தகமும் சிறப்புற்று விளங்குகின்றது. எனவே தொடர்பாடல் சாதனங்கள் வர்த்தகத்திற்கு இன்றியமையாததாகும். தொடர்பாடல் சாதனங்கள் உலகின் பல்வேறு நாடுகளை ஒன்றிணைக்கின்றன.

# விளம்பரம்

ஆரம்பகாலத்தில் ஓர் இடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகள் அவ்விடத்திலேயே விநியோகிக்கப்பட்டன. இதனால் இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகள் பற்றிய விபரங்களை நுகர்வோருக்கு நேரடியாகக் கூறி விற்பனையை மேற்கொள்ள முடிந்தது. ஆனால் இப்பொழுது ஓர் இடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகள் நாட்டில் வெவ்வேறு பகுதிகளிலோ அல்லது உலகின் வெவ்வேறு பகுதிகளிலோ விநியோகிக்கப்படுகின்றன. இதனால் ஒரு பொருளின் உபயோகம், அதனை பாவிக்கும் முறை அதன் விலை போன்ற விபரங்களை நுகர்வோருக்கு தெரியப்படுத்தி விற்பனையை மேற்கொள்ள வேண்டியதாக உள்ளது. எனவே இங்கு பொருட்களை பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு வழங்கி அதன் மூலம் விற்பனையை தூண்டவேண்டியதாய் உள்ளது. இச் செயற்பாட்டையே விளம்பரம் என்பர்.

விளப்பரங்கள் பல சந்தர்பங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கியமாக பொருளின் சிறப்புத்தன்மையை நுகர்வோருக்கு எடுத்துக்கூறுவோருக்கு பொருளை வாங்கும் படி நுகர்வோரைத் தூண்டுவதற்கும், பொருளின் போட்டி தன்மையை அதிகரிப்பதற்கும் விற்பனையை அதிகரித்து இதன் மூலம் கூடிய லாபத்தை அடையவிப்பதற்கும் ஆகும். விளம்பரம் இதை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி சினிமா, சஞ்சிகைகள், சுவரொட்டிகள், துண்டுபிரசுரங்கள், மின்சாரவிளக்குகள் போன்றவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றை விளம்பர சாதனங்கள் என அழைப்பர். இச் சாதனங்களின் ஊடாக விளப்பரத்தை மேற்கொள்ளும் போது சில காரணிகளை கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. அவையாவன: விளம்பர சாதனத்தை தெரிவு செய்யும் போது செலவினையும் கருத்திற்கொள்ள வேண்டும். செலவினை அடிப்படையாக கொண்டே விளம்பர சாதனத்தை தெரிவு செய்ய வேண்டும்.

விளம்பர சாதனத்தை தெரிவு செய்யும் போது பொருட்களின் தன்மையை கருத்திற் கொள்ள வேண்டும், பொருளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டே பொருத்தமான விளம்பரசாதனத்தை தெரிவு செய்ய வேண்டும். உதாரணமாக பெண்கள் விரும்பி பாவிக்கும் பொருட்களை சஞ்சிகைகளில் விளம்பரம் செய்தல் சிறந்தது. விளம்பர சாதனத்தைக் தெரிவு செய்யும் போது அச் சாதனம் கிடைக்க கூடியதா என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். கிடைக்க முடியாத விளம்பர சாதனத்தில் விளம்பரம் செய்ய முடியாது. உதாரணமாக இலங்கையில் 1975ல் தொலைக்காட்சியை பயன்படுத்தி விளம்பரத்தை மேற்கொள்ள முடியாது.

விளம்பர சாதனத்தை தெரிவு செய்யும் போது நுகர்வோரின் இயல்பினையும் கருத்திற்கொள்ள வேண்டும். கருத்திற் கொள்ள வேண்டும். அதாவது சில நுகர்வோர் கல்வி அறிவு உடையவர்கள் ஆகவும் சிலர் கல்வி அறிவு குறைந்தோர் ஆகவும் காணப்படுகின்றனர். எனவே நுகர்வோரின் இயல்புக் கேற்ற வேறு விளம்பர சாதனத்தை தெரிவு செய்ய வேண்டும் விளம்பர சாதனத்தினை தெரிவு செய்யும் போது போட்டியாளரின் விளம்பர முறையினையும் கருத்திற்கொள்ள வேண்டியது சிறந்ததாகும். பொருட்களுக்கான அல்லது சேவைக்குக்கான விளம்பரங்களை மேற் கொள்ளும் போது கவர்ச்சியான முறையில் மேற்கொள்ள வேண்டும். மேலும் குறைந்த செலவில் மேற்கொள்வதுடன் எல்லோருக்கும் விளம்பரமானதும் சென்றடைய கூடியவகையிலும் மேற்கொள்வது சிறந்தாகும். விளம்பரமானது அது தெரிவிற்படும் முறையை கொண்டு வகைப்படுத்தியும் கூறுகின்றது. அவையாவன:-

1. நிறுவன ரீதியான விளம்பரம்.
   ஓர் குறிக்கப்பட்ட நிறுவனத்தை பற்றி மக்கள் உயர்வாக எண்ணுவதற்காக அந் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் விளம்பரம் நிறுவனரீதியான விளம்பரம் எனப்படும். உ-ம்:- மரங்களை நாட்டுங்கள்
   "மில்க்வைற்"
2. தேவை பற்றிய விளம்பரம்.
   குறிக்கப்பட்ட ஒரு தொழிலை மேற்கொள்வதற்காக அல்லது ஒருவரை நியமிப்பதற்காக மேற் கொள்ளப்படும் விளம்பரம் தேவை பற்றிய விளம்பரம் எனப்படும். உ-ம் " எமது உற்பத்தி பொருளை யாழ்ப்பாணத்தின் விநியோகிப்பதற்கு முகவர் தேவை! "சோயாக்கம்பனி யப்பான்"
3. பொருட்களை பற்றிய விளம்பரம்.
   பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு அதன் சிறப்புத்தன்மையை எடுத்துக்கூறி விளம்பரம் செய்தலை பொருள் பற்றிய விளம்பரம் என அழைப்பர். உ-ம் நீடிய பாவிக்கும் சொகுசான ஓட்டத்திற்கும் நொரதோன் டயர்களை வேண்டி பாவியுங்கள்.

விளப்பரமானது பல்வேறு விளம்பர சாதனங்களின் ஊடாக மேற் கொள்ளப்படுகின்றது.

விளம்பரமானது பல்வேறு விளம்பர சாதனங்களின் ஊடாக மேற் கொள்ளப் படுகின்றது. இருப்பினும் இவற்றின் ஒரு சில விளம்பர சாதனங்களை எடுத்து அவற்றின் மூலம் விளம்பரங்களை மேற்கொள்வதனால் ஏற்படும் விளைவுகளை பற்றி ஆராய்ந்து பர்ர்ப்போம்.

பத்திரிகை விளம்பரம்:- பத்திரிகை விளம்பரமானது செலவு குறைந்த விளம்பரமாகும் ஆனால் இவ்விளம்பரம் கல்வி அறிவுள்ள மக்களை மட்டுமே சென்றடையும், அத்துடன் இதனை அவதானிப்பவரும் குறைவாக உள்ளனர். ஏனெனில் இதன் ஆயுட்காலம் குறை வாக உள்ளது. (ஒரு நாள்)

தொலைக்காட்சி விளம்பரம்:- தொலைக்காட்சி மூலம் பொருட்களை நேரடியாக நுகர்வோர் பார்ப்பதற்கும் பொருட்களை பற்றிய சிறப்பம்சங்களை நுகர்வோருக்கு அறிவிக்கவும் முடியும். இதனால் அவ் விளம்பரம் நுகர்வோர் மத்தில் அதிக தாக்சத்தை ஏற்படுத்தும். தொலைக்காட்சி விளம்பரம் ஓர் செலவு கூடிய விளம்பரமாகும். அத்துடன் தொலைக்காட்சி மூலம் விளம்பரத்தை மேற்கொண்டால் அதனை வசதி கூடிய மக்கள் மட்டுமே அறிந்து கொள்வர். எனவே தொலைக்காட்சி விளம்பரம் சகல மக்களையும் சென்றடையமாட்டாது.

வானொலி விளம்பரம்:- வானொலி விளம்பரம் ஆனது தொலைக்காட்சி விளம்பரத் தைப் பார்க்கிலும் செலவு குறைந்த விளம்பரமாகும். வானொலி மூலம் விளம்பர த்தை மேற் கொண்டால் கல்வியறிவு குறைந்த மக்களையும் சென்றடையக் கூடியதாய் உள்ளது வானொலி விளம்பரத்தின் மூலம் பொருட்களைப்பற்றி அறிமுகப்படுத்தக்கூடியதாய் உள்ளதே தவிர அவற்றைக் காண்பிக்க முடியாதுள்ளது.

இன்றைய நவீன காலத்தில் அதிகரித்துவரும் மக்களின் தேவைக்கு ஏற்ப புதிய புதிய பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் விநியோகிக்கப்படுவதால் அப்பொருட்கள் பற்றியும் அவற்றின் உபயோகம் பற்றியும் நுகர்வோருக்கு அறியப்படுத்துவதற்கு விளம் பரம் முக்கியமானகக் காணப்படுகிறது.

" தி. சுதந்தினி "

"1124"
25.09.1991.

# "வர்த்தகத்தில் நவீன தொடர்பாடல்களின் பங்கு"

மனித சமுதாயத்தை பொறுத்த வரையில் தொடர்பாடல்கள் வர்த்தக விருத்திக்கு உதவுவதாக உள்ளது. இத்தொடர்பாடலானது ஆதிகாலந்தொட்டு வர்த்தகத்திற்கு பங்களிப்புச் செய்து வருகிறது. தொடர்பாடல் என்றால் ஒருவர் இன்னொருவருடன் கலந்துரையாடலே தொடர்பாடல் எனப்படும். தொடர்பாடலினால் வர்த்தகத்திற்கு ஏற்படும் நன்மைகளாவன, புதிய வர்த்தகப் பொருட்கள், புதிய வர்த்தக கம்பனிக்ள், அமையும் இடங்கள், இருக்கும் இடங்களை அறிய உதவுகிறது. இவ்வாறு உதவும் தொடர்பாடல் கருவிகளில் ஒன்றை எடுத்து நோக்குவோமாயின்.

பக்ஸ்மயில் தெலக்ஸ் போன்ற கருவிகளில் பக்ஸ்மயிலானது ~~[illegible]~~ படப்பிரதியெடுக்கும் இயந்திரம் போன்றதும் அனுப்புவரின் பக்ஸ்மயிலிருந்து பெறுபவரின் பக்ஸ்மயிலில் 15 செக்கனில் எழுத்துருவில் எதுவித பிழையுமின்றிகிடைக்கின்றது. இதே போல் தெலக்ஸ் இயந்திரமும் அனுப்புவரின் இயந்திரத்திலிருந்து பெறுபவரின் இயந்திரத்தில் எழுத்துருவிலேயே வருகின்றது ஆனாலும் இது செல்வதற்கான நேரம் 3 நிமிடங்களாகவே உள்ளது. ஆயினும் பழைய கால தொடர்பாடலை வர்த்தகத்திற்கு பங்களிக்க செய்வோமானால் அவை நேரம் வீணாகுதலும் வன்சிரமங்கள் ஏற்படுதலுமாகவே உள்ளது. ஆனால் நவீன தொடர்பாடல் கருவிகளோ இருந்த இடத்தில் இருந்தே வெளி நாட்டு வர்த்தகத்துடன் தொடர்பு கொளவ்தற்கு இலகுவானதாக இருக்கின்றது.

இவ்வாறு நாம் புதிய வர்த்தகப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கோ இல்லது நாம் உற்பத்தி செய்த புதிய வர்த்தகப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கோ அல்லது வேறு நாடுகளில் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கோ தொடர்பாடல் ஓர் சிறந்த கருவியாக உள்ளது. தொடர்பாடலினால் பல வெளிநாட்டு வர்த்தக கம்பனிகளுடனும் வெளிநாட்டு வர்த்தகர்களுடனும் தொடர்பேற்படுத்தும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு நாம் நவீன தொடர்பாடலினால் வர்த்தகத்திற்கு நன்மையே உண்டு. தீமை கிடையாது மனிதனின் ஈடுபாடு இல்லாமலே தொடர்பாடலில் இன்டர்க்கம் எனும் கருவி உள்ளது. இவ்வாறு நவீன தொடர்பாடலகளின் கருவிகள் காலத்திற்கு காலம் நவீனப்படுத்தப்படுவதனால் வர்த்தகம் போன்ற வியாபாரங்களை துரிதப்படுத்துவதற்கும் தொடர்பாடல் முக்கியமானதாகும்.

வர்த்தகமானது எமது நாட்டைப் பொறுத்த வரையில் குறைவாகவே உள்ளது ஆனாலும் யப்பான் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வர்த்தகம் அளவுக்கு மேலாகவே காணப்படுகின்றது. இவ்வாறு இளவுக்கு மேலாக காணப்படும் வர்த்தக் பொருட்களை அந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நாமே அந் நாட்டுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. இவ்வாறான சிரமங்களை குறைப்பதற்காகவே தொடர்பாடல் வர்த்தகத்தில் பயன் படுத்தப்படுகின்றது. இவ்வாற பயன்படுத்தப்படும் தொடர்பாடல்கள் நவீனமானதாக இருப்பதனாலேயே எமக்கு ஏற்படுகின்ற சிரமங்களை குறைப்பதற்கு டெலக்ஸ், பக்ஸ்மயில் போன்ற தொடர்பாடல் கருவிகள்ஐ பயன்படுத்துவதனால் 3நிமிடத்திலும் 15 செக்கனிலும் யப்பான் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளிற்கு செய்தியை உடன் அனுப்புவதும் அனுப்பிய செய்திக்கு உடன் பதில் பெறுவதும் இலகுவானதாக இருக்கிறது.

இதனால் பழைய கால தொடர்பாடல்களை பயன்படுத்துவதால் வர்த்தகத்திற்கு வீண் சிரமங்களும், நேரங்களும் வீணாகுவதனால், நவீன தொடர்பாடல்கள் வர்த்தகத்தில் பயன் படுத்துவது நன்மையே பயக்குகின்றது. எனவே வர்த்தகத்திற்கு நவீன தொடர்பாடல்களினால் அளவிற்கு அதிகமான பங்கு ஏற்படுகின்றது.

"கமலேஸ்வரி"

# வரவு செலவுத் திட்டம்

வரவு செலவுத் திட்டம் என்பது ஒரு நாட்டின் அரசாங்கம் அடுத்த வரும் நிதியாண்டில் எவ்வெவ்த் துறைகளிலிருந்து எவ்வளவு வருமானத்தைப் பெறலாம். எவ்வெவ் துறைகளுக்கு எவ்வளவு செலவுகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றிய மதிப்பீட்டு அறிக்கை அல்லது திட்டவணை என அழைக்கப்பட்டு வந்தது. அதற்கும் மேலாக ஒரு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்கம் செய்யும் கொள்கை விளக்கமும் திறவு கோலும் அதுவாகும். இன்னோர் வகையில் நோக்கின் அரசின் பிரதான நோக்கங்கள் குறித்து வளங்கள் திசை திருப்பப்படுவதற்கான திட்டம் என குறிப்பிடப்படலாம்.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் தன்மையினைக் கொண்டு மிகை நிலை வரவு செலவுத்திட்டம், சமநிலை வரவு செலவுத்திட்டம், குறைநிலை வரவு செலவுத் திட்டம் (பற்றாக்குறை) என மூன்று வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றது. மிகைநிலை வரவு செலவுத் திட்டம் என்பது குறித்த நிதியாண்டில் பல்வேறு துறைகளில் இருந்தும் பெறுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் செலவீட்டு மதிப்பீட்டைவிட கூடுதலாக இருப்பதைக் குறிக்கும். சமநிலை வரவு செலவுத் திட்டம் என்பது மதிப்பீட்டு வருமானமும் செலவினமும் சமமாக இருத்தலைக் குறிக்கும். ஆனால் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பது பெறுவதற்காக மதிப்பீடு செய்த வருமானத்தை விடவும் செலவீட்டு மதிப்பீடு கூடுதலாக இருத்தலைக் குறிக்கும். மிகைநிலை வரவு செலவுத் திட்டம் அல்லது சமநிலை வரவு செலவுத்திட்டம் ஏற்படும் சாத்தியப்பாடு நடைமுறையில் மிகவும் அரிதானதே.

1930களில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தத்தில் இருந்து நாடுகளை விடுவிக்க ஜே.எம்.கெயின்ஸ் என்ற பொருளியல் அறிஞரினால் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பின்பு இரு தசாப்தங்களிற்கு மேலாக பொருளாதார அபிவிருத்தி நோக்கில் பல நாடுகளில் இத்தகைய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் அரசாங்கம் செலவுகளை அதிகரிக்கும் பொழுது அது பொது மக்களது வருமானத்தை அதிகரிக்கச் செய்யும், அதன் மூலம் பொது மக்களது வருமானத்தை கொள்வனவு சக்தி அதிகரிக்கும். கொள்வனவு சக்தி அதிகரிப்பானது நாட்டின் விலை மட்டத்தினை உயர்வடையச் செய்யும். விலை மட்ட உயர்வானது உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும். உற்பத்தி அதிகரிப்பு என்பதே பொருளாதார வளர்ச்சியாக இருக்கும். இது மட்டும் அன்றி வேலை வாய்ப்பை அதிகரித்தல், சென்மதி நிலுவைப் பிரச்சனையைக் குறைத்தல், விலை மட்ட உறுதியினைப் பேணுதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சேமிப்பு முதலீட்டை உயர்த்துதல், வருமான ஏற்றத்தாழ்வை குறைத்தல் என்பன இலங்கை போன்ற விருத்தியடைந்துவரும் நாடுகளின் நோக்கமாக இருந்து வந்தது. இவற்றுடன் இலங்கை அரசின் அண்மைக்கால வரவு செலவுத் திட்டங்கள் தன்மையும், தனது மக்களையும் பாதுகாப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது:

வரவு செலவுத் திட்டத்தின் நோக்கங்கள் வருமானங்களைப் பெறுதல், செலவுகளை மேற்கொள்ளுதல், பற்றாக்குறைக்கு நிதி காணல் போன்றவைகளில் உள்ளடக்கப்படும். கருவிகள் ஊடாக அடையப்படலாம். ஒரு நோக்கம் நிறைவேற்றப்படும்போது அதனுடன் சேர்ந்து ஏனைய நோக்கங்கள் நிறைவேற்றப்படலாம் அல்லது சிலவற்றுக்கும் பாதகமாக அமையலாம். எனினும் எந்த நோக்கமாகப் படுகிறதோ அது தீர்க்கப்படலாம்.

வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெறும் வருமானம், செலவு, பற்றாக்குறைக்கு நிதிகாணல் போன்ற அம்சங்களை இலங்கையுடன் சற்றுத் தொடர்பு படுத்தி நோக்குதல் பொருத்தமானதாகும். அரசாங்கம் பெறும் எல்லா வருமானங்களையும் அரசிறை வருமானம் என அழைப்பதுண்டு. இவ்வருமானத்தினை

1) வரியரசிறை வருமானம்.
2) வரியல்லா அரசிறை வருமானம் என இரு வகையாகப் பிரித்து நோக்கலாம்.

வரியறைசிறை வருமானம் என்பது: அரசாங்கம் வரிவருமானம் என்பது அரசாங்கம் வரி வருமானமாகப் பெறும் அனைத்து வரிகளையும் உள்ளடக்கும். வரிகள் பெறப்படும் முறையினைக் கொண்டு அவைகளையும் மேலும் நேர்வரி வருமானம், நேரில்வரி வருமானம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். நேர்வரி என்பது அரசாங்கம் பொதுமக்கள் மீது நேரடியாக விதிக்கும் வருமான வரி, சொத்து வரி, நன்கொடை வரி, மரணச் சொத்துவரி போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். நேரில்வரி என்பது பொருட்கள் சேவைகளை நுகரும் மக்கள் மீது மறைமுகமாக விதிக்கப்படும் உற்பத்திப் பொருட்கள் மீதானவரி, ஏற்றுமதிவரி, இறக்குமதிவரி, வியாபார மொத்த விற்பனை வரி போன்ற வரிகளை உள்ளடக்கியதாக இருக்கும். வளங்களை திசை திருப்பும் வகையில் வரி விதிப்பதன் மூலம் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதும் வரிச் சலுகை அளிப்பதன் மூலம் ஊக்குவிப்பதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வரி அல்லா வருமானம் என்பது அரசின் உற்பத்தி இலாபம், வியாபார இலாபம், பங்கு இலாபம், தரகு, அனுமதிக் கட்டணம், அபராதம், சொத்து விற்பனை, சமூக உதவு தொகைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இலங்கை அரசின் மொத்த வருமானம் அதிகரித்துச் செல்லும் போக்கை கொண்டதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக 1981ம் ஆண்டுக்குப் பின் துரித அதிகரிப்பைக் கொண்டு காணப்படுகின்றது. 1981ல் 16.2 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட அரசின் மொத்த வருமானம் படிப்படியாக அதிகரித்துச் சென்று. 1985ல் ஒரு மடங்கு மேலாக அதிகரித்து 38 மில்லியன் ரூபாவாகவும், 1986ல் 37.2 மில்லியன் ரூபாவாகவும் 1987ம் ஆண்டுக்கு 44.1 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. எனினும் 80% மேற்பட்ட வருமானங்கள் வரி வருமானங்களாகவே காணப்படுகின்றன. வரிவருமானங்களிலும் 80% மேற்பட்டவை நேரில்வரி வருமானங்களாகவே காணப்படுகின்றன. நேர் வரிகளின் பங்கு குறைவாக இருப்பதற்கு இலங்கையில் 40%மானோர் வருமான அடிப்படையில் வறுமைக் கோட்டிற்கு கீழாக இருப்பதும் வருமானவரி உற்ற வரம்பு அதிகரிக்கப்பட்டமையும், அரச கூட்டுத்தாபன திணைக்கள ஊழியர்களது வருமானத்திற்கு வரி விலக்களிக்கப்பட்டமையும் காரணமாகும். அதே வேளை நேரில்வரியின் பங்கு அதிகரித்தமைக்கு தனியார் துறை நடவடிக்கைகள் அதிகரித்தமையும் ஏற்றுமதிவரி, இறக்குமதிவரி அதிகரித்தமையும் பிரதான காரணங்களாகும்.

அரசாங்கம் வருமானத்தை பெறுவது மட்டுமன்றி பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பல்வேறு துறைகளுக்கும் செலவுகளையும் மேற்கொண்டு வருகின்றன. அரசின் இத்தகைச் செலவுகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1) மீண்டெழும் செலவு (நடைமுறைச் செலவு)
2) மூலதனச் செலவுகள் என்பன அவை இரண்டும் ஆகும்.

மீண்டெழும் செலவு என்பது ஒரே விதமான செலவுகள் ஒருவருட காலத்தில் திரும்பவும் ஏற்படுவதைக் குறிக்கும். உதாரணமாக வாட்கை சம்பளம் போன்ற செலவுகளைக் குறிக்கலாம். மூலதனச் செலவு என்பது ஒரு வருட காலத்தில் திரும்பவும் ஏற்படாத நீண்ட காலத்திற்குப் பயன்தரக்கூடிய சொத்துக்களைக் கொள்வனவு செய்ய அல்லது உருவாக்க ஏற்படும் செலவுகளைக் குறிக்கும். உதாரணம் காணி, கட்டிடம், தளபாடம், இயந்திரங்கள் அணைக்கட்டுகள் போன்றவற்றின் மீதான செலவினங்களைக் கொண்டதாக இருக்கும். இவ்விரு செலவினங்களைக் கொண்டே மொத்த செலவினங்கள் துரித அதிகரிப்பைக் கொண்டு காணப்படுகின்றது. 1977ம் ஆண்டு 9.8 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மொத்தச் செலவினங்கள் 1980ல் மூன்று மடங்கு மேலாக அதிகரித்து 30.3 மில்லியன் ரூபாவாக அதிகரித்துக் காணப்பட்டது. பின்பு 1984ல் 33.6 மில்லியன் ரூபாவாகவும், 1985ல் 63.8 மில்லியன் ரூபாவாகவும். 1986ல் 65.3 மில்லியன் ரூபாவாகவும், 1987ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீடு 72 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. மூலதனச் செலவினங்களும் மீண்டெழும் செலவினங்களும் இடையிடையே சிறிய ஏற்றதாழ்வைக் கொண்டு காணப்பட்டாலும் ஏறக்குறைய சம பங்காகவே காணப்படுகின்றது. மொத்தச் செலவு அதிகரிப்புடன் ஒப்பிடும் போது பாதுகாப்புச் செலவினங்கள் வேகம் கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. 1976ம் ஆண்டு 1 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பாதுகாப்புச் செலவானது 1986ல் 5.8 மில்லியன் ரூபாவகவும் 1987ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினம் 10 மடங்கு மேலாக அல்லது சராசரி வருடாந்தம் 100% அதிகரிப்பைக் கொண்டு காணப்படுகின்றது. இது மட்டும் அன்றி மொத்தசெலவினத்தில் பாதுகாப்புச் செலவின் பங்கும் கணிசமான பங்கினை வகிக்கின்றது. 1986ம் ஆண்டு மொத்தச் செலவினத்தில் 11.5%மாகக் காணப்பட்டது. பாதுகாப்புச் செலவினம் 1987ம் ஆண்டுக்கான செலவினத்தில் 14.9%மாக அதிகரித்துக் காணப்படுகின்றது. பாதுகாப்பு என்ற பேரில் நாளாந்தம் சராசரி 3 கோடி ரூபாவை அரசாங்கம் செலவு செய்து வருகின்றது. இதன் மூலம் அரசின் இராணுவ நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

மொத்தத்தில் நோக்கும் போது வருமானங்களும் செலவீனங்களும் போட்டி போட்டுக் கொள்கின்றன. ஆனால் செலவீனங்களுடன் வருமானம் போட்டிபோட முடியாது. தோல்வியைத் தழுவிக் கொள்வதானால் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இவ்வாறு வருமானத்துக்கும் செலவுகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையென அழைக்கப்படுகிறது. இதனையும் இரு பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1) வரவு செலவுத் திட்டத்திற்கேற்ப முந்திய பற்றாக்குறை.
2) வரவு செலவுத் திட்டத்திற்கேற்ப பிந்திய பற்றாக்குறை
என்பனவாகும்.

இதில் உள்ள முந்திய பற்றாக்குறை என்பது அரசாங்கத் திணைக்களங்களதும், கூட்டுத்தாபனங்களினதும், ஏனைய பொறுப்பு முயற்சிகளினதும் மதிப்பீட்டு வருமானத்திற்கும் செலவீட்டும் உள்ள வித்தியாசத்தைக் குறிக்கும். இதனை நிதி அமைச்சர் புதிய வரிகள், பழைய வரி மாற்றங்கள், செலவுக் குறைப்பு என்பவற்றின் மூலம் மாற்றங்களைச் செய்வார். அத்தகைய மாற்றங்கள் செய்தபின்பும் பற்றாக்குறை இருக்குமாயின் அதுவே வரவு செலவுத் திட்டத்திற்கு பிந்திய பற்றாக்குறையாக இருக்கும். இப் பற்றாக்குறையைக் கொண்ட வரவு செலவுத் திட்டத்தையே நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். இத்தகைய பற்றாக்குறை காலத்துக்கு காலம் அதிகரித்து வந்துள்ளது. 1977ல் 3.1 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட பற்றாக் குறை 1986ம் ஆண்டில் 29.8 மில்லியன் ரூபாவாக ஏறக்குறைய 10 மடங்கு கொண்ட அதிகரிப்பைக் காண்டுகின்றது. இவ்வதிகரிப்பு வருமான அதிகரிப்பு செலவீட்டு அதிகரிப்பு வேகத்தையும்விட கூடியதொன்றாகும். வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறைக்கு பல்வேறு மூலங்களினூடாக நிதி காணப்படலாம். இவற்றையும் இரு பெரும் பிரிவாகப் பிரித்து நோக்கலாம்.

1) உள்நாட்டு மூலகங்கள்.
2) வெளிநாட்டு மூலகங்கள் என்பனவாகும்.

உள்நாட்டு மூலகங்களையும் உள்நாட்டுச் சந்தைக் கடன், உள்நாட்டு சந்தையில்லாக்கடன் எனப் பாகுபடுத்தலாம். உள்நாட்டுச் சந்தைகளையும் மேலும்

1) உள்நாட்டு சந்தையில் வங்கித்துறைக்கடன்.
2) உள்நாட்டு சந்தையில் வங்கித்துறையல்லாக்கடன். எனவும்

பாகுபடுத்தப்படுகின்றன. இத்துறைக் கடன்கள் பணவீக்கத்தை உண்டு பண்ணுவதால் பெருமளவு விரும்பப் படுவதில்லை. ஏனைய வங்கியில்லாத்துறைக் கடன்களும் சந்தையில்லாக் கடன்களும் விருப்பத் தெரிவுகளாக இருக்கும். ஏனெனில் அவை வீக்கத்தை உண்டுபண்ணாத மூலகங்கள் ஆகும்.

வெளிநாட்டு மூலகங்கள் என்பது திட்ட உதவி, பண்ட உதவி, தொழில்நுட்ப உதவி என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இவைகளை வீக்கத்தை உண்டுபண்ணாத மூலகங்கள் ஆகும். எனினும் வெளிநாட்டு உதவியில் 25% மேற்பட்டவை இராணுவ தளபாட உதவிகளாக இருப்பதனால் வீக்கத்தைக் கட்டுப்படுத்த பயன்படாது. மாறாக உற்பத்தியை அளிப்பதால் தவறான சாதன ஒதுக்கீடு எனலாம். மேலும் விருத்தியடைந்த நாடு விருத்தியடைந்துவரும் நாடுகளில் குறிப்பாக இலங்கை பெறும் உதவிகள் இராணுவ உதவிகளாக இருப்பதனால் வெளிநாட்டு உதவியெனக் கூற முடியாது. பற்றாக்குறையிலும் நிதியிட்டம் செய்யப்படாத ஒரு பகுதி விடப்படுமாயின் அதனை பாலம் இடப்படாத இடைவெளியென அழைப்பர். அது ஒரு சிறுபகுதியாகக் காணப்படுவதனால் பெருமளவு தாக்கத்தை உண்டு பண்ண மாட்டாது.

செலவீடுகளும் வெளிநாட்டு உதவிகளும் அதிகரித்து வருவதால் அண்மைக்கால பற்றாக்குறை கொண்ட வரவு செலவுத் திட்டமானது சென்மதி நிலுவைக் குறைப்பு விலை மட்டஸ்திரம், வாழ்க்கைத்தரம் வருமான ஏற்றத்தாழ்வு குறைப்பு என்பவற்றை ஏற்படுத்துவதற்குப் பதில் மோசமடைந்தே அண்மைக்கால இலங்கையில் தொல்லை தரும் பிரச்சனைகளாக இருந்து வருகின்றன. இதற்கு நிரந்தரத் தீர்வு புதிய வரவு செலவுத் திட்டம் ஒன்றை உருவாக்குவதன் மூலமே ஏற்படுத்த முடியும் அது வரை தீராத பிரச்சனைகள் தொடர்ந்தே இருக்கும்.

ச. அஜா

## யாழ்குடா நாட்டின்பொருளாதார அபிவிருத்திக்குரிய ஆலோசனைகள்.

யாழ்குடா நாடானது மூன்றுபக்கங்கள் கடலால் சூழப்பட்டு ஒரு பகுதி நிலத்துடன் தொடர்புடையது எனவே யாழ்ப்பாணம் கடல்வளம் நிறைந்த பிரதேசமாகும். எனவே யாழ்ப்பாணத்தில் போதியளவு மீன் வளமும் காணப்படுகிறது. இத்துடன் யாழ்ப்பாணத்திலே சில சில கனிய வளங்களும் காணப்படுகின்றன. விவசாயத்தை பொறுத்த வரையிலும் யாழ்ப்பாணத்தில் ஓரளவு அபிவிருத்தி அடையக் கூடிய வாய்ப்பு உண்டு. இவற்றை விட யாழ் குடா நாட்டில்உள்ள மக்களிடம் போதியளவு மூளை வளம் காணப்படுகின்றது. எனவே யாழ் குடாநாடு பொருளாதார அபிவிருத்தியடைவதற்கு பல வழிகள் காணப்படுகின்றன.

கடல் வளம் கொண்ட யர்ழ்குடாநாடு மின்சக்தியின்றி தற்போது தவித்துக் கொண்டிருக்கின்றது. எனவே கடலலையைக்கொண்டு மின் சக்தியை பெற்றுக்கொள்ள முடியும் இவ்வாறான கடலலை மின் சத்தி வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இந்து சமுத்திரத்திலிருந்து வரும் தென் மேல் பருவக் காற்று மழை இலங்கையின் மத்திய மலை நாட்டு பிரதேசத்திற்கு மழைத் கொடுத்து விட்டு யாழ் குடாநாட்டின் மீது வறண்ட காற்றாக வீசுகின்றது. இதை பயன்படுத்தி காற்றாடிகளின் உதவியுடன் மின் சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். இவற்றை விட எமக்கு இயற்கை அன்னை அளிக்கும் பெரும் கொடை சூரிய சக்தி, இந்த சூரிய சக்தியை மூலப் பொருளாகக் கொண்டு சூரியகலங்களைப் பயன்படுத்தி மின் சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த சூரிய சகதியானது பயன்படுத்த பயன்படுத்த குறைந்து செலலாதது, அழியாதது இவற்றை விட கழிவுப்பொருட்களைப் பயன் படுத்தி உயிரியல் வாயு தயாரிக்க முடியும். உயிரியல் வாயுவை தயாரித் பின் எஞ்சும் கழிவை விவசாயத்திற்கு பயன்படுத்தலாம். சிறந்த வளமாக்கியாக பயிர் செழிப்புற்று வளர உதவுகின்றது எனவே யாழ் குடா நாட்டைப் பொறுத்த வரையில் போதியளவு மின் சக்தியை சூழல் மாசுபடாமல் பெற்றுக் கொள்ள முடியும. இவ்வாறு பெற்றுக் கொண்ட மின் சக்தியின் உதவியுடன் பரிய தொழிற்சாலைகளை நிறுவி பொருளாதார மீள்ச்சி பெறலாம்.

விவசாயத்தை பொறுத்த வைரயில் யாழ்குடா நாட்டில் நீர்பற்றாக்குறையே பெரும் பிரச்சனையாக உள்ளது. அத்துடன் யாழ்குடாநட்டில் சனத்தொகை அடர்த்தி அதிகமாகக் காணப்படுவதால் பயிரிடுவதற்கு போதிய விவசாய நிலங்கள் இல்லை. எனவே இருக்கும் நிலங்களுக்கு கடல் நீரை நன்னீராக்கி நீர்பாசன வசதி செய்து பயிர்ச்செய்வகீத மேற் கொள்ளலாம். மேலதிகமாக யப்பானைப் போன்று கப்பல்களிலே மண் இட்டு அவற்றில் பயிர்செய்கை நடத்த முடியும். இதனால் யாழ் குடாநாடு தன்னிறைவு அடைவது மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் நெல்லை ஏற்றுமதி செய்யலாம்.

யாழ்ப்பாண பிரதேசத்தில் பருத்தி செய்கை நடைபெறுவதற்கு ஏற்ற காலநிலை காணப்படுகின்றது. எனவே வெளிகளாக பயனற்று பயிர்செய்கை பண்ணப் படாத நிலங்களில் பருத்திச் செய்கையை மேற் கொள்ளலாம். இவற்றை விட பழச்செய்கையும் யாழ்குடாநாட்டின் ஓரளவு சிறப்பாக நடைபெறுகின்றது எனவே அந்த பழங்களைக் கொண்டு ஜாம் செய்து போத்தல்களில் அடைத்து ஏற்றுமதி செய்ய முடியும், அல்லது பழங்களை பதப்படுத்தி ரின்களில் அடைத்து ஏற்றுமதி செய்யலாம்.

யாழ் குடா நாட்டின் செல்வமாகக் கருதப்படும், பனையிலிருந்து சிறந்த போசாக்குள்ள உணவுப் பொருட்களை பெறமுடியும். இவற்றை குடா நாட்டின் தேவைக்கு எடுத்துக் கொண்டு எஞ்சியதை உயர்த்தி பாதுகாப்பான முறையில் பக்கற்களில் அடைத்து வெளிநாட்டுகளுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உண்டு, இவற்றை விட பனையிலிருந்து பல அழகுப் பொருட்களை செய்து உலக சந்தைக்கு அனுப்ப முடியும். இவற்றுக் பெருமதிப்பு உண்டு. ஏனெனில் மேல் நாட்டவர்கள் கலையார்வம் கொண்டவர்கள். இதனால் பெருமளவு அன்னியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

பனையைப் போலவே தென்னையும் பெரும் பயன்தரும் ஒரு மரமாகும். தென்னையிலிருந்து பெறப்படும் தென்னந் தும்பைக் கொண்டு கயிறு, தடைப்பங்கள் போன்றன தயாரிக்க முடியும்.

கடல் வளம் நிறைந்த பல்லுருவக்கடற்கரை கொண்ட யாழ்ப்பாணத்தில் மீன் வளம் செறிந்து காணப்படுகின்றது இங்கே இறால், கடலட்டை போன்றனவும் காணப் படுகின்றன. இவற்றை பிடித்து ஒரு தொழில்சாலை அமைத்து அங்கே அவற்றை பதநிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். இங்கே இவற்றுக்கு மதிப்பு இல்லாவிட்டாலும் வெளிநாடுகளில் இவற்றுக்கு பெருமதிப்பு உண்டு. இக்கட்ல் பிரதேசத்திலே முத்து சங்கு போன்ற பெருமதி மிக்க பொருட்களும் உண்டு.

யாழ்குடா நாட்டில் கனி யவளத்தை பொறுத்த வரையில் அதிகளவு காணப் படவில்லை. சுண்ணாம்புக்கல் காங்கேசன் துறை என்னும் இடத்தில் காணப்படுகின்றது. இவற்றைக் மூலப் பொருளாகக் கொண்டு சீமெந்து தயாரித்து ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவாணியைப் பெற்றுக் கொள்ள முடியுமு. நாகர் கோவில் என்னும் இடத்திலுள்ள மணல் கண்ணாடிப்பொருட்கள் செய்வதற்கு சிறந்தது நிம்மணலை இயந்திரங் களால் உருக்கி சிறந்த கண்ணாடிப் பொருட்களைசெய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெருமளவு அன்னியச் செலாவணியை பெற்றுக் கொள்ளமுடியும்.

யாழ்க்குடா நாட்டில் போதியளவு மூளவளம் காணப்படுவதாலும் மூலதனப் பற்றாக் குறை உள்ளதனாலும வெளிநாடுகளிலில் இருந்து மூலப்பொருட்களை இறக்கு மதி செய்து இங்கே பொருட்களை உற்பத்தி செய்து முடிவுப் பொருட்களை மீண்டும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலவாணியை பெற்றுக் கொள்ள முடியும். மூள வளத்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை, எனவே யாழ்ப்பாணக் குடா நாட்டில் பொருளாதாரம் மூள வளத்தைக் கொண்டு கைத்தொழில் பிரதேசமாக வளர்வதற்கு போதியளவு வசதியுண்டு.

யாழ்குடா நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைந்து சிறந்த ஒரு பிரதேசமாக வளர போதியளவு வசதி உண்டு. யப்பான் போல முன்னேற வழி உண்டு.

# கம்பனி

கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்ற தொழில் நிறுவனத்தினையே குறிக்கின்றது. பங்குகள் வழங்கி மூலதனம் திரட்டவும் மூலதனத்தை ஓர் முயற்சியில் ஈடுபடுத்தி அம்முயற்சியினை கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து அம்முயற்சியால் வருகின்ற விளைவினை பங்குதாரர்களுக்கே பகிர்ந்தளிக்கின்ற வியாபார அமைப்பாக காணப்படுகின்றது.

1938ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க கம்பனிச் சட்டம் பழைய கம்பனிச்சட்டம் எனவும் 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிச்சட்டம் புதிய கம்பனிக் கட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.

கம்பனியில் காணும் சிறப்பம்சங்களாக.
1. சட்ட ஆளுமை.
2. நட்டப் பொறுப்பு வரையறுத்தல்.
3. சட்டக் கட்டுப்பாடு.
4. இடையறாவழியுரிமை.
5. பங்கு மூலதனம் என்பனவாகும். கம்பனியின்

உடமையினை அடிப்படையாகக் கொண்டு கீழ் வருமாறு இருவகையாக வகுத்து நோக்கலாம்.
1. தனியார்துறைக் கம்பனி.
2. அரச கம்பனி . தனியார் துறையினரால் மூலதனம் ஈடுபடுத்தி கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்த தனியார் துறையினராலேயே நிர்வகிக்கப கின்ற தொழில் நிறுவனமாக தனியார்துறை கம்பனி காணப்படுகிறது. அரசினால் முழு அளவில் அல்லது 51%ற்கு குறையாத மூலதனத்தை ஈடுபடுத்தி கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்து அரசினால் நிர்வாகம் கட்டுப்படுத்தவதனையே அரச கம்பனி என வரையறுக்கலாம் கம்பனியின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு கீழ்வருமாறு வகுத்து நோக்கலம்.
1, பட்டய/சாசனக்கம்பனி
2. சட்டமுறைக் கம்மனி

நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கின்ற தன்மையினை அடிப்படையாக கொண்டு கீழ்வருமாறு இரு வகையாக வகுத்து நோக்கலாம்.
1. நட்டப் பொறுப்பு வரையறுக்கப்படாத கம்பனி.
2. நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி.

நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி இருவகையாக வரையறுக்கலாம்
அ) உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி.
ஆ) பங்குகளால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி.

பங்கு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி மேலும் மூன்று வகையாக வகுத்து நோக்கலாம்.
1) வரையறுத்த சொந்தக் கம்பனி.
* 2) வரையறுத்த பொது கம்பனி.
3) வரையறுத்த மக்கள் கம்பனி.

வரையறுத்த சொந்தக் கம்பனியானது 1982ஆம் ஆண்டு 17ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிகாரம் கீழ்வரும் பண்புகள் இருத்தல் வேண்டும்.
1. பெயருடன் வரையறுத்த சொந்த ( ) என்ற இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. பங்குதாரர்களின் எண்ணிக்கை 2-50 ஆக வரையறுக்கப்ட்டுள்ளது.
3. பொதுமக்களுக்கு பங்குகளையோ தொகுதிக் கடன் களையோ வழங்கி மூலதனம் திரட்ட முடியாது.
4. பங்குகளை கைமாற்ற முடியாது.
5. இயக்குனரின் எண்ணிக்கை குறைந்தது 1 ஆக இருத்தல் வேண்டும். கம்பனிக்பதிவாளர் நாட்டின் நலன் கருதி சொந்தக் கம்பனியினை பொதுக்கம்பனியாக மாற்றலம்.

வரையறுத்த பொதுக் கம்பனியானது கீழ்வரும் பண்புகளை கொண்டிருத்தல்வேண்டும்.
1. பெயருடன் வரையறுத்த ( ) என்றபதம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும.
2. குறைந்தது 67 பங்குதாரர் இருத்தல் வேண்டும்.
3. பங்குகளையோ தொகுதிக் கடன் களையோ பொது மக்களுக்கு வழங்கி மூலதனம் திரட்ட முடியும்.
4. பங்குகளை கைமாற்றம் செய்யலாம்.
5. குறைந்தது 2 இயக்குநர் இருத்தல் வேண்டும்.

வரையறுத்த மக்கள் கம்பனியான 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் பிரகாரம் சாதாரன மக்களும் கம்பனி வியா--பாரத்தில் ஈடுபடும் முகமாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட இவ்வமைப்பு தற்போத புதிய கம்பனிச்சட்டத்தின் பிரகாரம் நிர்வகிக்கப் ~~[illegible]~~ டுகின்றது. மக்கள் கம்பனியில் கீள்வரும் பண்புகள் இருத்தல் வேண்டும்.

1) பெயருடன் வரையறுத்த மக்கள் என்ற பதம் இணைக்க வேண்டும்.
2) குறைந்தது 50 பங்குதாரர்கள் இருத்தல் வேண்டும்.
3) குறைந்தது 3 இயக்குனர் இருத்தல் வேண்டும்.
4) பங்கின் முகப்பெறுமதி ஆகக் கூடுதலாக 10க்கு வரையறுக்கப் பட்டுள்ளது.
5) ஒருவர் அல்லது குடும்பம் 10%- இற்குமேல் அக்கம்பனியின் பங்குகளில் கொள்வனவு செய்ய முடியாது.
6) வரிச் சலுகை உண்டு என்பனவாகும்.

கம்பனி உருவாக்கத்தினை இலகுவில் கீள்வரும் 4 விளக்கக் கூடியதாக இருக்கிறது. அவையாவன

1) உருவாக்குவோர் கூடும் நிலை
2) உருவாக்கல் பத்திரம் பொறும் நிலை
3) மூலதனம் திரட்டும் நிலை
4) தொழில் தொடங்கல் சான்றிதல் பெறும் நிலை

கம்பனிக்கு குறைந்தது 1500/- பதிவுக் கட்டனமாக உள்ளது. பங்கு மூலதனம் கூடக் கூட பதிவுக்கட்டணமும் உயர்ந்து செல்லும். மக்கள் கம்பனிக்கு பதிவுக் கட்டணம் 1000/-ஆகும்.

கம்பனி தொடர்பான முக்கியமான ஆவணங்களாக

1) அமைப்புப் பூமவிதி. இதில் அடங்கியிருக்கும் அம்சங்களாவன,
பெயர், நோக்கம், பதிவுசெய்யப்பட்டுள்ள தலைமைக் காரியாலயம், [illegible] விலாசம், பங்குகளின் வகைகளும் பெறுமதிகளும். நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள முறை, சங்க வளங்குவரை அல்லது உரைப்பகுதி
2) அமைப்பு அகவிதி. இதில் அடங்கியிருக்கும் அம்சங்களாவன,
பங்கு வழங்கும் முறையும் பணம் வசூலிக்கும் முறையும்,
பங்குதாரரின் உரிமையும் கடமையும்,
இயக்குனர் தெரிவு முறை, இயக்குனரின் உடமையும் கடமையும்,
கணக்காய்வாளர் தெரிவு முறை, ஏனைய உள்ளார்ந்த நிர்வாகநடவடிக்கை

கம்பனியானது பின்வரும் வகையாக மூலதனத்தைப்பெறும்.

1. அனுமதித்த மூலதனம்
2. வழங்கிய பங்கு மூலதனம்
3. வழங்காத மூலதனம்
4. அழைக்கப்பட்ட மூலதனம்
5. அழையாத மூலதனம்
6. செலுத்திய மூலதனம்
7. நிலுவை மூலதனம்
8. காப்பு மூலதனம்

கம்பனி நிர்வாகமானது சாதாரன பங்குதாரர்கள்

கம்பனி நிர்வாகமானது சாதாரண பங்குதாரர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் சபையினால் நிர்வகிக்கப்படுகிறது. தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கென இயக்குனர்களிலிருந்து ஒரு முகாமை இயக்குனர் தெரிவு செய்யப்படுவார். இவரது பதவிக்காலம் சம்பளம், ஏனைய நிபந்தனைகள் இயக்குனர் சபையினாலேயே நிர்ணயிக்கப்படும்.

கம்பனி ஒன்று செயல்பாட்டிலிருந்து விலகிச் செல்கின்ற நடவடிக்கையினையே கம்பனி கலைப்பு என்பர். இக்கலைப்பு 1982ஆம் ஆண்டில் 247ஆம் இலக்க சட்டம் கீழ்வருமாறு காணப்படலாம் என வலியுறுத்துகிறது.

1) நீதிமன்றக் கட்டளைக் கலைப்பு

2) தன்னிச்சையான கலைப்பு

3) நீதிமன்றமேற்பார்வையின் கீழ் கலைப்பு என்பனவாகும்.

செல்வி* திருச்செந்தூர் சுகந்தினி.

## கொடுக்கல் வாங்கல்களை பதிவு
***************************************
## செய்ய வேண்டியதன் அவசியம்
***************************************

நடைமுறையிலே தனியொருவருக்கும், வியாபார நிறுவனங்களுக்கும் பல்வேறுபட்ட கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன. இக் கொடுக்கல் வாங்கல் தனி நபரைப் பொறுத்தவரையில் ஒருவிதமாகவும், வியாபார நிறுவனங்களைப் பொறுத்தவரையில் வேறு விதமாகவும் நடைபெறுகின்றது. இவ்வாறு நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யவேண்டியது அவசியமானதாகும். தனி நபர் ஒருவரைப் பொறுத்தவரை அவருக்குத் தனது தொழில் மூலம் அல்லது வேறு வழிகள் மூலம் ஒரு தொகைப் பணம் கிடைக்கும். இப் பணத்தைப் பெற்று அவர் தனக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வார். தனி நபர் ஒருவருக்கு வருமானம் கிடைக்கும் வழிகளையும் அவர் மேற் கொள்ளும் கொடுப்பனவுகளையும் பின்வரும் உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

கொள்ளல்கள் :

| | | |
|---|---|---|
| சம்பளம் | 2000 | |
| மேலதிக நேரவேலை | 200 | |
| வங்கி வட்டி | 800 | |
| பெற்றவீட்டுவாடகை | 1000 | 4000 |

கொடுத்தல்கள் :

| | | |
|---|---|---|
| உணவும் பணமும் | 1200 | |
| போக்குவரத்து | 600 | |
| பிள்ளைகளின் செலவு | 800 | |
| மின்சாரச்செலவு | 150 | |
| ஏனையசெலவு | 250 | 3000 |

இப்போது ஒருவர் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுகின்றார்.

01. தன்னிடம் இருக்க வேண்டிய மீதிப் பணத்தை தெரிந்து கொள்ளமுடிதல்

ஒரு குறித்த கால எல்லையில் ஒருவர் தனது கொள்ளல் கொடுத்தல்களை முறையாக பதிந்து வைத்துக் கொண்டால் தம்மிடம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலிருக்கும் பணத்தின் அளவை தெரிந்துகொள்ள முடியும்.

உதாரணம் கொள்ளல் 4000
கொடுத்தல்(3000)
-----
∴ காசு மீதி 1000
-----

02. கொள்ளல் சுருக்கங்களையும் கொடுத்தல் சுருக்கங்களையும் தெரிந்து கொள்ள முடிதல்.

ஒருவரின் கொள்ளல்கள் பல்வேறு வழிகளிலிருந்து பெறப்படல் போன்றுதே அவரது கொடுத்தல்களும் பல்வேறு காரணங்களுக்காக இருக்கலாம். ஒரு தனிநபரின் கொள்ளல் சுருக்கங்களையும், கொடுத்தல் சுருக்கங்களையும் கீழ்வரும் உதாரணத்தின் மூலம் காட்டலாம்.

கொள்ளல் சுருக்கம் :

| பல்வேறு வழிகள் | தை | மாசி | மொத்தம் |
|---|---|---|---|
| தொழில் | 2200 | 2300 | 4500 |
| வங்கி வட்டி | 800 | 800 | 1600 |
| வீட்டு வாடகை | 1000 | 500 | 1500 |
| கடன் | - | 300 | 300 |
| | 4000 | 3900 | 7900 |

கொடுத்தல் சுருக்கம் :

| பல்வேறு காரணங்கள் | தை | மாசி | மொத்தம் |
|---|---|---|---|
| உணவும் பானமும் | 1200 | 1500 | 2700 |
| போக்குவரத்துச்செலவு | 600 | 800 | 1400 |
| பிள்ளைகளின் செலவு | 800 | 1300 | 2100 |
| மின்சாரச்செலவு | 150 | 200 | 350 |
| ஏனையசெலவு | 250 | 150 | 400 |
| | 3000 | 3950 | 6950 |

03. பெற்றுக் கொள்ளும் கொள்ளல் கொடுத்தல் கணக்கும் அவற்றின் சுருக்கங்களுக்கும் ஏற்றவாறு எதிர்காலத்தை திட்ட மிட முடிதல்

நிகழ்காலக் கொள்ளல்களையும், கொடுத்தல்களையும் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் கொள்ளல்கள் மூலம் எவ்வளவு பணம் கிடைக்கலாம் எவ்வளவு கொடுத்தல்களைச் செய்யலாம், எவ்வளவுதொகை மீதியாக இருக்கலாம் உத்தேசமான முறையில் கணக்கிடுவதற்கு ஒருவரால் முடியும்.

04. வளங்களிலிருந்த உச்சப் பயனைப் பெறமுடிதல்

கொள்ளல் கொடுத்தல்களை முறையாகப் பதிந்த வைத்தால் பெறும் வளங்களிலிருந்த உச்சப் பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு பேருதவியாக அமையும்.

05. கிடைக்க வேண்டிய கடன் கொடுக்க வேண்டிய கடன் என்பவற்றைக் காண முடியும்.

06. வருமான வரி தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல்.

குறித்த ஒரு எல்லைக்கு மேலதிக வருமானம் பெறுபவர் குறித்த ஒரு தொகையை வருமானவரியாக செலுத்தல் வேண்டும். கொடுக்கல் வாங்கல்களை முறையாக பதிந்தவிடுவதால் தாம் கொடுக்க வேண்டிய வருமான வரி எவ்வளவு என்பதை தெரிந்த கொள்ளலாம்.

இவ்வாறாக தனி நபர் ஒருவர் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதனால் பல நன்மைகளை பெறுவதை அவதானிக்க முடிகின்றது. அடுத்ததாக வியாபார நிறுவனம் ஒன்று கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதனால் பெறக்கூடிய நன்மைகள் பின்வருமாறு கூறலாம்.

01. பெருமளவிலான கொடுக்கல் வாங்கல்கள் ஒரு வியாபாரத்தின் தினசரி நடைபெறுகின்றன. எனவே இவற்றை நினைவில் இருத்துவது சிரமம் என்பதாலும் இவை விடுபடலாம் என்பதாலும் இக்கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் அவசியமானதாகும்.

02 வியாபார நிறுவனத்திற்கு தேவையான பொருட்களையும், சேவைகளையும்

S. mathessan

சில சந்தர்ப்பங்களில் கடனாகவும் பெற்றுக் கொள்வதினால் கடன்கொடுத்தோர் உருவாகுவார். அத்துடன் கடன் விற்பனை செய்வதனால் கடன்பட்டோர் உருவாகுவார்.

03. வியாபார நிலையத்தின் அன்றாடக் கொள்ளல் கொடுத்தல்கள் பணத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுவதனால் ஒவ்வொரு நாளும் பெறப்பட்ட பணத்தின் அளவு கொடுக்கப்பட்ட பணத்தின் அளவு வியாபார நிலையத்தின் இருக்க வேண்டிய காசு மீதி என்பவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் அவசியமானதாகும். அத்துடன் வங்கியின் ஊடாக நாளாந்தம் எவ்வளவு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மீதியாக எவ்வளவு பணம் இருக்கின்றது என்பதையும் அறிவதற்கு இப் பதிவுகள் அவசியமானதாகும்.

04. வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படும் வளங்களின் தன்மையை சந்தர்ப்பங்களுடன் ஏற்றவாறு வேறுபடும். பணமாக கருதப்படும் வளம் அந்தப் பண்டங்களை கொள்வனவு செய்யும்போது பண்டங்களின் தன்மையைப் பெறுவதைக் காணலாம். இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபடும் வளங்கள் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு மாற்றம் பெறுவதை விளங்கிக் கொள்வதற்கு கொடுக்கல் வாங்கல்கள் அவசியமாகின்றது

05. இவ்வாறு நடவடிக்கை முறையால் பதிந்து வைத்திருப்பதால் குறித்த ஒரு காலப்பகுதியில் செய்யப்பட்ட செலவுகளையும் பெறப்பட்ட வருமானங்களையும் கணிப்பதற்கும் அதற்கிணங்க அக்கால எல்லையில் பெற்ற தேசியலாபம் அல்லது தேசிய நட்டம் என்பவற்றை மதிப்பிடவும், இப்பதிவுகள் உதவுகின்றன

06. வியாபாரத்தின் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் அதன் வருமானங்களை பன்முகப்படுத்தவும் அதற்கேற்றவாறு வியாபார நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கும் கணக்கேடுகளிலுள்ள பதிவுகள் தகவல்களென்பன பேருதவி புரிகின்றன.

இவ்வாறு தனிநபரும், வியாபார நிறுவனங்களும் தமது தன்மை கருதி கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்காகவும், முறையாகவும் பதிவு செய்தல் அவசியமானதாகும்.

– வி. மதிவதனா –

ஆண்டு 10

## பேரேடு

வியாபார நிறுவனமொன்று தனது கொடுக்கல் வாங்கல்களைப் பதிந்து வைப்பதற்காகப் பயன் படுத்துகின்ற ஏடே பேரேடு எனப்படும். இது T மாதிரி அமைப்பைக்கொண்டதாகும். இங்கு வரவுப் பக்கம் செலவுப் பக்கம் என்று இரண்டு பக்கங்கள் உண்டு. ஆனால் பேரேட்டின் மேலே வரவு, செலவு என்று எழுதுவதில்லை.

இங்கு ஐந்து வகையான கணக்குகள் பதியப்படுகிறது. அவையாவன :-

(1) மூலதனக் கணக்கு
(2) சொத்துக் கணக்கு
(3) பொறுப்புக் கணக்கு
(4) வருமானக் கணக்கு
(5) செலவீனக் கணக்கு

எனபனவாகும்.

இதில் செலவுப் பக்கம் பதியப்படும் கணக்குகளாவன மூலதனக் கணக்கும் பொறுப்புக் கணக்கும், வருமானக் கணக்குமாகும்.

சொத்துக் கணக்கும் செலவீனக் கணக்கும் வரவுப்பக்கம் பதியப்படும் கணக்குகளாகும்.

மூலதனம் அதிகரிக்கும் போது செலவுப் பக்க நிரலிலும் குறையும் போது வரவுப் பக்க நிரலிலும் பதிதல் வேண்டும். இது செலவுப் பக்க மீதியைக் கொண்ட கணக்காகும்.

சொத்துக் கணக்கு பேரேட்டில் வரவுப் பக்க மீதியைக் கொண்ட கணக்காகும். சொத்துக்கள் அதிகரிக்கும் போது [redacted] பக்க நிரல[redacted] பதியப் பட வேண்டும்.

பொறுப்புக் கணக்கு பேரேட்டில் செலவுப் பக்க மீதியைக் கொண்ட கணக்காகும். பொறுப்புக்கள் அதிகரிக்கும் போது செலவுப் பக்க நிரலிலும் குறையும் போது வரவுப் பக்க நிரலிலும் பதியப்பட வேண்டும்.

வருமானங்கள் அதிகரிக்கும் போது செலவுப் பக்க நிரலிலும் குறையும் போது வரவுப் பக்க நிரலிலும் பதியப் பட வேண்டும். இது பேரேட்டின் செலவுப்பக்க மீதியைக் கொண்ட கணக்காகும். செலவீனங்கள் அதிகரிக்கும் போது வரவுப் பக்க நிரலிலும் குறையும் போது செலவுப் பக்க நிரலிலும் பதிதல் வேண்டும்.

"ப. மைதிலி"

# காசேடு

*********

வியாபார நிறுவனம் ஒன்று தனது பணரீதியான கொடுக்கல் வாங்கல்களை இரு பிரதான வழிகளில் மேற்கொள்ளுகின்றன. அவையாவன,

1. காசு மூலமான கொடுக்கல் வாங்கல்.
2. வங்கி மூலமான கொடுக்கல் வாங்கல்

காசு மூலமான கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்ய நிறுவன உரிமையாளரால் பயன்படுத்தப்படும் ஏடே காசேடு ஆகும். இக்காசேடு நிறுவனம் செய்கின்ற ஆரம்ப நடவடிக்கைகளையும் பதிவு செய்வதனால் பாவனையேடு அல்லது முதன்மை ஏடு [redacted] அல்லது ஆரம்ப பதிவேடு என்று அழைக்கப்படுகின்றது. இதனைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஆவணங்களாவன,

1. பற்றுச்சீட்டு
2. பட்டியல்
3. கைச்சாத்து

இவ்வாறான தரவுகள் மூலம் ஆரம்பிக்கப்படும் காசேடானது 3 வழிகளில் தயாரிக்கப்படுகின்றது.

1. ஒற்றைநிரல் காசேடு
2. இரட்டை நிரல் காசேடு
3. மூன்று நிரல் காசேடு

ஒற்றை நிரல் காசேடானது சாதாரண காசுக்கணக்கைப் போல அமைந்திருக்கும். இக் கணக்கில் வரவு நிரலில் பின்வருவன இடம்பெறும்

1. மூலதனம்
2. ஆரம்ப மீதி
3. கடன்பட்டோர் தந்த காசு அல்லது காசோலை
4. சில்லறை வருமானங்கள்
5. நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறும் கடன்

இக் காசேட்டின் செலவுப் பக்கத்தில் பின்வருவன காட்டப்படும்

1. நிலையான சொத்துக்கொள்வனவு
2. பொருட் கொள்வனவு

3. செலவீனங்கள்
4. வங்கி வைப்பு
5. கடன்கொடுத்தோர்க்கு கொடுத்தகாசு
6 பெற்ற கடன் திருப்பி அடைத்தல்
7 காசு மூலமான எடுப்பனவு

## இரட்டை நிரல் காசேடு

வியாபார நிறுவனம் ஒன்று காசு மூலமும் வங்கியின் மூலம் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும்போது அவற்றைப் பதிவு செய்யும் காசேடே இரட்டைநிரல் காசேடு ஆகும். இதில் காசோலை மூலமான கொடுப்பனவுகள் யாவும் காசேட்டின் செலவுப்பக்க வங்கி நிரலிலும் காசோலை மூலமான வருமானங்கள் காசேட்டின் வரவுப்பக்க வங்கி நிரலிலும் பதியப்படும். வரவுப்பக்க வங்கி நிரலில் பின்வருவன நிரப்பப்படும்.

1 வங்கியில் இடப்படும் பண வைப்புக்கள்
2. வங்கியில் இடப்படும் காசோலை பணவைப்புக்கள்
3. வங்கியில் நேரடியாக கிடைத்த வருமானங்கள்
4. கடன்பட்டோர் நடைமுறைக்கணக்கிற்கு நேரடியாக அனுப்பிய தொகை

போன்றனவாகும். காசேட்டின் செலவுப் பக்க வங்கி நிரலில் பின்வரும் விடயங்கள் பதியப்படும்.

1. காசோலை மூலமான கொடுப்பனவுகள்
2. கடன்கொடுத்தோருக்கு கொடுக்கின்ற காசோலை
3. வங்கியிலிருந்த பணம் மீட்டல்
4. கடன் பட்டோர் தந்த காசோலை மதிப்பிழக்கப்படல்
5. நிலையான கட்டளையின் பெயரில் வங்கி செய்கின்ற. செலவுகள்

போன்றனவாகும்.

## மூன்று நிரல் காசேடு

இரட்டை நிரல் காசேட்டுடன்

கடன் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படுகின்ற காசுக்கழிவுகளை பதிவு செய்வதற்காக தயாரிக்கின்ற காசேடே 3 நிரல் காசேடு ஆகும். இதில் 3வது நிரலாக கழிவு நிரல் காணப்படும். வியாபாரத்தில் வழங்கப்படும் கழிவானது 3 வகைப்படும். அவையாவன

காசுக்கழிவு
வியாபாரக் கழிவு
தொகைக் கழிவு

காசுக்கழிவானது கடன்பட்டோர் அல்லது கடன்கொடுத்தோரிடமிருந்து விரைவாகப் பணத்தைப் பெறுவதற்காக வியாபார நிறுவனங்களால் வழங்கப்படும். இது 2 வகைப்படும்

1) பெற்ற கழிவு    2) கொடுத்த கழிவு

கடன்கொடுத்தோருக்கு காசு வழங்குகின்ற போது அவர்களால் நிறுவனத்திற்கு வழங்கப்படும் கழிவு பெற்ற கழிவாகும். இது பேரேட்டில் பின்வருமாறு பதியப்படும்.

| | |
|---|---|
| கடன் கொடுத்தோர் கணக்கு | வரவு |
| பெற்ற கழிவுக் கணக்கு | செலவு |

கடன் பட்டவர்கள் நிறுவனத்திற்கு காசு வழங்கும் போது நிறுவனத்தால் அவருக்கு கொடுக்கப்படுகின்ற கழிவு கொடுத்த கழிவு அல்லது அனுமதித்தகழிவு அல்லது வழங்கிய கழிவு எனப்படும். இது பேரேட்டில் பின்வருமாறு பதியப்படும்

| | |
|---|---|
| கொடுத்த கழிவுக் கணக்கு | வரவு |
| கடன்பட்டோர் கணக்கு | செலவு |

காசேட்டில் காட்டப்படும் கழிவு நிரலானது ஓர் ஞாபகநிரலாகும். இது இரட்டைப் பதிவு அன்று .

## வியாபாரக் கழிவு

இது பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது கிடைக்கின்ற கழிவு ஆகும். இது பட்டியலில் உள்ளடக்கப்பட்டதால் ஏடுகளில் பதியப்படுவதில்லை.

## தொகைக்கழிவு

பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நிறை அளவுகளில் கிடைக்கின்ற கழிவுகளாகும். இதுவும் பட்டியலில் உள்ளடக்கப்படாததினால் ஏடுகளில் பதியப்படுவதில்லை.

- ச. ஜானகி -

ஆண்டு 10

# வழுக்களைத் திருத்தல்
*************************

வியாபார நிறுவனம் ஒன்றில் கணக்குகளில் ஏற்படுகின்ற தவறுகள் வழுக்கள் எனப்படும். இவ் வியாபார நிறுவனங்களில் பிழைகள் தவறுகள் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் நிறுவனங்களில் ஏற்படுகின்ற அதிகமான கொடுக்கல் வாங்கல்கள் ஆகும். இவ்வாறான வழுக்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள்

1. வியாபார நிறுவனத்தில் கடமையாற்றுவோர் கணக்குப் பதிவியலில் பயிற்சி இல்லாதிருத்தல்
2. கவலையீனப் பிழைகள்
3. வேண்டுமென்றே பதிவுகளை மேற்கொள்ளல்

போன்றவையாகும் இவ்வாறான வழுக்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1. கணக்குப் பதிவியலில் அக்கறை உள்ளோரை வேலைக்கு அமர்த்தல்
2. அடிக்கடி கணக்குகளை மேற்பார்வை செய்தல்
3. நிறுவன உரிமையாளர் கணக்குகளை மேற்பார்வை செய்தல்

ஆகியனவாகும். வழுக்களினை செம்மைப்படுத்துவதற்கு முன்னர் வழுக்களின் வகைகளை அறிந்து கொள்ளல் வேண்டும்.

1. குறைந்த பதிவு செய்தல்
2. கூட்டிப் பதிவு செய்தல்
3. இரட்டிப்பு
4. கோட்பாட்டு வழுக்கள்
5. ஈடுசெய்த வழுக்கள்
6. தணையேடுகளிலிருந்து பேரேட்டிற்கு மாற்றப்படும் போது ஏற்படும் வழுக்கள்
7. பரீட்சை மீதியை கூட்டும் போது ஏற்படும் வழுக்கள்

இவ்வாறே வழுக்களை பின்வரும் முறைகளில் வகைப்படுத்துவதால் அவற்றைத் திருத்துவது இலகுவாகவிருக்கும்.

1. பரீட்சை மீதியின் மொத்தக் கூட்டுத் தொகையை பாதிக்காத வழுக்கள்
2. பரீட்சை மீதியின் மொத்தக் கூட்டுத்தொகையை பாதிக்கும் வழுக்கள்

## பரீட்சை மீதியின் மொத்தக் கூட்டுத்தொகையை பாதிக்காத வழுக்கள்

பரீட்சை மீதியைக் கூட்டும் போது அதன் மொத்தத் தொகையில் ஏற்படுகின்ற வழுக்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கொடுக்கல் வாங்கல்களை முற்றாக பதிவு செய்யாதவிடல்
2. கோட்பாட்டு வழு
3. ஈடு செய்யும் வழு

கொடுக்கலை வாங்கலை முற்றாக பதிவு செய்யாத விட்டால் அந்த வழுவை திருத்தும் போது அந்த கொடுக்கல் வாங்கலுக்குரிய சரியான பதிவை பதிவதன் மூலம் அது திருத்தப்படுகின்றது. உதாரணம் செலுத்திய வாடகை 500/- ஏடுகளில் பதியப்படவில்லை. இதனைத் திருத்தும் போது

| | | |
|---|---|---|
| வாடகை கணக்கு | வரவு 500 | |
| காசுக் கணக்கு | | செலவு 500 |

( ஏடுகளில் பதியப்படாதவாடகை 500/- பதியப்பட்ட போது )

ஏடுகளில் கூட்டிப் பதிவு செய்யும் வழுவானது பரீட்சை மீதியைப் பாதிப்பதில்லை. ஏனெனில் கூட்டப்படுகின்ற தொகையானது இரு ஏடுகளிலும் உட்படுவதனால் பரீட்சை மீதியின் மொத்தத் தொகையைப் பாதிப்பதில்லை. இதனைத் திருத்தும் போது கூட்டிப் பதியப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட கணக்குகளில் எதிர்ப்பக்கம் பதிவதன்மூலம் இது திருத்தப்படுகின்றது. உதாரணம் கொடுத்த சம்பளம் 1000/- ஏடுகளில் 10,000/- என பதியப்பட்டு இருத்தல் இதனை இவ்வாறு திருத்தலாம்.

| | | |
|---|---|---|
| காசுக் கணக்கு | வரவு 9000 | |
| சம்பளக் கணக்கு | | செலவு 9000 |

(ஏடுகளில் கூட்டிப்பதித்த 9000/-வை திருத்திய போது)

ஏடுகளில் குறைத்த பதிவு செய்யும் வழுவானது பரீட்சை மீதியின் மொத்தக் கூட்டுத் தொகையைப் பாதிப்பதில்லை. ஏனெனில் சம்பந்தப்பட்ட இரண்டு கணக்குகளிலும் ஒரே தொகையே குறைத்து செய்யப்பட்டிருப்பதாகும். இதனைத் திருத்தும் போது குறைத்த பதியப்பட்டளவு தொகையை சம்பந்தப்பட்ட

2 கணக்குகளிலும் ஒரே தொகையே குறைத்து பதிவு செய்யப்பட்டிருப்பது ஆகும் . இதனைத் திருத்தும் போது குறைத்த பதியப்பட்டளவு தொகையை சம்பந்தப்பட்ட கணக்குகளில் அதே பக்கத்தில் பதிவதன் மூலம் திருத்தப்படு -கின்றது.

உதாரணம் செலுத்திய மின்சாரக் கட்டணம் 4000/- ஏடுகளில் 400/- என பதியப்பட்டிருத்தல். இதனைத்திருத்தும் போது

மின்சாரக் கணக்கு வரவு 3600
காசுக் கணக்கு செலவு 3600
(ஏடுகளில் குறைந்த பதிவுசெய்த 3600/-வை
ஏடுகளில் பதிவு செய்த போது )

ஒரு கொடுக்கல் வாங்கலை இரண்டு தடவை ஏடுகளில் பதிந்தது பரீட்சை மீதியைப் பாதிப்பதில்லை. ஏனெனில் இரண்டு கணக்குகளிலும் இருதரம் பதியப்பட்டிருப்பதாகும். இதனைத் திருத்தும் போது 2வது தடவை பதிவு செய்த தொகையை சம்பந்தப்பட்ட கணக்குகளில் எதிர் பக்கத்தில் பதிவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

உதாரணம் செலுத்திய விளம்பரத் தொகையான 500/- ஏடுகளில் இருமுறை பதியப்பட்டுள்ளது.

காசுக் கணக்கு வரவு 500
விளம்பரக் கணக்கு செலவு 500
( ஏடுகளில் இருமுறை பதியப்பட்ட 500/-
பெறுமதியான விளம்பரம் திருத்தியபோது)

கோட்பாட்டு வழு என்பது கணக்கியல் கோட்பாடுகளைமீறி செய்யப்படும் வழுக்களாகும். இது பரீட்சை மீதியைப் பாதிப்பதில்லை.

உதாரணம் நிலையத் திருத்தச் செலவான 5000/- காணிகட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இக் காணிக் கட்டிடக் கட்டிட கணக்கு ஒரு சொத்தாகும். நிலையத்திருத்தச் செலவுக்கான ஒரு கணக்கு பெயரளவுக் கணக்காகும். நி

நிலையத் திருத்தச் செலவுக் கணக்கு வரவு 5000
காணிகட்டிடக்கணக்கு செலவு 5000
(கோட்பாட்டு வழுவை திருத்தியபோது)

ஈடுசெய்யும் வழுவான பரீட்சை மீதியைப் பாதிப்பதில்லை. ஏனெனில் இங்கு ஒரே பக்கத்திலுள்ள கணக்குகள் ஒன்று கூட்டி அதேயளவு தொகை குறைந்தோ அல்லது வரவுப் பக்க கணக்கு இன்னுமொரு வரவுப் பக்க கணக்கில் பதியப்பட்டோ இருப்பதைக் குறிக்கும்.

உதாரணம் கொள்வனவு கணக்கு 1000/-வால் குறைந்தும் விற்பனைக் கணக்கு அதேயளவு தொகையால் குறைந்த பதிவு செய்தல்.

| | | |
|---|---|---|
| கொள்வனவுக் கணக்கு | வரவு 1000 | |
| விற்பனைக் ணக்கு | | செலவு 1000 |

( ஈடுசெய்யும் வழுவைத்திருத்திய போது)

## பரீட்சை மீதியின் மொத்தத்தை பாதிக்கும் வழுக்கள்

இவை பின்வருவனவாகும்.

(1) இரண்டு பதிவுகளையும் ஒரே பக்கத்தில் பதிவு செய்தல் :

இரட்டைப் பதிவுகளை ஒரே பக்கத்தில் பதிவு செய்வதனால் ஏற்படும் வழுவானது பரீட்சை மீதியை இரட்டிப்புத் தொகையால் பாதிக்கின்றது. ஏனெனில் பதிவு செய்ய வேண்டிய தொகையை ஒரே பக்கத்தில் பதிவு செய்வதனால் அத் தொகைகளைப் பரீட்சை மீதிக்கு மாற்றும் போது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. முதலில் பிழையான தொகையை இல்லாது செய்வதன் மூலமும், பின்பு சரியான பக்கத்தில் பதிவு செய்வதன் மூலமும் திருத்தப்படுகின்றது.

உதாரணம் கொடுத்த வாடகை 500/- வாடகைக் கணக்கிலும் காசுக் கணக்கிலும் வரவு வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தொங்கல் கணக்கு | வரவு 500/- | |
| (1) காசுக் கணக்கு | | செலவு 500 |

(பிழையான பக்கத்து பதிவை இல்லாது செய்தபோது)

| | | |
|---|---|---|
| தொங்கல் கணக்கு | வரவு 500 | |
| காசு கணக்கு | | செலவு 500 |

[சரியான பக்கத்தில் பதிவு செய்த போது]

(2) தினசேரிகளின் மொத்தக் கூட்டுத் தொகையை மாற்றும்போது ஏற்படுகின்ற வழுக்கள் :

தினசேரியின் மொத்தக் கூட்டுத் தொகையை பேரேட்டுக்கு மாற்றும் போது ஏற்படுகின்ற வழுவானது பரீட்சைமீதியை பாதிக்கின்றது. இதனைத் திருத்தும் போது தொங்கல் கணக்கும், உரிய கணக்கும் பயன்படுகின்றது.

உதாரணம் விற்பனைத் தினசேரியின் மொத்தக் கூட்டுத்தொகை 150/-வால் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தொங்கல் கணக்கு | வரவு 150 | |
| விற்பனைக் கணக்கு | | செலவு 150 |

(விற்பனைக் கணக்கில் குறைத்து பதிந்த 150/- திருத்தப்பட்ட போது )

(3) பரீட்சை மீதிக்கு மாற்றும் போது ஏற்படும் தவறுகள் :

பரீட்சை மீதிக்கு மாற்றும்போது ஏற்படுகின்ற தவறுகளை திருத்தும் போது பிழைகளை இலகுவில் இனங்காண முடியாதவிடத்து தொங்கல் கணக்கிற்கு மாற்றி அதைத் திருத்த முடியும். குறைத்தோ கூட்டியோ பதியப்பட்ட கணக்கில் சரியான தொகையை மாற்றுவதன் மூலம் திருத்தலாம்.

உதாரணம் கடன்பட்டோர் மீதி பரீட்சை மீதிக்கு மாற்றும்போது 100/- குறைத்து பதியப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கடன்பட்டோர் கணக்கு | வரவு 100 | |
| தொங்கல் கணக்கு | | செலவு 100 |

( கடன்பட்டோர் கணக்கில் குறைத்துபதிந்த 100/- திருத்திய போது )

இதில் பார்க்கப்பட்ட இரண்டு வகையான வழுக்களையும் உள்ளடக்கிய அதாவது பரீட்சை மீதியின் மொத்தத்தை பாதிக்காத வழுக்கள், பரீட்சை மீதியின் மொத்தத்தை பாதிக்கும் வழுக்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு உதாரணம் மூலம் கணக்கொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

உதாரணம் : 1

வேல்வன்
"[redacted]" வியாபார நிறுவனத்தில் ஆராயப்பட்டபோது பின்வரும் வழுக்கள் காணப்பட்டன. இவற்றைத் திருத்துவதற்கு முறையான நாட்குறிப்பு ஏட்டைத் தயாரிக்குக.

1. கொடுத்த சம்பளம் 500/- ஏடுகளில் பதியப்படவில்லை
2. மோட்டார் வாகன திருத்தச் செலவு 1000/- மோட்டார் வாகனக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது
3. அனித்தாவிடம் கொள்வனவு செய்த 500/- அனித்தா கணக்கில் பதியப்படவில்லை
4. குட்டியிடம் பெற்ற 500/- பரணி கணக்கில் பதியப்பட்டுள்ளது
5. பெற்ற வாடகை 500/, 1500/- என பதியப்பட்டுள்ளது.

வேல்வன்.
[redacted] முறையான நாட்குறிப்பேடு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொடுத்த சம்பளக் கணக்கு | 500 | |
| காசுக் கணக்கு | | 500 |
| (ஏடுகளில் பதியப்படாத 500/- பதியப்பட்டபோது) | | |
| மோட்டார் வாகனத் திருத்தச்செலவு கணக்கு | 1000 | |
| மோட்டார் வாகனக் கணக்கு | | 1000 |
| (கோட்பாட்டு வழு திருத்தப்பட்ட போது ) | | |
| தொங்கல் கணக்கு | 500 | |
| அனித்தா கணக்கு | | 500 |
| (பதியப்படாத 500/- பதியப்பட்டபோது) | | |
| பரணி கணக்கு | 500 | |
| குட்டி கணக்கு | | 500 |
| ( கோட்பாட்டு வழு திருத்திய போது ) | | |
| பெற்ற வாடகை கணக்கு | 1000 | |
| தொங்கல் கணக்கு | | 1000 |
| (கூட்டிப் பதிந்த 1000/- பெற்றவாடகைக் கணக்கில் பதிவழிக்கப்பட்ட போது ) | | |

இதனை மேலே தரப்பட்டவாறு திருத்தலாம்.

- இ. சுதாகரன் -

## தினசேரிகள்

வியாபார நிறுவனங்கள் தமது அன்றாடக் கொடுக்கல் வாங்கல்களை பதிந்து வைப்பதற்கு முதன்மை ஏடுகளைப் பயன்படுத்துகின்றன. அத்தகைய முதன்மை ஏடுகள் காசேடும் தினசேரிகளும் ஆகும். காசேடு காசு மூலமான கொடுக்கல் வாங்கல்களைப் பதிந்து வைப்பதற்கும் தினசேகரிகள் கடன் கொடுக்கல் வாங்கல்களைப் பதிந்து வைப்பதற்கும் பயன்படுகின்றன. தினசேரிகள் கொள்வனவுத் தினசேரி, விள்பனைத்தினசேரி, கொள்வனவு வருதிகப் தினசேரி, விற்பனை வருதிகள் தினசேரி, பொதுத்தினசேரி என ஐந்து வகைப்படும். இத்தகைய தினசேரிகளைப் பயன்படுத்துவதனால் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய சுருக்கமான வியரங்களையும் குறிக்கப்பட்ட கால இடைவெளிக்குள் நடைபெற்ற ஒரியல்புள்ள கொடுக்கல் வாங்கல்களின் கூட்டுதொகையை அறிந்து கொள்ள முடிகின்றது. அத்துடன் பேரேடுகளில் ஏற்படும் தவறுகளை திருத்துவதற்கும் உதவுகின்றது. இவ்வாறாக பல்வேறு தினசேரிகளைப் பயன்படுத்துவதனால் வியாபார நிலையத்தின் கணக்குப் பதிவியல் பரவலாக்கப்பட்டு வேலைகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

வியாபார நிறுவனங்கள் பேரேடுகளில் பதிவுகளை பதிவதற்கு துணையாக தினசேரிகளைப் பயன்படுத்துவதனால் இவை துணையேடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை நாளாந்த நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து வைக்கப்பி பயன்படுவதனால் நாளேடுகள் என்றும் தினசேரிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஆரம்பபதிவுகளை பதிவதனால் ஆரம்பப்பதிவேடு என்றும் தொடக்கப்பதிவேடு என்றும் மூலஏடு என்றும் அழைக்கப் படுகின்றது.

கொள்வனவுத் தினசேரி கடன்கொள்வனவு பற்றிய பதிவுகளைப் பதிந்து வைப்பதற்கு பயன்படும் முதன்மை ஏடு ஆகும். இத்தினசேரியை தயாரிக்கும் போது மூல ஆவணமாக கொள்வனவுப் பட்டியல் பயன்படுகின்றது. இதில் பண்டங்கள் வாங்கிய திகதி, பட்டியல் இலக்கம், பண்டங்களின் வகை, தொகை, கொள்வனவு, கொள்வனவு செய்யும் பய்டங்களின் விலை, வியாபாரக் கழிவுகள், விநியோகஸ்தரின் பெயர் முகவரி, பணக் கொடுப்பனவு சம்பந்தமான நிபந்தனைகள் போன்ற விடயங்கள் காணப்படும். கொள்வனவுத் தினசேரியின் மொத்தக் கூட்டுத் தொகை பேரேட்டில் கொள்வனவுக் கண்க்கில் வரவுப் பக்கம் பதியப்படும் ஒவ்வொரு கடன்கொடுத்தோர் களினதும் தேறிய தொகைகள் அவரவர் கணக்குகளில் செலவுப் பக்கம் பதியப்படும். கொள்ளனவுத் தினசேரி பின்வரும் அமைப்பைக் கொண்டிருக்கும்.

| திகதி | பட்டியல் இல. | விநியோகஸ் | பண்டங்கள் பற்றிய விபரம் | | | | மொத்த | பேரேடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விபரம் | அளவு | கூறின்விலை | பெறு | பெறு | இலக் |
| | | | | | | | | |

கடன் விற்பனை நடைபெறும் போது அவைசம்பந்தமான விபரங்களை முதலில் பதிந்து வைக்கும் ஏடு விற்பனைத் தினசேரி ஆகும். விற்பனைத் தினசேரியை தயாரிக்கப் பயன்படும் முதனிலை ஆவணம் விற்பனைப் பட்யல் ஆகும். இப்பட்டியல் விற்பனை ரீ செய்யப்பட்ட திகதி, பட்டியல் இலக்கம், கொள்வனவாளர், பெயர், விற்பனை செய்யும் பொருட்களின் வகை, அளவு, விற்பனை செய்யப்பட்டபொருளின் விலை, மொத்தப் பெறுமானம், வியாபாரக் கழிவு, விற்பனை நிபந்தனைகள் போன்ற விபரங்களைக் கொண்டிருக்கும். விற்பனைத் தினசேரியின் மொத்தக்கூட்டுத்தொகை பேரேட்டில் விற்பனைக் கணக்கில் செலவிப்பக்கம் பதியப்படும். கடன்பட்டோரின் தேறிய தொகைகள் அவரவர் கணக்குகளில் வரவுபக்கம் பதியப்படும் விற்பனைத் தினசேரி 7/ பின்வரும் அமைப்பைக் கொண்டிருக்கும்.

| திகதி | பட்டியல் இல. | கொள்வனவாளர் | பண்டங்கள் பற்றிய விபரம் | | | பெறுமானம் | மொத். பெறு | பேரேடு இதழ் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விபரம் | அளவு | கூறுவிலை | | | |
| | | | | | | | | |

கடனுக்கு, விற்பனை செய்யும் நோக்கோடு வாங்கப்பட்ட பொருட்கள் ஏதேனும் காரணங்களுக்காக விற்பனை செய்தவருக்கு திருப்பி அனுப்பப்படுவதுண்டு. இதனைப் பதிவு செய்வதற்கு கொள்வனவு வருதிகள் தினசேரி ஆரம்ப ஏடாகப் பயன்படுகின்றது இது வெளித்திருப்பல் தினசேரி என்றும் அழைக்கப்படும். இதற்கு பயன்படும் முதனிலை ஆவணம் வரவு நோட்டு ஆகும். வரவுநோட்டு, கொள்வனவு செய்தவர் பொருட்களை விற்பனை செய்தவருக்கு திருப்பி அனுப்பும் போது கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்படுவதை அறிவிக்கும் நோக்கோடு தயாரிக்கப்படுகின்றது. வரவு நோட்டு வெளித்திருப்பப்பட்ட திகதி, வரவு நோட்டு தொடரிலக்கம், கம்பனியினதும், விநியோகஸ்தவரதும் பெயர் முகரி, விநியோகத்தவரின் பட்டியல் இலக்கம், திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களின் வகை, அளவு, விலை, திருப்பி அனுப்புவதற்கான கரரணம் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும் கொள்வனவு வருதிகள் தினசேரி பின்வரும் அமைப்பைக் கொண்டிருக்கும்.

| திகதி | வரவுநோட் | விநியோகஸ்தர் | பண்டங்கள் பற்றிய விபரம் | | | பெறு. | மொத். பெறு. | பேரேடு இதழ் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விபரம் | அளவு | கூறுவிலை | | | |
| | | | | | | | | |

இத்தினசேரியின் மொத்தக் கூட்டுத்தொகை வெளித்திரும்பல் கணக்கில் செலவுப்பக்கம் பதியப்படும். கடன் கொடுத்தோர் தேறிய தொகைகள் அவரவர் கணக்குகளில் வரவுப்பக்கம் பதியப்படும்.

கடனுக்கு விறபனை செய்யப்பட்ட பொருட்கள் பல்வேறு காரணங்களுக்காக கடன் பட்டோரால் திருப்பி அனுப்பப்படும் போது திரும்பி அனுப்பப்படும் பொருட்கள் சம்பந்தமான ஆரம்ப பதிவுகளைப் பதிவு செய்வதற்காக தயாரிக்கப்படும் ஆரம்பஏடு விற்பனை வருதிகள் தினசேரி ஆகும். இது உட்திரும்பல் தினசேரி எனவும் அழைக்கப் படும். இதனைத் தயாரிப்பதற்கு மூல ஆவணமாக செலவு நோட்டு பயன்படும். செலவு நோட்டு உட்திரும்பப்பட்ட பொருட்களின் பெறுமதியை கடன் பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டது என்பதனை அறிவிப்பதற்காகப் பயன்படுகின்றது. இதில் உட்திரும்பல் நடைபெற்ற திகதி, செலவு நோட்டு தொடலிலக்கம், வியாபார நிறுவனத்தினதும் கடன்பட்டோரினதும் பெயம் முகவரி, திருப்பப்பட்ட பொருட்களின் வகை, அளவு, பெறுமதி என்பன குறிப்பிடப்பட்டிருக்கும். இத்தினசேரியின் மொத்தக் கூட்டுத்தொகை உட்திரும்பல் கணக்கில் வரவில் பதியப்படும். தனிநபர் தேறிய தொகைகள் அவரவர் கணக்கில் செலவு வைக்கப்படும். விற்பனை வருதிகள் தினசேரி பின்வரும் அமைப்பைக் கொண்டிருக்கும்.

| திகதி | செலவு நோட் | கொள்வனவாளர் | பண்டங்கள் பற்றிய விபரம் | | | பெ.று. | மொத்தம் பெறு. | பேரேடு இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விபரம் | அளவு | கூடுவிலை | | | |
| | | | | | | | | |

பணவரவு, பணக்கொடுப்பனவு, மற்றும் கடன் கொள்வனவு கடன் விற்பனை, உட்திரும்பல் போன்றவை தவிர்ந்த ஏனைய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்யும் ஆரம்பஏடு பொதுத்தினசேரி ஆகும். இதனை எழுதுவதற்கு பட்டியல், கச்சாத்து, நேர அட்டவணை, போன்ற மூல ஆவணங்கள் பயன்படுத்தப்படும். ~~இது பின்வரும் அமைப்பைக் கொண்டது~~.

பொதுத்தினசேரியில் பதிவுகளை எழுதும்போது வரவுப் பதிவில் இருந்து $\frac{1}{2}$ அங்குலம் அல்லது 1,3செ.மீ இடைவெளி விட்டு செலவுப்பதிவை எழுத வேண்டும். இப்பதிவுகளின் கீழ் விளம்பல் எழுதப்பட வேண்டும். விளம்பல் என்பது பதிவு பற்றிய விபரம் ஆகும். இதனைப் பயன்படுத்துவதனால் சிக்கலான பதிவுகளை இலகுவாகப் பதிய முடிவதுடன் பேரேடுகளில் விடப்படும் தவறுகளையும் இலகுவில் திருத்தவும் முடிகின்றது. அத்துடன் தேவைப்படும் போது கொடுக்கல் வாங்கலின் விபரங்களை இதிலிருந்து பெற்றுக் கொள்ளவும் முடிகிறது.

பொதுத்தினசேரியின் வியாபார முயற்சியின் ஆரம்பப்பதிவுக்ள்; நிலையான சொத்துக்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்படல், நிலையான சொத்துக்கள் கடனுக்கு விற்பனை செய்யப்படல், செம்மையாக்கற் பதிவுகள், ஒழுங்குகளைத் திருத்தல் தொடர்பான பதிவுகள், பிறமாற்றீடு பற்றிய பகுதிகள், கொடுக்கல் வாங்கல் மூடும் பதிவுகள் போன்ற பதிவுகள் பதியப்படும்.

ஒரு வியாபார நிறுவனம் புதிதாக வியாபாரத்தை ஆரம்பிக்கும் பொழுதே அல்லது புதிதாக கணக்கீட்டு காலத்தொடரை ஆரம்பிக்கும் பொழுதோ இன்றைய நிறுவனத்தில் உள்ள சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தினசேதியில் பதிவு செய்தல் தொடக்கப் பதிவுகளைத் தினசேரியில் பதிவு செய்தல் எனப்படுகின்றது. இதனை மூலம் நிறுவனத்தின் மூலதனத்தைக் கணிப்பிட முடிகின்றது. இதற்கு கணக்கீட்டு சமன்பாடு உதவுகின்றது. கணக்கீட்டுச் சமன்பாடு:

சொத்துக்கள் = மூலதனம் பரிப்புகள்.

என்பதாகும்.

வியாபார நிறுவனங்கள் மீள்விற்பனைக்காக அன்றி நிறுவன தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இயந்திரங்கள், தளபாடங்கள், மோட்டார் வாகனங்கள், தட்டச்சு பொறிகள் போன்ற நிலையான சொத்துக்களைத் கொள்வன்வு செய்கின்றன, இவ்வாறு நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது கடன் கொள்வ்ன்வு எனின் இப்பதிவுகளைப் பதிவதற்கு பொதுத்தினசேரி முதன்மை ஏடாகப் பயன்படுகின்றது.

உ-ம் :-

01/01/1980 இல் ரேக்கா வியாபார 100,000/- பெறுமதியான இயந்திரத்தை மகாதேவா அன் கம்பனியிடம் கடனுக்குக் கொள்வனவு செய்து இதற்குரிய பதிவுகள் பொதுத்தினசேரியின் பின்வருமாறு இடம்பெறும்.

| திகதி | கர்சாந் இல. | விபரம் | பேரேடு இலக்கம் | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 1/1/80 | | இயந்திரக் கணக்கு | | 100 000 | |
| | | மகாதேவா அன் கம்பனி கணக்கு | | | 100 000 |
| | | [மகாதேவா அன் கம்பனியிடம் 100,000/- பெறுமதியான இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போது] | | | |

பின்னர் இப்பதிவுகள் பேரேடுகளுக்கு மாற்றப்படும்.

வியாபார நிறுவனங்கள் நிலையான சொத்துகளை கொள்வனவு செய்வது போல் மேலதிகமாக உள்ள நிலையான சொத்துகளையோ அல்லது நிறுவனத்தில் பயன்படுத்தப் படாத நிலையான சொத்துகளையோ விற்பனைசெய்யும் சந்தர்பம் உண்டு. இவ் நிலையான சொத்துகளை கடனுக்கு விற்பனை செய்யும் போது முதன்மை ஏடாக பொதுத்தினசேரியே பயன்படுகின்றது. நிலையான சொத்துகை விற்பனை செய்யும் போது அதன் பெறுமதியை முதலில் அச்சொத்தின் விற்பனைக்கணக்கிற்கு மாற்றுதல் வேண்டும் பின்பு விற்ற தொகையை பதிதல் வேண்டும்.

உ-ம் :-

2/2/82 இல் ரூபா நிறுவனத்திடம் உள்ள 50,000/- பெறுமதியான தளபாடத்தைப் ரூபி என்பவருக்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதற்குரிய தினசேரிப் பதிவுகள் :-

| திகதி | க.இ | விபரம் | பே.இ. | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 2/2/82 | | தளபாட விற்பனைக் கணக்கு | | 50 000 | |
| | | தளபாடக் கணக்கு | | | 50 000 |
| | | [50 000/- பெறுமதியான தளபாடத்தின் விற்பனைப் பெறுமதியை தளபாட விற்பனைக் கணக்கிற்கு மாற்றிய போது] | | | |
| | | ரூபி கணக்கு | | 50 000 | |
| | | தளபாட விற்பனைக் கணக்கு | | | 50 000 |
| | | [50 000/- பெறுமதியான தளபாடம் ரூபிக்கு விற்பனை செய்யப்பட்ட போது] | | | |

இப்பதிவுகள் பின்னர் பேரேடுகளுக்கு மாற்றப்படும்.

பொதுத்தினசேரி பிறமாற்றீடுப் பதிவுகளைப் பதிவு செய்வதற்கும் முதன்மை ஏடாகப் பயன்படுகின்றது. பிறமாற்றடு என்பது ஒரு வியாபார நிறுவனத்திடம் கடன்பட்டோரோ அல்லது வியாபார நிறுவனம் கடன் கொடுத்தோருக்கோ கொடுக்க வேண்டிய தொகைக்காக ஒரு சொத்தையோ அல்லது வேறு ஏதாவதையோ கொடுத்து கணக்குத் தீர்க்கப்படும் முறை ஆகும்.

உ-ம் :-

பிரவுன்ஸ் கம்பனி 200,000/- ஐ சில்வா அன்கம்பனிக்கு கொடுக்க வேண்டி இருந்தது. இதற்காக பிரவுன்ஸ் கம்பனி 1/6/90 அன்று தன்னிடம் உள்ள 200,000/- பெறுமதியான மோட்டார் வாகனங்களை கொடுத்து கணக்கு தீர்க்கப்பட்டது.

இத்தகவலை பிரவுன்ஸ் கம்பனியின் ஏடுகளில் பதியும்போது பொதுத்தினசேரிப் பதிவு பின் வருமாறு அமையும்.

| திகதி | க.இ | விபரம் | பே.இ. | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 1/6/90 | | சில்வா அன் கம்பனி கணக்கு | | 200 000 | |
| | | மோட்டார் வாகனக் கணக்கு | | | 200 000 |
| | | [சில்வா அன் கம்பனிக்கு கொடுக்க வேண்டிய 200 000/- இற்கு மோட்டார் வாகனம் கொடுக்கப்பட்ட போது] | | | |

இதே தகவலை சில்வா அன் கம்பனியின் ஏடுகளிலும் பதிவு செய்யலாம். இவ்வாறு பதிவு செய்யும் போது பொதுத்தினசேரிப்பதிவு பின்வருமாறு அமையும்.

| திகதி | க.இ | விபரம் | பே.இ | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 1/6/90 | | மோட்டார் கணக்கு | | 200 000 | |
| | | பிரவுண்ஸ் கம்பனி கணக்கு | | | 200 000 |
| | | [பிரவுண்ஸ் கம்பனியிடம் இருந்து பெற வேண்டிய 200 000/- பெறுமதிக்கு மோட்டார் வாகனம் பெறப்பட்டது] | | | |

வியாபார நடவடிக்கைகளின் பதிவுகளை தினசேரியில் இருந்து பேரேடுகளுக்கு மாற்றும்போது ஒரு சில கொடுக்கல் வாங்கல்களைப் பதியாது விடுதல் உரியகாலப்பகுதிக் கேற்ப வகுக்கப்படாமை போன்ற வழுக்களைச் செம்மைப்படுத்தும் நோக்குடன் கணக்குப் பதிவேடுகளில் செய்யப்படும் பதிவுகள் செம்மையாக்கற் பதிவுகள் எனப்படும். இதற்கும் பொதுத் தினசேரி பயன்படுகின்றது.

இவ்வாறாக தினசேரிகள் வியாபார நிறுவனத்தின் கணக்குப்பதிவியலில் முக்கியத்துவம் பெறுகின்றன. தினசேரிகளில் பொதுத்தினசேரி காரணங்களுக்காக ஏனைய தினசேரிகளிலிருந்து வேறுபடுகின்றது. தினசேரிகள் கணக்குப் பதிவியலுக்கு மிகவும் முக்கியமானவையாகும்.

கொள்ளல் கொடுத்தற் கணக்கும்
<u>வருமானச் செலவுக் கணக்கும்</u>

சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளி கிடைக்கின்ற பலாபலன்களை அறிந்து கொள்வதற்காக நிதியாண்டு முடிவில் கின்ற கணக்குகளே கொள்ளல் கொடுத்தற்கணக்கும் வருமானச் செலவுக் கண ஆகும்.

இந்நிறுவனங்களின் நிதியாண்டில் கிடைக்கின்ற காசு வருமானங்களும் காசு மூலமான கொடுப்பனவுகளும் பதிவு செய்யும் கணக்கே கொள்ளல் கொடுத்தற் கணக்கு ஆகும். இக்கணக்கு காசேட்டினை ஒத்ததாகும். காசேட்டின் வரவுப் பக்க நிரலானது கொள்ளல் கொடுத்தற் கணக்கின் கொள்ளல் கொடுத்தற் கண்க்கில் கொடுத்தல் பக்கத்திலும் பதியப்படும். சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்கள் ஆவன:- மன்றங்கள், ஒன்றியங்கள், கழகங்கள், சங்கங்கள், நிலையங்கள், சபைகள் என்பனவற்றைக் குறிக்கும். கொள்ளல் கொள்ளல் கொடுத்தற் கணக்கைப் பயன்படுத்தியே முடிவுக் கணக்குகள் செய்யப்படுகின்றன.

சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்களில் வருமானச் செலவுக் கணக்கே முடிவுக் கணக்கு ஆகும். இக் கணக்கு இலாபநட்டக் கணக்கை ஒத்ததாகும். இக் கணக்கில் வருமானங்கள் செலவிலும் செலவினங்கள் வரவிலும் பதியப்படும் இக் கணக்கில் குறிக்கப்பட்ட நிதியாண்டிற்குரிய வருமானங்களையும் செலவினங்களையும் மாத்திரமே கவனத்தில் கொள்கிறது. வருமானச் செலவுக் கணக்கின் பிரதான வமுமானமாக சந்தா கணிக்கப்படுகின்றது. சந்தா என்பது சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்களில் உறுப்புரிமை பெறுவதற்காக உறுப்பினர்களால் வழங்கப் படுகின்ற திறு தொகைப்பணமாகும். இது மாதாந்த அடிப்படையிலோ தவணை அடிப்படையிலோ செலுத்தப்படலாம். இக்கணக்கின் விளைவாக இலாபநட்டக் கணக்கின் மூலம் கிடைக்கும் தேறியலாபமானது இங்கு செலவிலுங் கூடிய வருமானமும் தேறிய நட்டத்திற்கும் பதிலாக வருமானத்திலும் கூடிய செலவும் விளைவாகக் கிடைக்கின்றது. இக்கன்க்குகளை அந்நிறுவனங்களின் பொருளாளரே செய்வார்.

இந்நிறுவனங்களில் காணப்படுகின்ற சொத்துக்களையும் பரிப்புக்களையும் நிதியாண்டு ஆரம்பத்தில் கணக்கில் பதிந்து கணிக்கப்படுவதே திரண்ட நிதியாகும்:. இலாப நோக்கம் கொண்ட நிறுவனங்களில் மூரதனம் என அழைக்கப்படும் தொகையே இங்கு திரண்ட நிதியாக அழைக்கப்படுகின்றது. திரண்ட நிதியைக் கணிப்பதற்காகத் தயாரிக்கபடுகின்ற கூற்றே ஆரம்ப நிலமைக் கூற்று எனப்படும்.

.வருமானச் செலவுக் கணக்கைத் தயாரிக்கும் போது சந்தாப் பணம் கணிக்கும் முறை பின்வருமாறு அமையுமு நிதியாண்டின் அங்கத்தவர் எண்ணிக்கை அங்கத்தவப் பணம் அல்லது நிதியாண்டிற்காகக் கிடைத்த தொகை சென்ற ஆண்டு இந்த ஆண்டிற்காகத் தந்த தொகை அல்லது கொள்ளல் கொடுத்தற்கணக்கிலுள்ள தொகை சென்ற ஆண்டு இந்த ஆண்டுக்காகத் தந்த தொகை- இந்த ஆண்டு சென்ற ஆண்டுக்காகத் தந்த தொகை- அடுத்த ஆண்டுக்காகத் தந்த தொகை.

வருமதி சந்தா கணிக்கும் முறையாவது நிதியாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய தொகை - கிடைத்த தொகை ஆகும். முற்பண சந்தா கணிக்கும் முறையாவது நிதியாண்டில் கிடைத்த தொகை-நிதியாண்டிற்குரிய தொகை ஆகும்.

கொள்ளல் கொடுத்தற் கணக்கு காசேட்டைப் போன்றது ஆனால் வருமானச் செலவுக் கண்க்கு இலாப நட்டக்கணக்கைப் போன்றது. கொள்ளல் கொடுத்தற் கணக்கு ஆரம்ப மீதி உடன் ஆரம்பிக்கப்படும். ஆனால் வருமானச் செலவுக்கணக்கு அப்படியில்லை. கொள்ளல் கொடுத்தற் கணக்கில் சென்ற ஆண்டு, நடைமுறை ஆண்டு எதிர்வரும் ஆண்டு ஆகியவற்றிற்குரிய தொகைகள் பெறப்பட்டால் அவை பதியப்படும். ஆனால் வருமானச் செலவுக் கணக்கில் நடைமுறையாண்டிற்குரிய தொகைகளே பதியப் படும். கொள்ளல் கொடுத்தற் கணக்கின் இறுதி விளைவு பெறுவனவுகள் கொடுப்பனவுகளும் சமனாக இருக்கும் அல்லது மீதியாக இருக்கும் ஆனால் வருமானச் செலவுக் கணக்கின் இறுதி விளைவு சமனாக இருக்கும்அல்லது வருமானத்திலும் கூடிய செலவு செலவிலுங்கூடிய வருமானம் கிடைக்கும்.

" வி. விநோதினி."

S. Matheesan